58893

மகா அலெக்ஸாந்தர்

V57,1y7 C543
N33
58893

உ

# மகா அலெக்ஜாந்தர்

OFFICE OF THE
12 JUL 1943

வித்துவான்
ச. கு. கணபதி ஐயர்
எழுதியது

"ஆனந்த போதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியார் அவர்கள்
வெளியிடப்பெற்றது.

1

Rights Reserved]

V51,147 C54.3
N33

உ

# முகவுரை

—:(o):—

கல்வி, தறுகண்மை, புகழ், கொடை என்னும் நான்கு திறத்திலும் சிறப்பெய்து தலை வீரத்தின்பாற் படுத்திப் பண்டைத் தமிழ் இலக்கண நூலார் கூறிப் போந்தனர். அதனை யொட்டி ஆராய்ந்தால் கல்வி மிக்கோரும், தறுகண்மை மிக்கோரும், புகழ் மிக்கோரும், கொடைக் கை வள்ளல்களும் வீரர்களென்றே கூறப்படும் தகுதி வாய்ந்தவர்கள் என்பது அறியப்படும். எனினும் சிறப்பாக வீரம் என்பது தறுகண்மைக்கே வழங்கப்பெறுகின்றது. பிறரால் அஞ்சுதற் குரியவற்றின் கண்ணும் அஞ்சாமையே அஃதாகும். ஆகவே தறுகண்மை மிக்கார் இந் நால் வகை வீரரிற் சிறந்தோராவர்.

உலகிலுள்ள பல நாட்டினர், தங்கள் சரித்திரத்தை எழுதி வருகையி[illegible] மேற் கூறிய நால்வகை வீரர்களது நிலைக்கள [illegible]ள் இருந்தமையைப் புலப்படுத்தி அவர்கள் [illegible]ரிக்கின்றனர். தறுகண்மை மிக்க [illegible] பல மொழிகளிற் காப்பியங்க [illegible]லியட், ஒடிஸ்ஸி, இனியம் [illegible]ணம், பாரதம் முதலியனவும் [illegible]ள் வரலாறுகள், என்றும்



யாவரும் பொன்னேபோற் போற்றும் தகுதி வாய்ந்தவை.

உலகிற் பல நாடுகளைத் தம் அடிக் கீழ்ப்படுத்தி என்றும் அழியாத புகழ்க்கு ஆதாரமாகிய வீரத்தை வெளிப்படுத்தி வாழ்ந்துவந்த மகா அலெக்ஜாந்தர் உலகம் புகழும் வீரர்களுள் ஒருவர். அவருடைய வரலாறு யாவரும் அறிந்து கொள்ளற் குரியது. மெய்வீரர்கள் வரலாற்றையறிதலால் இளைஞர்கள் நெஞ்சத்திண்மை பெறுவர். அதனால் எண்ணிய எண்ணியாங்கு எய்தும் வன்மை பெறுவர்.

இச் சிறு நூல் அலெக்ஜாந்தரது வீரவாழ்வின் வரலாற்றைச் சுருங்கிய அளவில் உரைப்பது எனினும், அவரது வரலாற்றில் அமைந்துள்ள சிறந்த நிகழ்ச்சிக ளெல்லாவற்றையும் இதன்கட் காணலாம். மாணவர்களுக்கென்று எழுதப்பட்டதாதலின், இப் புத்தகத்தின் நடை மிகவும் எளியதாகவே அமைக்கப்பட்டுள்ளது. எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியராகிய அலெக்ஜாந்தரது வீரத்தையும், பிற இயல்புகளையும் மாணவர்கள் அறிந்துகொள்ளுதற்கு இப்புத்தகம் ஓர் எளிய கருவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

திருவல்லிக்கேணி, 10—3—1933. } ச. கு. க.

உ

## பொருள் அடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| I | கிரீஸ் தேசமும் மாசிடோனியாவும் .... .... | 1 |
| II | இளமைப் பருவம் .... .... .... .... | 5 |
| III | மனஸ்தாபமும் அரசு பெறுதலும் .... .... | 16 |
| IV | முடி சூடிய முதலாண்டு .... .... .... | 24 |
| V | பாரசீகப் படையெடுப்பு .... .... .... | 33 |
| VI | பாரசீகத்தை அடிப்படுத்தல் .... .... .... | 41 |
| VII | ஜீலம் சண்டை .... .... .... .... | 48 |
| VIII | பாபிலோனுக்குத் திரும்பல் .... .... .... | 57 |
| IX | இறுதிக் காலம் .... .... .... .... | 68 |
| X | அலெக்ஜாந்தருக்குப் பின் கிரேக்க ராஜ்யத்தின் கதி.... .... | 73 |
| XI | அலெக்ஜாந்தரைப்பற்றிய சில குறிப்புக்கள் .... | 76 |
| XII | முடிவுரை .... .... .... .... | 84 |


JUL 1937

உ

# மகா அலெக்ஜாந்தர்

## I


## கிரீஸ் தேசமும் மாசிடோனியாவும்

ஐரோப்பாக் கண்டத்தின் தென்பக்கலிலே மத்திய தரைக்கடலைச் சார்ந்து **கிரீஸ்** என்று ஒரு தேசம் இருக்கின்றது. அதில் வாழ்ந்து வந்த மக்கள் **கிரேக்கர்கள்** எனப்படுவார்கள். இவர்கள் ஒரு சமூகத்தார் அல்லர்; ஓர் ஆட்சிக்கு உட்பட்டவர்கள் அல்லர்; அச் சிறிய நாடு பல பிரிவுகளாகப் பகுக்கப்பெற்றுப் பல அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. தனி நகரங்கள் ஜன ஆட்சி முறையைக் கைக்கொண்டு ஒழுகின. கிரேக்கரிடம் ஒற்றுமை என்பதே கிடையாது. எப்பொழுதும் இவர்களுக்குள் உள்நாட்டுக் குழப்பங்கள் இருந்துகொண்டே இருக்கும். பொறாமைப் பேய் இவர்களைப் பல தீமைகளுக்கு இரையாக்கி வந்தது. அந்நியர் எவராவது கிரீஸ் தேசத்தின்மேல் படையெடுத்து வந்த காலங்களில் கிரேக்கர்கள் சமூக உணர்ச்சியோடு ஒன்று சேர்ந்ததில்லை; தம்மில் ஒரு பிரிவினரை ஒழிக்க மற்றொரு பிரிவினர் தமக்கு உதவியாக அந்நிய நாட்டவரை அழைத்த சந்தர்ப்பங்களும் உண்டு. பொதுப் பகைவன் ஒருவனை ஒழிக்கப் பல பிரிவினர் ஒன்று சேர்ந்த சில சந்தர்ப்பங்கள் இருந்தனவேனும், அப் பொதுப் பகைமை தீர்ந்தவுடன் இவர்கள் கூட்டுறவும் தீர்ந்துவிடுவது வழக்கம்.

மகா அலெக்ஜாந்தர் இத்தகைய கிரேக்கர்களை ஒன்று படுத்த முயன்றார். அம் முயற்சியை முற்றும் செய்து பயன் பெறுதற்கு அவர் நெடுங்காலம் ஜீவித்திருக்கவில்லை; வெண்ணெய் திரண்டுவரும் சமயத்தில் தாழி உடைந்தாற் போலத் திக்கு விஜயம் முடிந்து சமூக அரசியற் சீர் திருத்தங்கள் செய்துவந்த காலத்தின் இடையில் தம் முப்பத்திரண்டாம் பிராயத்தில் இவ்வுலக வாழ்வை அவர் நீத்தார். அவர் இன்னும் பல ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்திருப்பரேல் உலக சரித்திரம் வேறு போக்கை ஓட்டியதாக இருந்திருக்கும். கிரேக்க ஆட்சியும் அவருக்குப் பின் ஒரு நூற்றாண்டில் அழிந்திராது.

கிரீஸ்தேசம் மலைகளும் பள்ளத்தாக்குகளுமாக உள்ள ஒரு பிரதேசம். கிரேக்கர்கள் தனித்தனி அரசாட்சிகளை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தமைக்குக் காரணம் அத்தகைய இயற்கை யமைப்பே யாகும். ஒரு தேசத்தின் இயற்கையமைப்புக்கும் சரித்திரத்திற்கும் தொடர்புண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. கிரீஸ்தேசம் நல்ல வளம் படைத்த நாடன்று. பொதுவாக வியவசாயத்திற்கு ஏற்ற தேசமென்று சொல்வதற்கு இல்லை. அதனால் அங்கு வாழ்பவர்கள் உணவின்பொருட்டு வேறு வழிகளைத் தேட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். பழைய கிரேக்கர்கள் வியாபாரத் துறையிலும், அந்நிய நாட்டிற் குடியேறித் தம் அரசாட்சியைப் பரப்புவதிலும் முன்னணியில் நின்றார்கள். அவர்களை அத்துறைகளிலே புகுமாறு தூண்டியது அந் நாட்டின் நிலவளக் குறைவே என்பதிற் சந்தேகமில்லை.

கிரீஸ்தேசம் நிலவளத்திலே குறைந்தது எனினும் நாகரிகத்திலே இந்தியாவைப்போல் மற்றெல்லா நாடுகளைக்



மகா அலெக்ஜாந்தர்

காட்டிலும் அக்காலத்தில் முதன்மைபெற்று விளங்கியது. பலகலைகள் கிரீஸ் தேசத்திலிருந்தே புறநாடுகளுக்குப் பரவலாயின. சிற்பம், தத்துவ சாஸ்திரம், அரசியல் நெறி, பொருளாதாரம் முதலியவற்றை முதலில் உலகிற்கு எடுத்துக் காட்டியது கிரீஸ்தேசமே.

கிரீஸ் மலைநாடு ஆதல் பற்றிக் கிரேக்கர்கள் சிறந்த உடல் வலிமையையும் அதற்கேற்ற தைரியத்தையும் இயற்கையாகவே பெற்றிருந்தார்கள். மித சீதோஷ்ண நிலை அவர்கள் சுறுசுறுப்புள்ளவர்களாக இருக்கக் காரண மாயிற்று.

கிரீஸ் தேசத்திற்கு அருகில் இப்பொழுது ஐரோப்பிய துருக்கி என்று வழங்கும் பிரதேசத்தில் அலெக்ஜாந்தர் தோன்றினர். இப் பிரதேசத்திற்கு அக் காலத்தில் **மாசிடோனியா** என்னும் பெயர் வழங்கியது. இதுவே அலெக்ஜாந்தரின் பிதுரார்ஜித ராஜ்யமாகும்.

மாசிடோனியர்கள் யுத்தப் பிரியர்கள்; ஒருவருக்கு அடங்கி நடக்க விரும்பாதவர்கள்; தங்கள் அரசனும் சில காரியங்களைத் தானகச் செய்ய இசையாதவர்கள். இவர்களைக் கிரேக்கர்கள் தம் இனத்தவர் என்று கருதாமல் ‘மிலேச்சர்’ என்றே கருதுவார்கள். கிரேக்கர் அல்லாத எவரும் கிரேக்கர்களுக்கு மிலேச்சர்களே. மாசிடோனியர்களை மிலேச்சர் என்று கருதி வந்ததனல் கிரேக்கர்களுக்கு மாசிடோனியாவின்மேல் இயற்கையாகவே வெறுப்பு இருந்து வந்தது.

மாசிடோனியர் வடபிரிவினர் தென்பிரிவினரென இருவகைப்படுவர். தென்பிரிவினர் கிரேக்கர்களே. இப் பிரி

வினரைச் சேர்ந்தவர்கள் பெல்லா என்பதைத் தலைநகராகக் கொண்டு மாசிடோனியாவை ஆண்டுவந்தார்கள். வடபிரிவினர் கலப்புச் சாதியார். அவர்கள் நேராக அரசனது ஆணைக்கு அடங்கினவர்கள் அல்லர்; ஆங்காங்குள்ள சிறு சிறு தலைவர்களுக்கு உட்பட்டிருந்தனர். இந்தத் தலைவர்களால் அரசனுக்கு அடிக்கடி இடையூறு நேரிடுவதுண்டு.

மாசிடோனியாவின் வடக்கே பெயோனியாவும், வடகிழக்கே திரேஸூம், தெற்கே கிரீஸூம், வடமேற்கே இலிரியாவும் எல்லைகளாக இருந்தன. சுற்றுப் புறங்களில் உள்ள யாவரும் மாசிடோனியாவின் விரோதிகள். இந்நான்கு ராஜ்யங்களில் இலிரியாவும் திரேஸூம் மாசிடோனியாவின் வீழ்ச்சியைப் பற்றியே கண்ணும் கருத்துமாக இருந்தன. இவைகள் நேராக அடிக்கடி மாசிடோனியாவுடன் போர் செய்து வந்தது மல்லாமல் வட பிரிவினரைத் தங்கள் அரசனுக்கு விரோதமாய்க் கலகம் செய்யத் தூண்டிக்கொண்டு மிருந்தன.

மாசிடோனியா ஓங்க வேண்டுமானால் அதற்கு அரசனாக வருகின்றவன் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டியவனான். அவற்றுள் முதலாவது வடபிரிவினரையும் தென்பிரிவினரையும் ஒன்று சேர்த்து அவர்களுக்கு ஒற்றுமையுணர்ச்சியைப் புகட்ட வேண்டும்; மற்றொன்று இலிரியர்களையும் திரேஸர்களையும் கடுமையாகத் தண்டித்து மாசிடோனியாவிற்கு மாறாக எழாதபடி ஒரு பாடம் கற்பிக்க வேண்டும். இவ்விரு காரியங்களையும் மேற்கொள்ளத் தக்க அறிவும் ஆற்றலும் வாய்ந்த அரசன் ஒருவன் நெடுநாள் வரையில் தோன்றவில்லை. இவ்விரண்டு வழிகளையும் உணர்ந்துகொண்டு இவற்றின் மூலமாக மாசிடோனியாவை முன்னுக்குக் கொண்டு



வந்த அரசர் அலெக்ஜாந்தரின் தந்தையாகிய பிலிப் என்பவரே ஆவர். அவரால் மாசிடோனியா உயர்வடைந்த செய்தி அடுத்த அத்தியாயத்திற் கூறப்படும்.

---

# II

## இளமைப் பருவம்

அலெக்ஜாந்தரின் தந்தையாராகிய பிலிப் ஓர் உத்தம வீரர்; சிறந்த ராஜ தந்திரி. அவருடைய இளமைப் பருவத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. மாசிடோனியாவின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதும் அத்தேசத்தில் பல குழப்பங்கள் நிறைந்திருந்த காலத்தில் இளம் பிராயத்தினனாக இருந்த ஓர் அரசிளங் குமரனுக்குப் பிரதிநிதியாக இருந்து வந்தார் என்பதும் சரித்திர வாயிலாக அவரைப்பற்றி நாம் அறிந்த விஷயமாகும். ராஜப்பிரதிநிதியாக ஏற்பட்ட அவர் சில ஆண்டுகளில் எப்படியோ அரசராகிவிட்டார்.

அவர் பட்டத்தை வகித்தபோது மாசிடோனியாவைச் சுற்றிலும் பல பகைவர்கள் இருந்தனர். வெளி நாட்டு விரோதம், உள் நாட்டில் வடபிரிவினரின் தொந்தரவுகள், அரசுரிமையை விரும்பிய கலகக்காரச் சுற்றத்தாரின் வஞ்சகமான சூழ்ச்சிகள் முதலிய பல இடையூறுகள் ஓரே சமயத்தில் பிலிப்பைச் சூழ்ந்துகொண்டன. இருந்த போதிலும் பிலிப் அஞ்சவில்லை. சமயத்துக்கேற்ற தந்திரம் அவரை எல்லாத் துன்பங்களிலுமிருந்து நீக்கிவிட்டது. அவர் வெளிநாட்

டுப் பகைவரைப் பணங்கொடுத்து மயக்கிவிட்டார். வட பிரிவினர் யுத்தப் பிரியர்கள் ஆதல்பற்றி அவர்களுக்குப் புதிய போர் முறையைக் கற்பித்தார். அதனால் பிலிப்புக்கு அவர்களுடைய அன்பும் ஆதரவும் எளிதிற் கிடைத்து விட்டன. அவர் இருபிரிவினரையும் ஒன்றுபடுத்தி அவர்களுக்குத் தேச பக்தியை உண்டாக்கிவிட்டார். பெரிய ஆபத்துக்கள் இரண்டும் ஒருவாறாக ஒழிந்துவிடவே உள்நாட்டுக் கலகக்காரர்களை அடக்குவது அவருக்கு அரிதாகத் தோன்றவில்லை. இவ்வாறாகப் பிலிப்புக்குத் தொடக்கத்திலிருந்த துன்பங்கள் தீர்ந்துவிட்டன.

பிறகு அவர் தமது ராஜ்யத்தை யுத்தங்கள் மூலமாய் விஸ்தாரப்படுத்தினார். பக்கத்து ராஜ்யங்களின் பாகங்களைத் தமது ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். அவருடைய ராஜ தந்திரம் மெச்சத் தகுந்தது. ஒரு சமயம் கிரேக்கர்களில் இருவகையினர் தம்முள் மாறுபட்டுச் சண்டை செய்தார்கள். ஒரு கட்சியினர் தமக்கு உதவி செய்யும்படி பிலிப்பை வேண்டினர். பிலிப் அச்சமயம் பேசாமல் இருந்துவிட்டார். சண்டையில் இருதிறத்தாரின் பலமும் குறைந்த பின் தாம் அவர்களை எளிதில் வென்றுவிடலாமென்று எண்ணியே பிலிப் அப்பொழுது சும்மா இருந்து விட்டாரென்று தெரிகிறது.

கிரேக்கர்கள் யாவரும் பிலிப்பை வெறுத்து வந்தார்கள். இவ் வெறுப்புக்குக் காரணம் பிலிப் கிரேக்க வமிசத்தவர் அல்லர் என்று அவர்கள் எண்ணினமையே யாகும். அவர்கள் தம் வெறுப்பைப் போரின் மூலமாகப் பல சமயங்களிற் காட்டினர். அப்போரின் முடிவுகளில் எல்லாம் பிலிப்பே வாகை



சூடினார். அதனால் அவர்கள்பாற் பொறாமை வளர்ந்து கொண்டே வந்தது.

பிலிப்பை ஜன்ம விரோதியாகக் கருதி வந்தவர்கள் ஆதன்ஸ் நகரவாசிகளே. ஆதன்ஸ் என்பது ஒரு கிரேக்கக் குடியரசு நகரம். அது கிரேக்கக் கலைகளுக்கும் பிற சிறப்புகளுக்கும் நடுநாயகமாக விளங்கியது. கலைகள் முதலியவற்றின் சிறப்புக்குக் காரணமாயிருந்த ஆதன்ஸைப் பகைத்துக் கொள்ளப் பிலிப்புக்கு இஷ்டமில்லை. ஆயினும் ஆதன்ஸ் வாசிகள் அவரைச் சும்மா இருக்க விடவில்லை. அவர்கள் பல அரசர்களைப் பிலிப்புக்கு விரோதமாகத் தூண்டிக்கொண்டேயிருந்தனர். அக்காலத்தில் ஆதன்ஸில் திமாஸ்தனீஸ் என்று ஒரு பெரிய பிரசங்கியார் இருந்தார். அவர் தம் பிரசங்கங்களால் எத்தகைய கல்மனத்தையும் கரைத்துத் தம் வழியில் திருப்பக்கூடிய சக்தி வாய்ந்தவர். அவர் பிலிப்பை முற்றும் வெறுத்தார். அவரால் பிலிப்புக்கும் பிற்காலத்தில் அலெக்ஜாந்தருக்கும் அநேக துன்பங்கள் ஏற்பட்டன. ஆதன்ஸை முற்றிலும் ஒழித்துவிடும் வல்லமை தந்தையாரிடத்திலும் மைந்தரிடத்திலும் இருந்தது. எனினும் பிலிப்பேனும் அலெக்ஜாந்தரேனும் ஆதன்ஸுக்கு ஒரு கெடுதியும் செய்தவர் அல்லர்.

பிலிப்புக்கு மனைவிமார் பலர் இருந்தனர். அவர்களுள் மூத்தவள் ஒலிம்பியஸ் என்ற பெயரினள்; உயர் குடியில் தோன்றியவள். அவள் வயிற்றில் உதித்தவர் அலெக்ஜாந்தர் ஒருவரே.

அலெக்ஜாந்தர் கி. மு. 356-இல் உதித்தார். குழந்தை பிறந்த செய்தி பிலிப்புக்கு எட்டியபோது சில நல்ல நிமித்தங்கள் நிகழ்ந்தன. மூவர் பிலிப்பைக்காண வாயிலிற் காத்துக்

கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர், மாசிடோனியர்கள் இலிரியர்களை வெற்றிகொண்டு விட்டதாகக் கூறினார். மற்றொருவர் **ஒலிம்பிக்** விளையாட்டுப் பந்தயத்தில் பிலிப்பின் குதிரை ஜயித்து விட்டதாகச் சொன்னார். வேறொருவர் ஒலிம்பியஸுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்திருப்பதாகக் கூறினார். அன்று பிலிப் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

அக்காலத்தில் கிரீஸ் தேசத்தில் **அரிஸ்டாடில்** என்னும் ஒரு தத்துவ சாஸ்திரி இருந்தார். அவருடைய புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. அவர், பொறுமைக் களஞ்சியமென்று புகழ்பெற்ற **ஸாக்ரடீஸின்** மாணவராகிய **பிளாடோ** என்பவரின் மாணவராவர். பிலிப்புக்கும் அரிஸ்டாடிலுக்கும் நெருங்கிய நட்பு இருந்தது. பிலிப் தமக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறதென்று அரிஸ்டாடிலுக்குத் தெரிவித்த விதம் இங்கே எழுதத் தகுந்ததொன்றாகும். தமக்கு ஓர் ஆண் குழந்தை அரிஸ்டாடில் வாழ்ந்துவந்த காலத்திற் பிறந்தது தமது அதிர்ஷ்டமே என்றும், அக்குழந்தையை விருத்திக்குக் கொண்டு வரவேண்டியது அந்தத் தத்துவ சாஸ்திரியாரின் கடமையென்றும் பிலிப் அவருக்குக் கடிதம் எழுதினார்.

அலெக்ஜாந்தர் பிறந்த அன்று **பாரசீகத்தில்** ஓர் உற்பாதம் நிகழ்ந்தது. பைத்தியம் பிடித்த ஒருவன் அழகிய அரண்மனை ஒன்றைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டான். அவன் அவ்வாறு செய்யக் காரணமென்னவென்று விசாரித்தபோது, அப்படிச் செய்தது தனக்கு எந்தவழியிலாவது புகழ்வர வேண்டுமென்றேதானென்றும் இனி உலகம் தன் பெயரை மறக்க மாட்டாதென்றும் கூறினான். அப்



பொழுது சோதிடர்கள் அப்பைத்தியக்காரனது செயல் பாரசீக ராஜ்யத்தின் அழிவுக்கு அறிகுறி என்றும், அந்த ராஜ்யத்தை வெற்றி கொள்ளக் கூடியவர் அதே சமயத்தில் உலகத்தின் எந்தப் பாகத்திலேனும் தோன்றியிருக்க வேண்டுமென்றும் கூறினார்கள்.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதற்கு இணங்கப் பிற்காலத்திலே ஒருவர் பெரியவராக விளங்குவாரென்பதை அவர்தம் இளமைப் பருவத்துச் செயல்களைக்கொண்டு கூறிவிடலாம். உலக முழுமையும் வெற்றி கொண்ட மகா அலெக்ஜாந்தரின் இளமைப் பருவத்தைப் பற்றி அறிந்து கொள்ள நாம் அவாவுடையவர்களாக இருப்பது ஆச்சரியமன்று.

அலெக்ஜாந்தர் இளமை முதற்கொண்டே சுறுசுறுப்பும் விடா முயற்சியும் உள்ளவராக விளங்கினார். தாம் ஒரு காரியம் செய்ய வேண்டுமென்று நினைத்தால் அதைச் செய்து முடிக்கும் வரையில் அதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருப்பார். இன்றைக்குச் செய்ய வேண்டியவற்றை நாளைக்குச் செய்வோம் என்று சொல்லிச் சோம்பித்திரியும் குணம் அலெக்ஜாந்தரிடம் என்றும் இருந்ததில்லை. காரியங்களைச் செய்வதில் விரைவுடைமை இவரிடம் இயற்கையாகவே அமைந்திருந்தது. இக்குணத்தை அலெக்ஜாந்தர் பல முறை வெளிப்படுத்தியுள்ளார். இவர் பட்டத்திற்கு வந்த மறு வருஷம் ஆசியாவின்மீது படையெடுத்துச் செல்ல எத்தனிக்கையில் சில பெரியோர்கள், "அவ்வளவு பெரிய ராஜ்யத்தின்மீது நீங்கள் இந்தச் சிறு பிராயத்திற் படையெடுத்துச் செல்வது உசிதமன்று" என்று கூறினார்கள். அதற்கு அலெக்ஜாந்தர், "அதனால் ஒரு கெடுதியும் ஏற்பட்டுவிடாது. விரோதி தயா

ராவதற்குள் மிக்க விரைவாக யுத்தரங்க விஷயங்களைத் தயாரித்துக் கொள்ளக் கூடியவன் நான்" என்று பதில் கூறினார். உண்மையாக எல்லாப் போர்களிலும் விரைவுடைமையே இவருக்கு வெற்றியளித்தது என்று கூறுவதை ஒருவரும் மறுக்க முடியாது.

விளையாட்டு விஷயங்களில் அலெக்ஜாந்தருக்கு அளவற்ற பிரியம் இருந்து வந்தது. சாதாரணமான பந்தயங்களை இவர் வெறுத்தார். துணிகரமான முரட்டு விளையாட்டுக்களிலேதான் இவருக்கு விருப்பம் அதிகம். வேட்டையாடல், மற்போர் செய்தல், நீந்துதல், செங்குத்தான மலைகளின்மேல் அநாயாஸமாக ஏறுதல் முதலியவற்றை இவர் பொழுது போக்காகக் கொண்டொழுகினார். குதிரை யேற்றத்தில் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் அக்காலத்தில் இலர் என்றே கூறலாம்.

ஒருநாள் ஒருவர் பிலிப்புக்கு ஒரு குதிரையைக் காணிக்கையாகக் கொடுத்தார். அக் குதிரை அசுவ சாஸ்திரத்திற் கூறப்பட்ட எல்லாவித இலட்சணங்களும் பொருந்தியதாய் இருந்தது. ஆனால் அக்குதிரையை அடக்கியாள ஒருவராலும் முடியவில்லை. பிலிப் அதைச் சிலநாள் வைத்திருந்து பார்த்து விட்டு அதனால் தமக்குப் பயன் ஒன்றும் கிடையாதென்றெண்ணி அதனை உரியவரிடமே அனுப்பிவிடக் கட்டளையிட்டார். அச்சமயம் அலெக்ஜாந்தர் பிலிப்பின் சமீபத்தில் இருந்தார். இவர் தம் தந்தையாரின் செயலைக் கண்டு, "இத்தகைய நல்ல குதிரையை நாம் இழந்து விடுவதா! இதைப் போன்ற உத்தம சாதி அசுவங்கள் கிடைப்பது அரிதாயிற்றே!" என்று தம் தந்தையாரிடம் கூறினார். அதற்குப் பிலிப், "உனக்கு எல்லாம் தெரிந்து விட்டதுபோல் பெரிய



வர்கள் அபிப்பிராயத்திற்கு மாறாகப் பேசுகின்றாய்!" என்று சற்றுச் சினந்து கூறினார். உடனே அலெக்ஜாந்தர் தாம் அக் குதிரையின்மேல் ஏறிச் சவாரிசெய்து காட்டுவதாகக் கூறி அதனை வாங்கிக் கொண்டார். அது தன் நிழலைக் கண்டு பயந்து இடக்குச் செய்து வந்தது. இவ் விஷயத்தை அலெக்ஜாந்தர் நுட்பமாக அறிந்து கொண்டு அந்த அச்சத்தை நீக்கி அதனை மெதுவாகத் தட்டிக்கொடுத்து ஊர்ந்து வந்தார். இச் செயல் நடந்தபோது இவருக்குப் பிராயம் பதினைந்து. இச்சம்பவம் மாசிடோனியர்களுக்கு அலெக்ஜாந்தரின் மீது நிரம்ப அன்புண்டாகக் காரணமாயிருந்தது. பிலிப் தம் குமாரர் செயலைக் கண்டு மகிழ்ந்து, "அப்பனே, மாசிடோனியா உன் வல்லமைக்குப் போதிய ராஜ்யமன்று" என்று கூறியதாகத் தெரியவருகிறது.

ஏழு அல்லது எட்டாம் வயது முதற்கொண்டே அலெக்ஜாந்தருக்கு வீட்டு மிருகங்களை வளர்ப்பதிற் பிரியம் அதிகமாய் இருந்து வந்தது. நாய்களையும் குதிரைகளையும் இவர் அதிக அன்போடு காப்பாற்றி வந்தார். இந்த அன்பு மரணபரியந்தம் இவருக்கு இருந்து வந்தது.

விளையாட்டுக்களில் தங்களுக்கே வெற்றி கிடைக்க வேண்டுமென்பது சிறுவர்களின் எண்ணமாக இருக்கும். அந்த வெற்றியைப் பெறும் பொருட்டு அவர்கள் எதிரி அஜாக்கிரதையாக இருக்கும் தருணத்தை எதிர்பார்த்திருந்து தங்கள் காரியத்தை மோசவழிகளிற் சாதித்துக்கொள்வது வழக்கம். அலெக்ஜாந்தர் அப்படிச் செய்கின்றவரே அல்லர். விளையாட்டுக்களில் வெற்றியைப் பற்றி இவர் அவ்வளவாகக் கவனிக்க மாட்டார். அவ் வெற்றியைப் பெறும் முறைகள் நியாயமானவையா வென்று கவனித்துக் கொள்ளுவார்.

எதிரிகளை ஏமாற்றி வெற்றிபெற முயல்வது கேவலமான செயல் என்றும், அது வீரமும் புகழும் அறமும் அல்ல என்றும் இவர் நினைத்திருந்தார். இக்கொள்கையை இவர் தம் வாழ்நாளில் என்றும் மறந்தாரில்லை. பிற்காலத்தில் ஆசியாவில் இவர் சண்டை செய்தபோது ஒரு சண்டையில் எதிரிகளை வெற்றி கொள்வது அசாத்தியமாகத் தோன்றியது. அதற்காக இவர் எந்த விதத்தில் எதிரியைத் தாக்குவது என்று நெடுநேரம் சிந்தனை செய்து வந்தார். அச் சந்தர்ப்பத்தில் இவர் சேனைத் தலைவர்களிற் சிலர், "நள்ளிரவில் பகைவர் தூங்கும் சமயத்தில் வஞ்சகமாகப் போர் தொடங்குவதே சிறந்த உபாயம்" என்றார்கள். அதைக் கேட்ட இவர், "நான் ஒருகாலமும் திருட்டுத்தனமாக வெற்றியைப் பெற மாட்டேன்" என்று அவர்களுடைய முகத்தில் அறைந்தாற் போல் கூறினார். இதனால் இவருடைய உண்மை வீரம் புலனாகின்றது.

இவருடைய இளமைப் பருவத்தில் பிலிப் பல அரசர்களுடன் அடிக்கடி சண்டை செய்து வந்தார். அச் சண்டைகளில் எல்லாம் பிலிப்புக்கே வெற்றி கிடைத்து வந்தது. வெற்றிச் செய்தி அலெக்ஜாந்தருக்கு எட்டினால், "என் தந்தையார் எனக்கென்று ஒன்றும் மிகுதி வைக்காமல் எல்லா ராஜ்யங்களையும் தாமே ஜயித்து விடுவார்போல் இருக்கிறதே!" என்று கவலைப் படுவதுண்டு. இதனால் அந்தச் சிறு வயதிலேயே இவருக்குப் போர் செய்வதில் இருந்த ஆர்வம் அளவு கடந்ததென்பது புலப்படுகின்றது.

அலெக்ஜாந்தர் ஏழு வயதுச் சிறுவராக இருக்கும் காலத்தில் தம் தந்தையாரைப் பார்க்க வரும் பாரசீகக் கவர்னர்களைப் பார்த்து, "இங்கிருந்து உங்கள் தலைநகரம் எத்தனை



நாட் பிரயாணத்தில் உள்ளது? உங்கள் அரசர் எத்தகையவர்? அவருடைய சேனைகள் எப்படிப்பட்டவை?" என்பவை போன்ற கேள்விகளைக் கேட்பது வழக்கமாம். தமது தந்தையார் பாரசீகத்தின்மீது படை யெடுக்கப் போகிறார் என்பது அலெக்ஜாந்தருக்கு அப்பொழுதே தெரிந்திருந்ததாம்.

அக் காலத்தில் கிரீஸ் தேசத்திற் பல விடங்களில் குறித்த சில வருடங்களுக்கு ஒருமுறை விளையாட்டுப் பந்தயங்கள் நிகழ்வதுண்டு. இத்தகைய இடங்களில் ஒலிம்பியில் நடக்கும் விளையாட்டுக்களே முக்கியமானவை. இங்கே கிரேக்கக் கடவுளாகிய ஜூபிடருக்கு ஒரு கோவில் உண்டு. அங்கே ஒவ்வோர் ஐந்தாம் ஆண்டின் தொடக்கத்திலும் பந்தயங்கள் நிகழ்வதுண்டு. அப் பந்தயங்களுக்குக் கிரீஸின் பலபாகங்களிலிருந்து வீரர்கள் வருவது வழக்கம். நாட்டில் சண்டை நடந்து வந்தாலும் பந்தயங்களுக்காகச் சிலகாலம் சண்டைகள் நிறுத்தப்படுவது வழக்கம். பந்தயங்களிற் சேர விரும்புகின்றவர் தாம் எவரிடத்தில் எவ்வளவு காலம் பயிற்சி பெற்றவர் என்பதைக் காட்டும் ஒரு சீட்டுப் பெற்று வரவேண்டும். வேடிக்கை பார்ப்பதற்கென்று அநேக ஆயிரம் மக்கள் அங்கே கூடுவார்கள். பந்தயங்களில் ஏதாவது ஒன்றில் வெற்றி பெற்ற வீரனுக்குக் கடவுளுக்குச் சாத்திய காட்டு ஒலிவ மரத்தின் இலைக் கிரீடத்தை அணிவித்துக் கௌரவப் படுத்துவார்கள். அவ் வீரன் தன் சொந்த ஊருக்குச் சென்றதும் அவ்வூரார் கோவிலில் வைக்கப்பட்டிருக்கும் மணிமுடியை அவனுக்குச்சூட்டி அவனைக்கௌரவப் படுத்துவார்கள். இதனால் பிற்காலத்தில் அவ்வீரன் உன்னத பதவியை வகிக்கும் யோக்கியதை பெற்றவனாகிறான். இவ்வித ஏற்பாடுகள் இருந்து வந்ததனால் கிரேக்கர்கள் சிறந்த

உடல் வலிமை வாய்ந்தவர்களாக இருந்தனர். உடல் நலம் நன்குறவே உளநலமும் ஓங்கி, நாட்டிற் கலைவளனும் செழித்திருந்தது.

ஒரு சமயம் ஒருவர் அலெக்ஜாந்தரைப் பார்த்து, "அரசிளஞ் சிங்கமே, நீர் ஒலிம்பியில் நடக்கும் பந்தயங்களிற் சேரவில்லையோ?" என்று கேட்டார். அலெக்ஜாந்தர் உடனே அவரைப் பார்த்து, "எனக்குச் சமமான மன்னர்களுடன் தான் நான் பந்தயம் கூற வேண்டும். இப்பந்தயங்கள் யாவும் சாதாரண வீரர்களுக்கே உரியன" என்று பதில் கூறினார்.

மாசிடோனியாவை அடுத்துப் பல காடுகள் உண்டு. அங்கே அலெக்ஜாந்தர் அடிக்கடி வேட்டைக்குச் செல்வது வழக்கம். அச் சமயங்களில் இவருடன் பல வீரர்களும் போவார்கள். அவர்களிற் பலர் ஒலிம்பிக் பந்தயங்களில் ஒலிவ முடி சூடியவர்கள். வேட்டையாடும் சமயத்தில் அலெக்ஜாந்தர் அவர்கள் செய்யமுடியாத அரிய செயல்களைச் செய்து அவர்களை ஆச்சரியப் படுத்துவது உண்டு.

வீர விளையாட்டு விஷயத்தில் அலெக்ஜாந்தர் சிறந்த சமர்த்தராக இருந்தது போலக் கல்வி விஷயத்திலும் இவர் இருந்தார். எல்லாக் கலைகளிலும் விருப்பம் ஏற்படும் வகையில் இவர் கற்பிக்கப்பட்டார். பதின்மூன்றாம் பிராயம்முதல் பதினாறாம் பிராயம் வரையில் இவர் அரிஸ்டாடிலிடம் கல்வி பயின்றுவந்தார். அதனால் இவருடைய இயற்கையறிவு கல்வியறிவோடு கலந்து சோபிக்கலாயிற்று. மருத்துவம், இயற்கைச் சாஸ்திரம், சங்கீதம் முதலியவைகளில் அலெக்ஜாந்தருக்கு அதிகப்பிரியமும் பாண்டித்தியமும் இருந்தன. தமது



பதினோராம் பிராயத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் * 'லையர்' (Lyre) என்னும் வாத்தியத்தை இவர் வாசித்து நல்ல பெயர் பெற்றுள்ளார். இலியட் என்னும் கிரேக்க இதிகாசத்தில் இவருக்கு நல்ல பயிற்சி இருந்தது. தம் உடைவாளை இவர் எவ்விதம் மதித்துப் போற்றி வந்தாரோ அவ்விதமே இலியட்டையும் போற்றிவந்தார்.

அலெக்ஜாந்தருக்கு எளிய வாழ்க்கையும் சிறந்த குணங்களும் அமையவேண்டி இவர் தந்தையார் இவரை வேறோர் ஆசிரியரிடம் சிலநாள் விட்டிருந்தார். அச்சமயம் ஒருநாள் இவர் மட்டிப்பாலை நெருப்பிலிட்டு அதிகமாகக் கொளுத்திக்கொண்டிருந்தார். அச் செய்கையைக் கண்ட ஆசிரியர், "மட்டிப்பால் விளையும் நாடுகளை நீ வெற்றி கொண்ட பிறகு உன் இஷ்டப்போல் செலவிடுவாயாக" என்று அலெக்ஜாந்தரைப் பரிகாசம்செய்தார். மட்டிப்பால் அதிகமாக ஆசியாவில் விளையும். இவ்வாறு ஆசிரியர் தம்மை இகழ்ந்ததையை அலெக்ஜாந்தர் மறக்கவே இல்லை; பிற்காலத்தில் தாம் ஆசியாவை வெற்றிகொண்ட பிறகு மட்டிப்பாலைப் பெரிய பொதிகளிற் கட்டித் தம் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தார். அதனுடன், "மட்டிப்பாலைச் செலவிடுவதில் இனி லோபம் செய்யாதீர்கள்; அது விளையுமிடம் நமக்குச் சொந்தமாய்விட்டது" என்றெழுதிய கடிதத்தையும் அனுப்பி வைத்ததாக அறிகிறோம்.

அலெக்ஜாந்தர் நல்ல சரீரக் கட்டுள்ளவர். செம்பொன் போன்ற அழகுள்ள இவர் தோற்றம் யாவரையும் வசப்படுத்தக் கூடியதாய் இருந்தது. இவர் அதிக உயரமும் குட்டையுமாயிராமல் நடுத்தரமான உயரமுள்ளவராக இருந்தார்.

* ஒரு நரம்புக்கருவி

தமது தலையை ஒருபுறமாகச் சாய்த்துக்கொண்டே யிருப்பது இவருக்கு வழக்கம்.

இவர் இளமைப் பருவத்தில் பல துறைகளில் அக்காலத்தில் இருந்த மற்றெல்லோரைக் காட்டிலும் சிறந்தவராக விளங்கின போதிலும் அரிஸ்டாடில் உள்ளிட்ட நெருங்கிய பழக்க முள்ளவர்கள்கூட இவருடைய உண்மையான வல்லமையை உணர்ந்து கொள்ளவில்லை. இவரைச் சாமானிய ரென்று அவர்கள் நினைத்து வந்தமை நமக்கு வியப்பாகத் தோன்றுகின்றது.

## III

## மனஸ்தாபமும் அரசு பெறுதலும்

மனிதர்களில் குறைகள் இல்லாதவர் இலர். ஒருவனுக்குச் செல்வம் அதிகாரம் முதலியன அமைந்திருந்தாலும் சில விஷயங்களிற் குறைகள் இருந்து கொண்டே யிருக்கும். பிலிப் சர்வாதிகாரியாய்ச் சகல சம்பத்துக்களு முடையவராய் இருந்தும் குடும்ப விஷயத்தில் அவருக்கு அமைதி சிறிதேனும் உண்டாகவில்லை. ஒலிம்பியஸுக்கும் பிலிப்புக்கும் மன ஒற்றுமை இருந்ததில்லை. பெண்கள் விஷயத்திற் பிலிப் கருணை உடையவர் அல்லர். ஒலிம்பியஸும் தன் கணவர் விரும்பியபடி நடக்கின்றவள் அல்லள். கடின சிந்தையும், அதிகார தோரணையும், அகம்பாவமும் அவளுக்கு இயற்கையாக அமைந்திருந்தன. "ஒருவர் பொறை இருவர் நட்பு." இங்கு ஒருவருக்காவது பொறுமை இல்லாததால் அந்தச் சச்சரவு சில காலத்தில்



முதிர்ந்து விட்டது. தம் தாய் தந்தையர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்படும்போதெல்லாம் அலெக்ஜாந்தர் தம் தாயையே சார்ந்து நிற்பார். ஒருமுறை ஒலிம்பியஸ் பிலிப்புடன் சண்டையிட்டுக்கொண்டு தன் மைந்தருடன் தன் தாய்வீடு சென்றாள். அலெக்ஜாந்தருக்கு நெருங்கிய நண்பர்களாய் உடன் வசித்து வந்த **செல்யூகஸ்**, **தாலமி** முதலிய வீரர்களும் இவருடன் இவர் மாதாமகர் வீட்டிற்குச் சென்று விட்டனர். அலெக்ஜாந்தர் இங்கு வசித்து வந்த காலத்தில் பிற்கால வாழ்க்கைக்கு வேண்டிய பலவற்றைத் தெரிந்து கொண்டார். இவர் தம் நாட்டை விட்டு நீங்கியது கடைசியாக இவருடைய நன்மைக்காகவே முடிந்தது. ஏறக்குறைய இக்காலத்திலேதான் **மௌரிய சந்திர குப்தர்** மகத ராஜ்யத்தினின்றும் **நந்தர்களால்** நாடு கடத்தப் பட்டார். அச் செயல் பிற்காலத்தில் சந்திரகுப்தர் மகதத்தைக் கைப்பற்றிக்கொண்டு அதை உன்னத பதவிக்குக் கொண்டுவரப் பயிற்சி பெறுவதற்குச் சாதகமாயிற்று.

ஒலிம்பியஸின்மேல் பிலிப்புக்கு வெறுப்பேற்பட்டதை அறிந்த பலர் அவளைப்பற்றி அபவாதங்களைப் பேசலாயினர். அவள் கற்பொழுக்கம் தவறியவள் என்றும், அலெக்ஜாந்தர் பிலிப்புக்குப் பிறந்தவர் அல்லர் என்றும் சிலர் கூறிய அவதூறு மொழிகள் பிலிப்பின் காதுகளில் விழுந்தன. எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற் போல இந்த அபவாதமும் சேர்ந்துகொள்ளவே பிலிப் ஒலிம்பியஸை ஒழித்துவிட எண்ணி மாசிடோனியப் பெண் ஒருத்தியை மணம் புரிந்து கொண்டனர். கலியாணத்தின் முடிவில் ஒரு விருந்து நடந்தது. அந்த விருந்துக்கு உள்நாட்டுப் பிரபுக்களிற் பலரும் வெளிநாட்டுத் தலைவர்களிற்

சிலரும் வந்திருந்தனர். அப்பொழுது பிலிப்பின் புதிய மனைவியினுடைய மாமன் அங்கிருந்தவர்களை நோக்கி, "மாசிடோனியாவை ஆளுவதற்கு நியாயமான உரிமையை உடைய ஒரு குழந்தை இவள் வயிற்றிற் பிறக்க வேண்டுமென்று பிரார்த்தியுங்கள்" என்றான். அச்சமயம் அலெக்ஜாந்தரும் அருகில் இருந்தார். இவர் தம் தாயின் கற்பை இழிவுபடுத்திய அவன் மீது கோபங்கொண்டு மேஜையின் மீது இருந்த ஒரு பாத்திரத்தை எடுத்து அவன் முகத்திற் படும்படி வீசினார். தமது புதிய சம்பந்தியை அலெக்ஜாந்தர் அவமானப்படுத்தலாகுமா என்று கோபங்கொண்ட பிலிப் தம் மகனைக் குத்திக்கொல்ல விரைந்து எழுந்தார். ஆனால் அவர் தெய்வச் செயலாய்க் காலிடறி வீழ்ந்துவிட்டார். அச் சமயம் அலெக்ஜாந்தர் சபையிலுள்ளவர்களைப் பார்த்து, "பாருங்கள்! ஆசியாவை வெல்வதாகக் கூறுகின்றவர் சிறிது தூரம் நடப்பதற்குள் காலிடறி விழுந்து விட்டார்!" என்று புகழ்ந்ததாகத் தெரிகிறது. இச் சம்பவம் நடந்த பிறகுதான் தந்தையாரும் புதல்வரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்திருப்பர் என்று ஊகிக்க இடமேற்படுகின்றது.

சிலநாளில் பிலிப்புக்குத் தம் புதிய மனைவியினிடம் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது வரையில் பிலிப்புக்கு அலெக்ஜாந்தரைத் தவிர வேறு ஆண் குழந்தைகள் இல்லை. தமக்கு ஒரு தம்பி பிறந்து விட்டதனால் இனித் தம் தந்தையார் தமக்கு ராஜ்யத்தைக்கொடுப்பாரோ மாட்டாரோ என்று அலெக்ஜாந்தர் சந்தேகம் கொள்ள இடம் ஏற்பட்டுவிட்டது. இது நிற்க.

தமக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்ததற்காக நாடெங்கும் கொண்டாடும்படி பிலிப் ஏற்பாடுகள் செய்தார். தமக்குப் பின் அக்குழந்தையே பட்டம் வகிக்க வேண்டுமென்றும் ஒரு விருந்தில் அவர் வெளிப் படுத்தினார்.



சிலமாதங்களில் வெளிநாட்டு யுத்தங்கள் செய்யவேண்டிய அவசியம் பிலிப்புக்கு ஏற்பட்டது. அப்பொழுது அவர் அலெக்ஜாந்தரின் உதவியை எதிர்பார்க்க வேண்டியவரானார். அதனால் பிலிப் அலெக்ஜாந்தரையும் தம் முதல் மனைவியையும் வரவழைத்துக் கொண்டார். பிறகு அவர் அலெக்ஜாந்தரைத் தமக்குப் பிரதிநிதியாக மாசிடோனியாவை ஆண்டு வரும்படி நியமித்து விட்டு யுத்தம் செய்யப் புறப்பட்டார். அப்பொழுது நம் கதாநாயகருக்கு வயது பதினெட்டு. அரசாளும் பயிற்சியைப் பெறுதற்கும் அரசாங்கத்தில் உள்ள சில முக்கிய இரகசியங்களை உணர்ந்து கொள்வதற்கும் இவருக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாயிற்று. அரசியல் துறையில் இருந்த பல பெரியோர்கள், அலெக்ஜாந்தரைக் கொண்டாடினார்கள். உத்தியோகத்திலிருந்த பலர்—முக்கியமாகச் சேனைத் தலைவர்கள்—பிலிப் ஆளுவதைவிட இவர் ஆளுவதே நலம் என்ற எண்ணம் கொண்டனர்.

இச் சந்தர்ப்பத்தில் ஒரு போரில் அலெக்ஜாந்தர் தம் தந்தையாருடனிருந்து போர் புரிந்திருக்கிறார். அச்சண்டையில் பிலிப்புக்கு வெற்றி கிடைத்தது அலெக்ஜாந்தரால்தான் என்று சரித்திரங்கள் கூறும்.

வெளிநாட்டு யுத்தங்கள் முடிந்தவுடன் பிலிப் பெல்லாவுக்கு வந்து அரசாட்சியை ஒப்புக்கொண்டார். பிலிப் ஒலிம்பியஸைச் சமாதானத்துடன் ஏற்றுக்கொண்ட போதிலும் சிலநாளில் இருவருக்கும் பழையபடி சச்சரவு ஏற்பட்டு விட்டது. ஒலிம்பியஸும் அலெக்ஜாந்தரும் மாசிடோனியாவை விட்டு மறுபடியும் அகன்றனர்.

பிலிப்புக்கு அலெக்ஜாந்தரின் வல்லமையும் அருங்குணங்களும் தெரியாமற் போகவில்லை; இவர் சிறந்த அரசாக விளங்கக் கூடும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அப்படியிருந்தும் அலெக்ஜாந்தர் ஒலிம்பியஸின் வயிற்றிற் பிறந்ததை ஒரு குற்றமாக எண்ணினார். அதனால்தான் தமது பட்டத்தை இவருக்குக் கொடுக்க அவர் விரும்பினாரில்லை. தந்தையார் தம்மை முற்றிலும் வெறுக்கின்றமையை அலெக்ஜாந்தர் அறிந்திருந்தார். ஆயினும் இவர் தம் பிதாவை வெறுக்கவில்லை. பிலிப்பால்தான் மாசிடோனியர்களுக்கு வேறு கிரேக்கர்களின் முன்னிலையில் மதிப்பு ஏற்பட்டது என்பதை எண்ணி அலெக்ஜாந்தர் தம் தந்தையாரைப் பெரிதும் மதித்து வந்தார்.

பட்டத்தைப் பெறுவதற்கென்றிருந்த பையனோ வயதில் மிகச்சிறியவன். பிலிப்புக்குப் பின் அலெக்ஜாந்தரே தமக்கு அரசராக வேண்டுமென்று நாட்டவர் முயற்சி செய்தல் கூடுமென்று பிலிப்பின் அந்தரங்க நண்பர்கள் சிலர் அபிப்பிராயப் பட்டார்கள். தம் இளைய குமாரன் பட்டம் பெறுதற்குத் தடையாக ஒருவர் இருப்பதைப் பிலிப்பும் ஊகித்து அறிந்துகொண்டார். அவர் ஒலிம்பியஸின் இளைய சகோதரரே. அவர் அக்காலத்தில் இருந்த சிறந்த தலைவர்களில் ஒருவர். கிரீஸ் தேசத்தில் அவருக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அவர் அலெக்ஜாந்தருக்குத் துணையாகாதபடி பிலிப் ஒரு சூழ்ச்சி செய்தார். தமக்கு ஒலிம்பியஸ் அல்லாத வேறு மனைவியிடமாகப் பிறந்த ஒரு பெண்ணை அலெக்ஜாந்தரின் மாமனுக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டால் அலெக்ஜாந்தருக்குப் பக்கபலம் இல்லாமற் போய் விடுமென்று அவர் நினைத்தார். விவாக ஏற்பாடுகள் விரைவாக நடக்கலாயின.



இந்த விவாகத்தைப்பற்றி அலெக்ஜாந்தர் ஒருவித அபிப்பிராயமும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. ஒலிம்பியஸ் மட்டும் இது விபரீத காலத்திற்காக ஏற்பட்டுள்ளது என்று நினைத்தாள். அவ் விவாகத்தைத் தடுத்துவிடவும், கூடுமானால் பிலிப்பைக் கொன்றுவிடவும் அவள் பரபரப்புடன் சூழ்ச்சி செய்து வந்ததாகச் சில ஆசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். விவாகத்தின் தொடக்கத்தில் ஓர் ஊர்வலம் நடந்தது. அச்சமயம் பிலிப் சில வீரரால் குத்தப்பட்டு உயிர் துறந்தார்.

பிலிப்பின் மரணத்தைக் குறித்துப் பலர் பலவித அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். அக்காலத்தில் ஆதன்ஸிலிருந்த பலர், அலெக்ஜாந்தர் ஒலிம்பியஸ் இவர்கள் இருவரின் வஞ்சனையாலுமே பிலிப் கொல்லப்பட்டார் என்று எழுதியிருக்கின்றனர். சரித்திர ஆசிரியர்களிற் பலர் இக்கொலை சம்பந்தமான விஷயத்தில் அலெக்ஜாந்தருக்குச் சிறிதளவும் பழியில்லை, இவர் ஒரு பாவமும் அறியாதவர் என்று எழுதியுள்ளார்கள். அலெக்ஜாந்தர் நேரிய வழியிற் செல்கின்றவரே அல்லாமல் திருட்டுத்தனமான சூழ்ச்சிகளில் தலையிட்டுக் கொள்ளாதவர். "நான் திருட்டுத்தனமாக வெற்றியை ஒரு காலமும் பெறமாட்டேன்" என்று இவர் அடிக்கடி சொல்லி வந்தமையே பிலிப்பின் கொலை விஷயத்தில் இவர் நிரபராதி என்பதைக் காட்டப் போதிய சான்றாகும். ஒலிம்பியஸ் குற்றமற்றவள் என்று நாம் எண்ணவேண்டியதே இல்லை. அவள் பிற்காலத்தில் யாவரும் அறியும்படி செய்த கொடுமைகளை நினைக்கும்போது அவளே பிலிப்பின் மரணத்திற்கும் காரணமாவாள் என்று ஊகிக்க இடமேற்படுகின்றது. இதற்கு ஏற்ப ஒருவரலாறும் பின்வருமாறு வழங்குகின்றது:

"பிலிப்பின் மனைவிகளில் ஒருத்தியின் தந்தை ஒரு வீரனுக்கு விரோதியாக இருந்தான். அவன் தான் மாசிடோ

னிய மன்னரின் சம்பந்தி என்ற எண்ணத்தினால் அவ் வீரனுக்குத் தீங்கிழைத்துவந்தான். பிலிப்பின் மூலமாக அவ்வீரனுக்கு நியாயம் கிடைக்கவில்லை. அதனால் அவன் பிலிப்பை ஒழித்துவிடத் தக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். ஒருவனுக்குப் பலர் விரோதிகளாக இருப்பார்களானால் அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு தம் பகைவன் உயிர்க்கு உலை வைக்க வழி தேடுவது இயல்பே. அவ்வீரன் ஒலிம்பியஸின் சார்பில் இருந்துவந்தான் மேற் குறித்த கலியாணச் சந்தர்ப்பத்தில் அவன் சில ஆட்களை உதவியாக அழைத்துக் கொண்டு ஒலிம்பியஸின் ஏவலால் பெல்லாவுக்குச் சென்று பிலிப்பைக் கொல்லத்தக்க தருணத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தான். ஊர்வலத்தின்போது பிலிப் ஆயுதம் தரிக்காமலும் மெய்க்காவலர் இன்றியும் வருவதைக் கண்டு அவன் தன் எண்ணத்தை எளிதில் முடித்துக்கொண்டான்."

"பிலிப் பாரசீகத்தின் மீது படையெடுத்துச் செல்லப் போவதாக எங்கும் பிரஸ்தாபம் ஏற்பட்டிருந்தது; பாரசீக வேந்தர் டரியஸ் என்பவரும் இவ் விஷயத்தை அறிந்திருந்தார்; பிலிப்பைக் கொன்றுவிட்டால் தாம் அமைதியுடன் இருக்கலாமென்றெண்ணி டரியஸ் சிலருக்கு லஞ்சம் கொடுத்துத் தம் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொண்டார்" என்ற வேறொரு வரலாறும் காணப்படுகின்றது.

பிலிப் கொலையுண்டமையைச் சிலரால் அலெக்ஜாந்தர் தெரிந்துகொண்டார். உடனே இவர் பெல்லாவுக்கு வந்து சேர்ந்தார். தம் தந்தையாரின் மரணத்தைக் குறித்துக் கவலைப்பட இவருக்கு நேரமில்லை. நாட்டின் நெருக்கடியான நிலைமையை இவர் உடனே கவனிக்கவேண்டியிருந்தது. தந்தையாரின் மரணத்தைக் குறித்து இவர் செய்ததெல்லாம்



குற்றவாளிகளையெல்லாம் கண்டுபிடித்து அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதித்தமையேயாகும்.

பிறகு அலெக்ஜாந்தர் சிங்காசனத்தைக் கைப்பற்றிக் கொண்டார். சேனைத் தலைவர்களிற் பலர் இவரைச் சார்ந்து நின்றனர். இவர் சிங்காசனம் ஏறிய மூன்று நாள் வரை ஒருவிதக் குழப்பமும் ஏற்படவில்லை. எங்கும் யாவும் அமைதியாகவே நடைபெற்று வந்தன.

பிலிப் மாசிடோனியாவை வேறு கிரேக்க ராஜ்யங்களைக் காட்டிலும் உயர்த்தினார். அவர் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் சுற்றுப்புற ராஜ்யங்கள் நடு நடுங்கின. மாசிடோனியர்சமூகத்தையே வீரர் சமூகமாக்கிய ஒருவர் சரித்திரம் பொன் எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கவேண்டும்; ஆனால் அப்படியில்லை. சரித்திரவாயிலாகப் பார்ப்போமாயின் பிலிப் சாமானிய அரசராகவே தோற்றுகின்றார். இதற்குக் காரணம் என்ன? பிலிப்பைப்பற்றி அறிந்து கொள்ளக் கூடிய சரித்திர ஆதாரங்கள் மிகச் சில. கிடைத்துள்ள சொற்ப ஆதாரங்களும் டிமாஸ்தனிஸ் போன்ற பிலிப்பின் ஜன்ம விரோதிகளின் உபந்யாசங்கள் முதலியவற்றிலிருந்து திரட்டப்பட்டவையேயாகும். அவ் விரோதிகள் அவரைப்பற்றி உண்மை கூறியிருப்பார்கள் என்று எண்ணுவதற்கில்லை. அன்றியும், அலெக்ஜாந்தரின் பெரும் புகழும் வீரமும் பிலிப்பின் பெருமையைச் சிறிதாக்கிவிட்டன. அக்காலத்தில் இருந்த பல வேந்தர்களின் புகழ் நட்சத்திர ஒளி என்றால் பிலிப்பின் புகழ் சந்திரகாந்தியாகும். அலெக்ஜாந்தரின் புகழோ சூரிய வெளிச்சம் ஆகும். சூரியகாந்தியின் முன் சந்திரன் ஒளி மழுங்கிப்போவது ஆச்சரியமன்று.

## IV

## முடிசூடிய முதலாண்டு

பிலிப் கொலையுண்ட செய்தியும் அலெக்ஜாந்தர் முடிசூடிய செய்தியும் காட்டுத் தீப்போல விரைவில் நான்கு பக்கங்களிலும் பரவின. கிரேக்கநாடுகள் யாவும் மாசிடோனியாவின் அதிகாரத்திலிருந்து விடுதலைபெற அதுதான் தக்க சமயமென்று எண்ணின. 'மிலேச்ச நாடுக'ளாகிய திரேஸும் இலிரியாவும் அலெக்ஜாந்தருடன் போர் செய்ய ஆயத்தமாயின.

மாசிடோனியாவை வீழ்த்தும் நோக்கத்தோடு கிரேக்கர்களை ஒன்றுகூட்ட முயற்சிசெய்தவர்கள் ஆதன்ஸ் வாசிகளே. பிலிப்பின் மரணச் செய்தியைக் கேட்டவுடன் திமாஸ்தனிஸ் ஒரு பெருங் கூட்டம் கூட்டி மாசிடோனியாவை அடிப்படுத்த நல்ல தருணம் அதுவே என்பதைக் காட்டிக் கிரேக்கர்களைத் தூண்டினார். பிலிப்பைக் கொன்றவனுக்கு அப்பெருங் கூட்டத்தார் வாழ்த்துக் கூறினார்கள். தங்கள் நல்ல் காலத்தின் பயனாலேயே பிலிப் கொலையுண்டார் என்றெண்ணி அவர்கள் நகரெங்கும் திருவிழாக் கொண்டாடினார்கள். அவர்கள் இவ்வளவோடு நிற்கவில்லை. அலெக்ஜாந்தர்மீது அவர்கள் பழி பாவங்களைச் சுமத்தினார்கள்; பல கிரேக்க ராஜ்யங்களை மாசிடோனியாவுக்கு விரோதமாகக் கிளம்பும்படி செய்தார்கள். திமாஸ்தனிஸ் அலெக்ஜாந்தரைச் **'சிறு பையன்'** என்று இகழ்ந்தார். ஆதன்ஸ் வாசிகள் அலெக்ஜாந்தரின் வல்லமையை உணர்ந்து கொள்ள வில்லை. இவர் திறமையில் பிலிப்புக்கும் கீழ்ப்பட்டவரே என்று அவர்கள் எண்ணினார்கள். அதனால் பல கிரேக்கர்கள் ஒன்று கூடிப்



போரைத் தொடங்கினார்கள். அவர்களுக்கு உதவியாக ஆதன்ஸிலிருந்தும் ஒரு சேனை அனுப்பப்பட்டது.

மாசிடோனியாவுக்கு வெளியே கிரேக்கர்கள், திரேஸர்கள், இலிரியர்கள் எல்லாரும் ஒரே காலத்தில் தனித் தனியாகச் சண்டைக்கு ஆயத்தமானதன்றி உள் நாட்டிலேயே சிலர் பிலிப்பின் இளங் குமாரனுக்குப் பட்டம் கட்ட வேண்டுமென்று கலகம் செய்தனர். அலெக்ஜாந்தர் இவை அனைத்தையும் ஒருங்கே கவனிக்க வேண்டி யிருந்தது.

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா? ஆயிரம் யானைகள் ஒன்று சேர்ந்து வந்தாலும் ஒரு சிங்கம் அப்பகையை இலட்சியம் செய்யுமா? அலெக்ஜாந்தர் தம் நிலை மிகவும் அபாயகரமானதென்று சிறிதும் எண்ணவில்லை. **மஹா வீரர்** என்று பட்டம் பெறுவதற்குத் தமக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததாக இவர் எண்ணி மகிழ்ந்தார். பரம்பரை வீரர் வமிசத்தில் தோன்றியவரும், சிறு வயதிலிருந்து வீரர் சரித்திரங்களைக் கேட்டு வந்தவரும், வீர விளையாட்டுக்கள் விளையாடினவரும் ஆகிய அலெக்ஜாந்தர் இச்சமயம் அச்சங் கொள்ளவில்லை என்பது ஆச்சரியமன்று. திமாஸ்தனிஸ் 'சிறு பையன்' என்று தம்மைக் குறித்தமையைக் கேட்ட அலெக்ஜாந்தர், "சிறு பையன் என்றே இப்பொழுது நினைத்திருப்பார்களாக; ஆதன்ஸ் கோட்டைக்கு அருகில் நான் சென்ற பிறகு அலெக்ஜாந்தர் வயதும் ஆண்மையும் மிகுந்தவீரன் என்பதைக் காட்டுகின்றேன்" என்று பதில் கூறினார்.*

உள் நாட்டுக் குழப்பத்தை இவர் ஒரு பொருட்டாக நினைக்கவே இல்லை. சிங்காசனம் ஏறியதும், "மாசிடோனி

யாவின் கௌரவத்தை நிலை நாட்டுவதும், ஆசியாவை வெற்றி கொள்வதுமே என் முக்கிய நோக்கங்கள் ஆகும்'' என்று இவர் ஓர் அறிக்கையைத் தம் நாட்டவர்க்கு வெளியிட்டார். அதன் பிறகு போர் விஷயத்தில் விருப்பமுள்ள மாசிடோனியர் அலெக்ஜாந்தரை ஆதரிப்பதாக உறுதி செய்து கொண்டனர். அதனால் பிலிப்பின் இளைய குமாரனை அரசனாக்க ஒருவரும் விரும்பி முன்வரவில்லை.

அலெக்ஜாந்தரைத் தாக்கக் கிரேக்கச் சேனை ஒன்று தயாராயிற்று. அலெக்ஜாந்தர் உடனே தம் கவனத்தை அதன் மீது செலுத்தும் அவசியமேற்பட்டது. அச் சேனை, கிரேக்க நாட்டிற்குள் இவர் புகாதபடி முக்கியமான வழிகளாகிய கணவாய்களை எல்லாம் அடைத்துக்கொண்டு நின்றது. அலெக்ஜாந்தர் அல்லாமல் வேறொருவராக இருந்திருந்தால் அந்நிலையில் கிரேக்கர்களைத் தாக்கியிரார். ஆனால் இவர் சற்றும் தாமதிக்கவில்லை. கடக்க முடியாத ஒரு மலையில் புதியதொரு வழியை உண்டு பண்ணிக்கொண்டு கிரேக்கர்கள் எதிர்பாராதபடி கிரேக்க நாட்டுக்குள் நுழைந்து விட்டார். கிரேக்கர்கள் இவ்வாறாகுமென்று நினைக்கவில்லை. மனிதரால் சாத்தியமல்லாத ஒன்றை அலெக்ஜாந்தர் செய்து விட்டதாக அவர்கள் எண்ணினார்கள். ஆகலால் தமது நன்மையைக் கருதி அவர்கள் அலெக்ஜாந்தருடன் சமாதானம் செய்து கொண்டனர். இவ்வாறாக இரு கட்சியிலும் ஒரு சேதமுமின்றிப் பகைவர்கள் இவர் வசமாயினர்.

உடனே அலெக்ஜாந்தர் ஆதென்ஸ் நகரிற் பிரவேசித்தார். தமக்கு ஆதென்ஸ்மீது அளவற்ற நல்ல மதிப்புண்டென்பதை இவர் காட்டினார். ஒருவரும் இவருக்கு எதிராகப் பேசவில்லை. பிறகு கிரேக்கர்கள் ஆதென்ஸில் ஒரு கூட்டம்



கூடி அலெக்ஜாந்தரை மாசிடோனியாவின் அரசராக அங்கீகரித்தார்கள். அம்மட்டோ! ஆசியாவை வெற்றி கொள்ளத் தங்கள் சேனாதிபதியாகவும் பிரதிநிதியாகவும் இவரையே கிரேக்கர்கள் தேர்ந்தெடுத்தனர்.—ஏன்?—அங்கீகரித்தனர் என்றே சொல்ல வேண்டும்.

ஆதென்ஸில் இவர் நெடுநாள் தங்கியிருக்க அவகாசமில்லை. திரேஸ் ஜனங்கள் இவரைத் தாக்கத் தயாரானார்கள். அவர்கள் மலைகளின் மீது இரதங்களை நிறுத்தி இவர் கணவாய்களைக் கடந்து வரும்பொழுது இவருடைய சேனையின்மீது அந்த இரதங்களை உருட்டிக்கொல்ல முன் ஏற்பாடு செய்திருந்தனர். இதை அறிந்த அலெக்ஜாந்தர் தம் சேனையை ஒருங்கு கூட்டித் திரேஸில் பிரவேசிக்கும் விதத்தைப்பற்றி அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். சேனைகள் செல்லும்பொழுது நெருக்கமாக வரிசை கலையாமல் செல்லவேண்டுமென்றும், இரதங்கள் உருண்டு வருகையில் அவற்றிற்கு இடம் விட்டு விலகிக்கொள்ள வேண்டுமென்றும், அது சாத்தியப்படாது போகுமென்று தோன்றியபோது சேனையெல்லாம் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டு தங்கள் கேடயங்களை இரதங்கள் புரண்டுவரும் புறமாகப் பிடித்துக் கொண்டு தங்களை மறைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கட்டளையிட்டிருந்தார். இது எல்லோராலும் அனுசரிக்கப்படவே அலெக்ஜாந்தர் சேனைகளுக்கு அழிவுண்டாகவில்லை. இரதங்கள் சில சமயங்களில் இவருடைய சேனைகளுக்கு இடைவெளியில் உருண்டோடின; சில சமயங்களில் வரும் விசையினால் கேடயத் தொகுதிகளால் தாக்குண்டுச் சிதறி அப்பால் விழுந்து புரண்டோடின. இவ்விதம் அலெக்ஜாந்தர் ஒருவருக்கும் உயிர்ச்சேதமின்றிக் கணவாய்களைக் கடந்து திரேஸியர்களை எதிரிட்டுக் கொண்டனர். அப்பொழுதுதான் அவர்

கள் அலெக்ஜாந்தருடைய திறமையை உள்ளபடி உணர்ந்தார்கள். தாங்கள் எதிர் பார்த்தபடி நிகழாததால் அவர்கள் அனுசரித்த வேறு யோசனைகள் பாழாயின. அலெக்ஜாந்தர் அவர்கள் பால் இரக்கம் காட்டவில்லை. மாசிடோனியாவை விரோதிப்பவர்களின் கதி எத்தகையதென்பதைத் திரேஸின் மூலம் பிற நாட்டார் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று இவர் எண்ணினார். மாசிடோனியா ஏற்பட்ட நாள் முதற்கொண்டு திரேஸர் அதன் விரோதிகளாக இருந்து வந்தமையே இவரை அப்படி எண்ணச் செய்தது. திரேஸர்களைத் தாம் நினைத்தபடி தண்டித்துவிட்டு அலெக்ஜாந்தர் மாசிடோனியாவுக்குத் திரும்பினார்.

அதற்குள் இலிரியர்கள் ஒரு பெருஞ் சேனையுடன் மாசிடோனியாவுக்கு அருகில் வந்துவிட்டார்கள். அவர்கள் சேனை அலெக்ஜாந்தரின் சேனைகளைவிட மூன்று மடங்கு எண்ணிக்கையில் பெரியதாக இருந்தது. அலெக்ஜாந்தர் வெற்றி பெறுவார் என்று எவரும் நினைக்கவில்லை. ஆனால் இயற்கையாகவே யுத்தப் பிரியர்களும், பிலிப்பினால் பழக்கப்பட்டவர்களும், அலெக்ஜாந்தரின் தலைமையின் கீழ் போர் புரிபவருமான மாசிடோனிய வீரர்க்கு இலிரியர்கள் எம்மாத்திரம்? ஒருவருக்கு வெற்றி கிடைப்பது அவர் சேனையின் எண்ணிக்கையால்மட்டு மன்று என்பதைச் சில நாளில் இலிரியர் உணரலானார்கள். இலிரியாநாட்டில் எங்கும் நெருப்பும் அழுகையும் குடிகொண்டன. இனித் தாம் மாசிடோனியாவுடன் என்றும் சண்டை செய்யலாகாது என்பதை அலெக்ஜாந்தருடன் அவர்கள் செய்த அப் போரினால் தெரிந்துகொண்டனர்.

இவ்விதமாக அலெக்ஜாந்தர் பட்டத்திற்கு வந்த சில மாதங்களுக்குள் மூன்று திக்கிலும் சென்று அதுவரையிலும்



எந்த வீரரும் செய்திராத அரிய செயல்களைச்செய்து தம் நாடு திரும்பினார். ஆனால் அவர் பின்னும் சிலகாலம் வரையில் அமைதியை எதிர்பார்க்க இயலவில்லை. அவர் தம் நாட்டிற்குத் திரும்பும் பொழுது, "தெற்கே கிரேக்கர்கள் கலகஞ்செய்து மாசிடோனியாவின்மேல் படையெடுக்கத் தயாராகின்றார்கள்" என்பதைக் கேள்வியுற்றார். அதனால் இவர் தெற்கே செல்லவேண்டிய அவசியமேற்பட்டது.

மாசிடோனியரின் உயர்ச்சி கிரேக்கர்களின் ஏகாதிபத்தியத்திற்குப் பெருந்தடையாகு மென்பது ஆதன்ஸ் வாசிகளின் அபிப்பிராயம். அவர்கள் அலெக்ஜாந்தரை மாசிடோனிய மன்னராக அங்கீகரித்த போதிலும், ஆசியாவை வெற்றி கொள்ளத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தபோதிலும், உண்மையாக அவர்கள் அலெக்ஜாந்தரை விரும்பவில்லை. மாசிடோனியாவின் வீழ்ச்சியிலேயே அவர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். அலெக்ஜாந்தர் திரேஸர்மீது படையெடுத்துச் சென்றபோதே இவர் உயிருடன் இனித் திரும்பமுடியாது என்று கிரேக்கர்கள் எண்ணி யிருந்தனர். அதற்கு இடையில் இலிரியர்கள் படையெடுத்து வந்த செய்தியும் அவர்களுக்குத் தெரியவந்தது. அதனால் அவர்கள் தங்கள் எண்ணத்தை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டனர். சில வாரங்கள் சென்றபின் அலெக்ஜாந்தர் இறந்துவிட்டதாக ஒரு பொய் வதந்தி ஆதன்ஸ் நகருக்கு எட்டியது. அவர்கள் அதை எங்ஙனம் நம்பாமலிருக்க முடியும்?

திமாஸ்தனிஸ் ஒரு பெரிய கூட்டம் கூட்டி மாசிடோனியாவை ஒழிக்க அதுவே தக்க சமயமென்பதை வற்புறுத்தினார். "அலெக்ஜாந்தர் வந்துவிடுவாரென்று இனி ஒருவரும் அஞ்சவேண்டுவதில்லை; அவர் இறந்துவிட்டார்; அதை

நேரிற் கண்டவர் இதோ உங்கள் முன்னிலையில் இருக்கின்றார்" என்று ஒருவரைக் காட்டிக் கிரேக்கர்களின் மனத்தை மாற்றிவிட்டார். திமாஸ்தனிஸால் தூண்டப்பட்ட கிரேக்கர்கள் மறுமுறை மாசிடோனியாவுக்கு விரோதமாக ஒன்று சேர்ந்தார்கள். இதில் முக்கியமானவர்கள் தீபியர்களே.

பாரசீகத்தரசர் டரியஸ் என்பவர் அலெக்ஜாந்தரின் நடத்தைகளைக் கவனித்து வந்தவரானதால் இவரால் தமக்குப் பிற்காலத்திற் கெடுதி நேரக்கூடு மென்பதை எண்ணி அலெக்ஜாந்தரைத் தொலைக்கும் சமயத்தை எதிர்பார்த்திருந்தார். அவர் இந்தச்சமயத்தில் கிரேக்கர்களுக்குப் பணத்தையும் சேனைகளையும் உதவ முன் வந்தனர். கிரேக்கர்கள்-பொதுப் பகைவராகிய அப் பாரசீகவேந்தரைத் தொலைக்க அலெக்ஜாந்தரைத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தவர்கள்-இப்பொழுது அவரிடம் அலெக்ஜாந்தரைத் தொலைக்க உதவி பெறுவது எப்படி என்று சற்றுப் பின் வாங்கினர். ஆனல் திமாஸ்தனிஸ் பாரசீக வேந்தரிடமிருந்து பணவுதவியைமட்டும் ஆதன்ஸ் வாசிகளல்லாத வேறு கிரேக்கர் பெறும்படி ஒரு சூழ்ச்சி செய்தனர்.

தீபியர்களின் படை மாசிடோனியாவைத் தாக்க ஆயத்தமாயிற்று. அச்சமயம் மாசிடோனியச்சேனை ஒன்று தீபியர்களை வளைத்துக் கொண்டது. அலெக்ஜாந்தரே அப்படைக்குத் தலைமை வகித்துச் சென்றார். அலெக்ஜாந்தர் தலைமை வகித்து வருவதைச் சிலர் தீபியர்களுக்குத் தெரிவித்தனர். அவர்கள் அவ் விஷயத்தை நம்பவில்லை. "அது எப்படி முடியும்? இறந்தவர் பிழைப்பது எங்கேயாவது உண்டா?" என்றெண்ணி அவர்கள் அலட்சியமாக இருந்து விட்டனர். பிறகு அலெக்ஜாந்தரை நேரிற் கண்டபின் அவர்



கள் திகிலடைந்து ஓடிப்போய்க் கோட்டைக்குட் புகுந்து கொண்டனர்.

அலெக்ஜாந்தருக்குத் தீபியர்கள் மீது கோபம் பெருகிற்று. ஆயினும் "நம்மவர்களாயிற்றே" என்று இவர் சிறிது இரக்கங் காட்டினர். "இப்பொழுதாவது தீபியர்கள் மன்னிப்புப் பெறத் தயாராயிருக்கின்றனரா?" என்று இவர் சிலரை அனுப்பி விசாரித்தார். தீபியர்கள் பிடிவாதமாகச் சண்டை செய்வதென்ற முடிவுக்குவந்ததோடு அலெக்ஜாந்தர் மனத்தை நிந்தனை மொழிகளாற் புண்படுத்தினர். கோபாவேசத்துடன் அலெக்ஜாந்தர் போரைத் தொடங்கினர். சில நாளில் அவர்கள் கோட்டை தரை மட்டமாய் விட்டது. தீபிஸ் நகரத்தைப் பாழாக்கிவிட இவர் உத்தரவு கொடுத்துவிட்டார். இவர் கட்டளை உடனே நிறைவேற்றப் பட்டது. கைக் குழந்தைகள், பெண்கள் உட்படத் தீபியர்கள் யாவரும் படுகொலை செய்யப்பட்டனர். மாட மாளிகைகள் இடித்துத் தள்ளப்பட்டன. அவ்வளவு பெரிய நகரத்தில் ஒரு மாளிகை மட்டும் ஒருவிதச் சேதமுமின்றி விடப்பட்டது. பாழடைந்த தீபிஸில் அந்த மாளிகை ஒன்றுமட்டும் நின்றது. அலெக்ஜாந்தர் தம் நாட்டுக் கலைகளிடம் வைத்திருந்த மதிப்பைக் காட்டுகின்றது. அஃது ஒரு கிரேக்கக் கவிவாணருடைய மாளிகையாகும். அதை இடித்துக் கவிவாணர் மனத்தைப் புண்படுத்த அலெக்ஜாந்தருக்கு மனம் வரவில்லை. தீபிஸின் கதியை உணர்ந்து மற்றைய கிரேக்கர்கள் அடங்கி விட்டனர்.

தீபிஸ் அழிந்தமைக்கு ஆதன்ஸ் வாசிகளே காரணமென்பதை அலெக்ஜாந்தர் உணர்ந்தார். மேலும் பாரசீக வேந்தரிடம் அவர்கள் பணவுதவி பெற்றதைக் கேள்வியுற்று அவர்க

ளுடைய அறியாமைக்கு இவர் வருந்தினர். கிரேக்க நாகரிகத்தின் மேன்மையை உலகிற்குக் காட்டிய ஒரு நகரத்தார் இவ்விதமாக இழிந்த செயல்களிற் பிரவேசித்ததற்காகத் தாம் வருந்துவதையும், தமக்கு உள்ளபடி ஆதன்ஸ்மீது அபிமான முண்டென்பதையும் அவர்களுக்கு எடுத்துக் கூறித் திமாஸ்தனிஸ் முதலிய ஒரு சில விஷமிகளை மட்டும் தண்டனை செய்யத் தம்மிடம் அனுப்பிவிடும்படி அலெக் ஜாந்தர் ஆதன்ஸ் வாசிகளுக்குத் தெரிவித்தார். திமாஸ் தனிஸ் ஆதன்ஸ் வாசிகளைப் பார்த்து,"ஆடுகளைக் காப்பாற்றி வரும் பட்டி நாயை ஓநாயிடம் ஒப்புவித்துவிட வேண்டாம்" என்று கேட்டுக்கொள்ளவே ஆதன்ஸ் வாசிகள் அலெக்ஜாந்தரை நல்ல வார்த்தைகளால் கௌரவப்படுத்தி ஒரு முறை திமாஸ்தனிஸையும் அவர் கூட்டாளிகளையும் மன்னித்து விடுமாறு வேண்டிக்கொண்டார்கள். அலெக்ஜாந்தரும் அவர்களுடைய வேண்டுகோளின்படி நடந்து கொண்டார்.

இந்த விதமாக வெளி நாட்டுக் குழப்பங்கள் எல்லாம் முற்றிலும் அடங்கிவிட்டன. இதற்கிடையில் ஒலிம்பியஸ் உள்நாட்டுக் கலகக்காரர்களை ஒழித்து விட்டனள். பிலிப்பின் இரண்டாம் மனைவியும் அவளது குழந்தையும் இரகசியமாகக் கொல்லப்பட்டனர். இச் செயலில் அலெக்ஜாந்தர் சம்பந்தப்படவே இல்லை. இவ்வளவும் இவருக்குத் தெரியாமலே நடந்த விஷயமாகும்.

பிறகு அலெக்ஜாந்தர் சிலநாள் மாசிடோனியாவில் அமைதியோடு இருந்தார். அச்சமயத்தில் தாம் இனிமேல் தொடங்கப் போகும் உலகப் போருக்கு வேண்டிய பல ஏற்பாடுகளை இவர் செய்யலாயினர். தாம் வெளியே சென்றிருக்கும் காலத்தில் மாசிடோனியாவை ஆளுவதற்கென்று



தமக்கு நம்பிக்கையுள்ள **ஆண்டிபேடர்** என்பவரை ராஜப் பிரதிநிதியாக நிறுவித் தம் சேனையின் ஒரு பகுதியை மாசிடோனியாவிலேயே நிறுத்தி விட்டுப் புறப்பட இவர் தீர்மானித்தார். தாம் உலகம் முழுவதும் வெற்றி கொண்டன்றித் திரும்புவதில்லை என்ற எண்ணத்தின்மேலேயே சகல காரியங்களையும் செல்வையாகக் கவனித்துத் தக்க ஏற்பாடுகள் செய்தார். பிறகு தேர்ந்தெடுத்த சில படைகளுடன் ஒரு நாள் கடவுளை வழிபாடுசெய்து, தம் தாயையும் வணங்கி விடை பெற்றுக்கொண்டு மாசிடோனியர் வாழ்த்தெடுப்பப் புறப்பட்டார். இவ்வளவும் இவர் பட்டம் வகித்த முதலாண்டில் நடந்த செய்திகள். திக்குவிஜயம் செய்யப் புறப்படுகையில் இவருக்கு ஆண்டு இருபத்தொன்று. இவ்வளவு சிறு வயதிலேயே இவ்விதமான துணிகரச்செயலில் இறங்கினவர் எவரும் இலர்.

## V

## பாரசீகப் படையெடுப்பு

பாரசீக மென்பது பழைய ஆரிய ராஜ்யங்களுள் ஒன்று. சரித்திரத்திற்குத் தெரிந்த மிகப் பழைய பெரிய ராஜ்யம் பாரசீகமே. அதை **ஸைரஸ்** என்பவர் கி. மு. 549-இல் ஏற்படுத்தினர். அது கிழக்கே சிந்து நதிக் கரையிலிருந்து மேற்கே ஆசியா முழுவதும், தெற்கே ஆப்பிரிக்காவில் எகிப்தும் அடங்கிய நாடாகும்.

அலெக்ஜாந்தர் படையெடுத்த காலத்தில் அதை ஆண்டிருந்தவர் டரியஸ் என்பவர். அவர் இவருக்கு விரோத

மாகக் கிரேக்கர்களுக்குப் பொருளுதவி செய்தமை முன்னே கூறப்பட்டுள்ளது. பாரசீகர்கள் தம் பெரிய ராஜ்யத்தை நெடுங்காலம் எதிர்ப்பாரின்றி ஆண்டு வந்ததால் செல்வச் செருக்குற்றுச் சுறுசுறுப்பிழந்து ஆடம்பர வாழ்க்கையில் மூழ்கி விட்டனர். அராபிக் கதைகளிலும் இந்து புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் சுக போகாதிகள் உண்மையாகப் பாரசீக வேந்தர்களால் அனுபவிக்கப்பட்டு வந்தன. அதனால் அவர்கள் அந்நிய தேசத்திலிருந்து வரும் பகைவர்களுடன் எதிர்த்துப் போர் செய்யும் சக்தியற்றவராயிருந்தனர். இந்த இரகசியத்தை அலெக்ஜாந்தர் நன்கு உணர்ந்திருந்தார்.

பாரசீகர்களுக்குச் சேனைகள் அதிகம். நாடும் சொந்த நாடு. 'தன்னூர் யானை அயலூர்ப் பூனை' என்னும் பழமொழி ஒருவாறு அங்கீகரிக்கத் தக்கதே. அலெக்ஜாந்தரின் சேனைகள் அளவிற் குறைந்தவை. அவைகள் புகுந்த நாடு அயல் நாடு. புதிய இடங்களின் கால இயல்பு மாசிடோனிய வீரர்களுக்கு ஒத்துக்கொள்ள வில்லை. ஒரு படைக்கு அந்நிய நாட்டில் ஆகார வசதி ஏற்படுத்துவது எளிதல்ல. புதிய நாட்டின் அமைப்பை நன்கறிந்து கொள்ளப் பூகோளப் படங்கள் அக் காலத்தில் இல்லை. பாரசீகர்கள் பெரிய கப்பற் படையை வைத்திருந்தனர். அலெக்ஜாந்தர் கப்பற் படை மிகவும் சிறியது. இவ்வளவு குறைகள் அலெக்ஜாந்தரிடமிருந்தும் இவரே வெற்றி யடைந்தமை ஆச்சரியமாகும். அவ் வெற்றிக்குக் காரணம் இவர் சேனைகள் நன்கு பழக்கப்பட்டமையே யாகும். அலெக்ஜாந்தர் சிறந்த யுத்த முறையை அறிந்தவர். இவரே தலைமை வகித்து முன்னணியில் நின்றார். பாரசீக வீரர்கள் பரம்பரை வீரர்கள் அல்லர். அவர்கள் பல தொழிலாளிகள். ஆயுதப் பயிற்சியின்றி யுத்த



களத்திற்குக் கொண்டுவரப்பட்டவர்களாவர். போர்த் திறமையைப் பற்றிப் பேசவேண்டுமா? பயிற்சி பெற்ற தலைவர்கள் அக் காலத்தில் பாரசீகச் சேனையில் இல்லை. ஆகையால்தான் அலெக்ஜாந்தர் சற்றும் அஞ்சாமல் பாரசீகர்களை அவர்களுடைய சொந்த நாட்டிலேயே எதிர்க்கத் துணிந்தார். இருந்த போதிலும் இவர் அவர்களை எளிதில் வென்றுவிடவில்லை.

மாசிடோனியாவினின்றும் புறப்பட்ட அலெக்ஜாந்தர் முதல் முதல் ஆசியாமைனரைக் கைப்பற்றிக் கொள்ள எண்ணினார். இச் செய்தி பாரசீக மன்னருக்குத் தெரிந்தது. அவர் ஒரு பெரிய சேனையுடன் அலெக்ஜாந்தரை எதிர்பார்த்து ஒரு கணவாயில் காத்திருந்தார். அவர் சேனை அலெக்ஜாந்தரின் சேனையைப்போல் பத்து மடங்கிருந்தது. அவ்விடமுள்ள எதிரிகளை அலெக்ஜாந்தர் தோல்வியுறச் செய்துவிட்டால் ஆசியாமைனர் முழுவதும் இவர் வசமாய் விடும். ஆனால் எதிரிகள் நின்றிருந்த நிலைமை இவருக்குப் பாதகமாக இருந்தது. பாரசீகர்கள் அவ்விடத்தை விட்டு நகராமலிருந்தால் தாம் அவர்களைத் தாக்குவதில் பிரயோஜனமில்லை என்பதைக் கண்ட அலெக்ஜாந்தர் நெடுநாள் யோசித்தார். கடைசியாகப் பகைவர் சேனை தங்கியுள்ள கணவாயோடு சம்பந்தப்பட்ட மலையைச் சுற்றிக்கொண்டு சென்று எதிரியைப் பின்புறம் தாக்க எண்ணினார். இவ்விதம் செய்ய இவர் சுமார் நூறு மைலுக்குமேல் சுற்றிச் செல்ல வேண்டியிருந்தது. பிறகு அலெக்ஜாந்தர் நோயாளிகளாக இருந்த சிலரை இஷ்யூ என்ற ஊரில் நிறுத்திவிட்டு மற்றச் சேனைகளுடன் புறப்பட்டார்.

பாரசீக வேந்தர் நெடுநாள் காத்திருந்தபின் அலெக்ஜாந்தர் ஓடிவிட்டதாக எண்ணி இவரைப் பின்பற்ற அக் கண

வாயை விட்டுத் தம் சேனையுடன் இஷ்யூவுக்கு வந்தார். அக் கணவாயின் அமைப்புத் தமக்கு நல்லவசதியாயிருந்ததையைப் பாரசீகர்கள் அறிந்து கொள்ளவில்லை. இதனாலேயே யுத்த தந்திரங்களில் அவர்களுக்குப் பழக்கமின்மை வெளிப்படுகின்றதன்றோ? இஷ்யூவுக்கு வந்த பாரசிகர்கள் நோயால் வருந்திக் கொண்டிருந்த கிரேக்கர்களைப் படுகொலை செய்தார்கள். இக் கொலைக்கு அலெக்ஜாந்தர் காரணர் ஆகார். ஏனென்றால் எதிரிகள் தங்களுக்கு ஏற்ற இடமாகிய கணவாயை விட்டு வாரார்கள் என்றெண்ணியே இவர் நோயாளிகளை இஷ்யூவில் நிறுத்திச் சென்றார். நல்ல யுத்தப் பயிற்சியையுடைய எவருமே அலெக்ஜாந்தரைப் போல்தான் எண்ணியிருப்பார்கள்.

இவர் மலையைச் சுற்றிக்கொண்டு வெகு கஷ்டத்துடன் கணவாயின் மறுபுறம் வந்து சேர்ந்தார். அங்கு இவர் தம் பகைவர்களைக் காணவில்லை. முதலில் அது வேறு கணவாயாக இருக்குமோ என்று ஐயங்கொண்டாரேனும் பிறகு எதிரிகளின் மதியீனம் இவருக்குப் புலப்பட்டது. பாரசீகர்கள் தங்களுக்கு ஏற்ற இடத்தை இழந்து விட்டது அவர்களுக்குத் தெய்வ பலமில்லாமையினால்தான் என்று இவர் தீர்மானித்தார். சில நாட்களில் இரு படைகளும் இஷ்யூவில் கைகலந்தன. கிரேக்கர்களே வெற்றி யடைந்தார்கள். பாரசீக மன்னர் புறங்காட்டி ஓடினார். ஆசியாமைனர் அலெக்ஜாந்தர் கைவசமாயிற்று.

இந்தப்போர் நடந்தபோது டரியஸின் பாடி வீட்டிற்கு அவரது குடும்பமும் வந்திருந்தது. அவர் உயிருக்குப் பயந்து ஓடுகையில் தம் குடும்பத்தை அங்கேயே விட்டுவிட்டுத் தாம் மட்டும் பிழைத்தால் போதுமென்று மாறுவேஷத்துடன் ஓடி-



விட்டார். ஆதலால் டரியஸின் குடும்பத்தார் அலெக்ஜாந்தரின் கைவசமானார்கள். அவர்களில் ஒருவர் டரியஸின் தாயார்; மற்றொருவர் மனைவியார்; வேறொருவர் அவர்தம் புதல்வியார். அலெக்ஜாந்தர் அவர்களைக் கண்டபோது அரச குடும்பத்தினருக்குத் தக்க மரியாதையுடனும், பெண்களுக்குத் தரவேண்டிய கௌரவத்துடனும் அவர்களுடன் பேசலானார். தமக்கும் டரியஸுக்கும் விசேஷமான பகை ஒன்றுமில்லையென்றும், அவர் பாரசீக அரசர், தாம் கிரேக்கர்களின் பிரதிநிதி என்ற ஏதுவை முன்னிட்டே அவருடன் சண்டை செய்ய நேர்ந்தது என்றும், அச் சண்டையில் தாம் டரியஸைக் கொல்வதில்லை என்றும், சமாதானம் ஏற்பட்டு அப் பெண்மணிகள் டரியஸிடம் சேர்க்கப்படும் வரையில் தம்மால் மிக்க கௌரவமாக நடத்தப்படுவார்கள் என்றும் உறுதி கூறினார். அலெக்ஜாந்தர் அவர்களிடம் கூறியபடியே நடந்துகொண்டார். பாரசீக ராணியாரின் அழகு ஆடவரைத் தீயவழியில் திருப்பக் கூடியதாக இருந்தும் அலெக்ஜாந்தர் அவரைத் தம் தாயார் போல நினைத்து வந்தார்.

இந்த யுத்தத்திற்குப்பின் நிகழ்ந்த செய்திகளில் இரண்டு அதிக முக்கியமானவை. அவற்றுள் ஒன்று டரியஸின் கடிதத்தைப் பற்றியது; மற்றொன்று அலெக்ஜாந்தருக்கு விரோதமாக டரியஸிடம் அனுப்பப்பட்டு இவரால் சிறை பிடிக்கப்பட்ட கிரேக்கத் தூதர்களைப் பற்றியது.

யுத்தம் முடிந்த சிலநாள் கழிந்தபின் டரியஸ் அலெக்ஜாந்தருக்குக் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுதியிருந்தார்:—

கிரேக்கர் நாயகமே!

நீர் சும்மா இருக்கின்றவர்களை எல்லாம் சண்டைக்கு இழுக்கின்றவராகக் காணப்படுகின்றீர். தெய்வபல மில்லாததால் யாம் இஷ்யூ போரில் பின்னடைய நேர்ந்தது. ஆதலால் யாம் தம்முடன் சமாதானம் செய்துகொள்வதுடன் தம்மை நண்பராக அடைய ஆசையுடையவராக இருக்கின்றோம். எமது குடும்பத்துப் பெண்களை நீர் எம்வசம் ஒப்புவித்துவிட விரும்புகிறோம்.

இங்ஙனம்,
உமது அன்பார்ந்த பதிலை எதிர்நோக்கும்
பாரசீக சக்கரவர்த்திகள்
**டரியஸ்.**

ஒரு பாரசீக சக்கரவர்த்தி இவ்வாறு எழுதுவது அவருடைய நிலைக்குக் குறைவாகவே யிருந்தது. எனினும் டரியஸ் தம்முடைய கௌரவத்தை விடாமல் எழுதியிருக்கும் சில சொற்களைக்கண்டு அலெக்ஜாந்தர் கோபங்கொண்டார். அந்தக் கடிதத்திற்கு இவர் உடனே தக்க பதிலளித்தார். அந்தப் பதில் வருமாறு:—

திரு டரியஸ் அவர்களுக்கு,

உங்கள் முன்னோர்கள் மாசிடோனியாவின்மீதும் மற்றுமுள்ள கிரேக்க நாடுகளின் மீதும் அகாரணமாகப் படையெடுத்து வந்து செய்த அழிவுகளுக்கு அளவேயில்லை. டரியஸாகிய நீர் பலரை எனது தந்தையாருக்கு விரோதமாகத் தூண்டி அவருக்கு மிக்க சிரமத்தைக் கொடுத்திருக்கின்றீர். இம்மட்டோ? என் தந்தையாரைக் கொலை செய்தவர்களுக்கு அத்தொழிலைச் செய்ய உதவியாக நின்றவர் நீரே யல்லவோ? அடுத்த படியாக, நான் கிரேக்கநாட்டில் சமாதானத்தை நிலைநாட்டிவிட்டுத் திரேஸர்களோடு எதிர்க்கச்சென்றிருந்த காலத்தில் நீர் பல கிரேக்கத் தலைவர்களுக்குக் கடிதமெழுதியும் பண உதவி செய்தும் அவர்களை எனக்கு விரோதமாகக் கலகம் செய்யத் தூண்டினீர்.



நீர் பாரசீகத்துச் சிங்காசனத்தை நியாயமாகப் பெற்றவர் அல்லவே? வஞ்சனையான வழியால் பாரசீகப் பட்டத்துக்கு விரோதமாக அரசானீர்.

இவற்றிற்கெல்லாம் பழிவாங்க நான் உம் நாட்டின்மீது படை யெடுத்து வந்தேன். கிரேக்கர்கள் பாரசீகத்தை வெல்ல வேண்டுமென்று விரும்பி என்னைத் தங்கள் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததன்மேல் நான் உம்மீது சண்டைக்கு எழலானேன். நேர்மையான யுத்தத்தில் முதலில் உமது சேனாதிபதிகளையும் பிறகு உம்மையும்வென்றுள்ளேன். நான் இப்பொழுது ஆசியா முழுவதற்கும் தலைவனாகி விட்டேன். உமது பக்கம் நின்று போர் புரிந்து கடைசியாக என்னை வந்து சேர்ந்த தலைவர்கள் என்னிடம் சந்தோஷமுள்ளவர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருந்து வருகின்றார்கள்.

நீர் உம் குடும்பத்தினரைப் பெற விரும்பினால் என்னிடம் நேராக வந்து ஆசியாவின் அதிபதியாக என்னைப் பாவித்துக் கேளும். இப்பொழுது இன்னும் நீர் உமக்கு வேண்டியவற்றையெல்லாம் என்னைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். நேரில் வந்தால், நான் உமக்கு ஏதாவது துரோகம் செய்துவிடுவேன் என்று உமக்கு அச்சமிருக்குமானால், உமக்கு நம்பிக்கையுள்ள சிலரை அனுப்பும்; நான் உம்மை ஒன்றும் செய்ய மாட்டேன் என்று உறுதி மொழி காட்டி உம்மைத் திருப்தி செய்கிறேன்.

இனி எனக்குக் கடிதம்எழுதுவதாக இருந்தால் சமத்துவ முறையில் எழுதவேண்டாம். பழைய கௌரவத்தை விட

இஷ்டமில்லையானால் என்னுடன் இன்னும் யுத்தம் செய்யத் தயாராய் இரும். போர் செய்யப் பயந்து முதுகிட்டோடி மறைந்து திரிவது வீரமாகுமா? நீர் எங்குச் சென்றாலும் நான் பின் தொடர்ந்து வந்து உம்மைப் பிடித்துக் கொள்வேன். உமது குடும்பத்தாருக்கு ஒருவிதக் கெடுதியும் மரியாதைக்குறைவும் இவ்விடத்தில் நேராவென்று நான் உமக்கு உறுதி கூறுகின்றேன்.

இங்ஙனம்,
**அலெக்ஜாந்தர்.**

இஷ்யூ யுத்தத்திற்குப் பின் நிகழ்ந்த வேறொரு சம்பவமாவது:

யுத்தத்தின் முடிவில் பாரசீக வேந்தரைச் சேர்ந்த நான்கு கிரேக்கர்கள் அலெக்ஜாந்தரின் படை வீரரால் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் **ஸ்பார்ட்டா** நகரத்துக் கிரேக்கர்; இருவர் தீபியர்கள்; மற்றொருவர் ஆதன்ஸ் வாசி. கிரேக்கர்கள் உண்மையாக அலெக்ஜாந்தரை விரும்பவில்லை. அதன் காரணமாக அவர்கள் நான்கு தூதர்களைப் பாரசீக வேந்தரிடம் அனுப்பி அலெக்ஜாந்தரின் உயிருக்கு உலை வைக்கச் சதியாலோசனை செய்து வந்தார்கள். ஆனால் தெய்வச் செயலால் அந் நால்வரும் அலெக்ஜாந்தரால் சிறை பிடிக்கப் பட்டனர்.

ஸ்பார்ட்டர் மாசிடோனியரின் விரோதிகள்; ஆதலால் அந் நால்வரில் ஸ்பார்ட்டர் கொல்லப்பட்டார். தீபியர்களை அலெக்ஜாந்தர் சும்மா விட்டு விட்டார். தீபியருக்குத் தாம் முன்பு செய்த தண்டனையே போதுமானது என்று இரக்கங்கொண்டு இப்படிச் செய்தார் போலும். ஆதன்ஸ் வாசியை



மட்டும் இவர் தம்மிடமே நிறுத்திக்கொண்டார். மேலும் அவரிடம் மிக்க அன்புகாட்டி இவர் நெருங்கிப் பழகிவந்தார். ஆதன்ஸ் மீது தாம் வைத்திருந்த அன்பு இவரை அப்படிச் செய்யத் தூண்டியது.

---

## VI

## பாரசீகத்தை அடிப்படுத்தல்

பிறகு அலெக்ஜாந்தர் **சிரியாவையும், எகிப்தையும்** கைப்பற்ற எண்ணினார். இவற்றை வெற்றிகொள்ளாமல் பாரசீகத்துக்குள் நுழைந்தால் அலெக்ஜாந்தர் பகைவர்களுக்கு நடுவில் அகப்பட்டுக் கொள்வது எளிதாய்விடும். இவ்விரு நாடுகளையும் விரைவிற் பற்றிக்கொள்ளாவிடின் டரியஸ் தம் சேனைகளைத் தயார் செய்துவிட்டபின் தாம் அதிகமாகப் பிரயாசைப்பட வேண்டுமென்று கருதி இவர் தம் காரியத்தில் முனைந்து நின்றார். அலெக்ஜாந்தர் டரியஸாக இருந்திருப்பாரேல் விரைவில் ஒரு சேனையைக் கூட்டிக்கொண்டு பகைவரைத் தாக்கியிருப்பார். டரியஸுக்கு அந்த யுக்தி தோன்றவில்லை.

சிரியாவின் கடற் கரையில் **டயர்** என்ற ஒரு பட்டினமுண்டு. அது சிறந்த பாதுகாவலோடு கூடியது. அலெக்ஜாந்தர் அதைப் பிடித்துவிட்டால் சிரியா இவர் கைக்கு வந்ததுபோன்றதுதான். பிறகு எகிப்தை வெற்றி கொள்வதிலும் கஷ்டமிராது. இந்த விஷயத்தை அலெக்ஜாந்தர் நன்கு அறிந்திருந்தார். சிலநாளில் டயரும் பிடிபட்டது.

டயர் பிடிபடுவதற்குச் சற்று முன்னர் டரியஸ் ஒரு தூதரை அலெக்ஜாந்தரிடம் அனுப்பி வைத்தார். டரியஸ் தம் ராஜ்யத்திற் பாதியையும் அளவற்ற திரவியத்தையும் அலெக்ஜாந்தருக்குக் கொடுத்துத் தாம் சமாதானம் செய்து கொள்வதாகவும் தம் பெண்ணை இவருக்கு மணம் செய்து கொடுப்பதாகவும் இவற்றிற்குப் பிரதியாக அலெக்ஜாந்தர் டரியஸின் குடும்பத்தை அவரிடம் அனுப்பிவிட்டு நட்புப் பாராட்ட வேண்டுமென்பதாகவும் அத் தூதர் இவரிடம் கூறினர். அலெக்ஜாந்தர் தூதர் கொண்டுவந்த செய்தியைக் குறித்துத் தமது மந்திரிகளுடன் யோசனை செய்தார். அக் கூட்டத்தாரில் **பர்மீனியோ** என்பவர் ஒருவர். அவர் அலெக்ஜாந்தருக்கு உகந்த துணைவரில் ஒருவராவர். அவர் டரியஸ் கேட்டுக்கொண்டபடி அலெக்ஜாந்தர் நடந்து கொள்வது உசிதமென்று கூறினார். அலெக்ஜாந்தர் அந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. "நான் பர்மீனியோவாக இருப்பின் அங்ஙனமே செய்வேன்" என்று இவர் அச்சமயம் கூறிய பதிலை நோக்குமிடத்து அப்படிச் செய்வதைத் தம் நிலைமைக்குக் குறைவாகவே இவர் கருதினார் என்று தோன்றுகின்றது.

அந்தத் தூதரிடம் அலெக்ஜாந்தர் டரியஸுக்கு ஒரு கடிதம் எழுதி யனுப்பினார். அதன் கருத்துப் பின் வருவது:

"நீர் பாதி ராஜ்யத்தையும் உம்முடைய பெண்ணையும் கொடுப்பதாகக் கூறுகின்றீர். உமது ராஜ்யமும் உம்முடைய பெண்ணும் என்னுடைய அதிகாரத்திற்குள் இருப்பதை அறியீரோ? சில நாளில் நான் உம்முடைய முழு ராஜ்யத்தையும் அடிப் படுத்தி விடுவேன். உம் பெண் என்வசமுள்ளவள் தானே! நான் விரும்பினால் அவளை மணஞ் செய்து கொள்வதில் என்ன தடை யிருக்கப் போகின்றது? நீர் பழைய கௌரவத்தை இன்னும் விட்டுவிட்டவராகக் காணேன். உமக்கு ஏதாவது வேண்டுமானால் நீர் நேரில் வந்து என்னை உம்முடைய தலைவனாகக் கருதிக் கேட்டுப் பெற்றுக் கொள்ளும்."



இக் கடிதத்துக்குப் பின் டரியஸுக்கும் இவருக்கும் கடிதப் போக்கு வரவு ஒன்றும் இல்லை.

டயர் பிடிபட்ட சில நாளில் சிரியா அலெக்ஜாந்தர் வசமாயிற்று. பிறகு இவர் எகிப்துக்குச் சென்றார். அங்கே அதிகமாகப் போர் ஏற்படவில்லை. இவர் அங்கே சில மாதங்கள் தங்கினார். அச்சமயம் தம் பெயரால் **நீலநதி**யின் முகத்துவாரத்தில் இவர் ஒரு நகரத்தை ஏற்படுத்தினார். **அலெக்ஜாந்திரியா** என்னும் அந் நகரம் அது முதற்கொண்டு இன்றளவும் பல வகைகளிற் சிறந்து விளங்கி வருகின்றது. ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா என்னும் கண்டங்களின் வியாபாரிகள் பழையகாலந் தொட்டுச் சந்திக்கு மிடமாக அது இருந்துவருகின்றது. கிழக்கையும் மேற்கையும் பிணித்து மேம்பட்டுப் பொலிவுறும் பட்டினம் அதுவேயாகும் என்பதை ஊகித்தறிந்தே அலெக்ஜாந்தர் அதை நிருமாணஞ் செய்தார்.

எகிப்தியர்கள் பழைய காலத்தில் நாகரிகம் வாய்ந்தவர்களாய் இருந்தவர்கள். பாரசீக அரசாட்சியில் எகிப்தியர்களுக்கு மதசுயேச்சை வழங்கப்படவில்லை. அவர்களுடைய கோவில்கள் கவனிப்பாரற்று அழியக்கூடிய நிலையில் இருந்தன. பாரசீகர்கள் எகிப்தியர் தெய்வ வழிபாட்டு முறைகளை இகழ்ந்துவந்தனர். ராஜதந்திர நிபுணரான அலெக்ஜாந்தர் எகிப்

தியர் அன்பைப் பெறவேண்டுமாயின் மதவிஷயத்தில் அவர்களிடம் தாராளசிந்தையைக்காட்டவேண்டுமென்று நினைத்தார். அவர்களின் விசுவாசத்தைப் பெறும் பொருட்டு இவர் அவர்களுடைய கோவில்களைப் புதுப்பித்தார். தாமும் சில சமயங்களில் அவர்களுடைய கோவில்களுக்குச் சென்றுவந்தார். இதனால் அவர்கள் அலெக்ஜாந்தரை மனமுவந்து நேசிக்கலாயினர்.

பாரசீகர்கள் பெரிய ராஜ்யத்தைக் கட்டி ஆண்டு வந்தார்களே ஒழிய அவற்றின் பல பாகங்களை ஒழுங்காகப் பரிபாலிக்கவில்லை. அரசியல் அமைப்புக்கள் சீர் கேடுற்றிருந்தன. கவனக் குறைவான அரசாட்சியின்கீழ் வளப்பமுள்ள எகிப்து வறுமை வாய்ப்பட்டிருந்தது. அலெக்ஜாந்தர் எகிப்தில் தம் அதிகாரத்தைப் பரப்பவும் அதை ஒழுங்குபடுத்தவும் முயற்சி செய்தார். எகிப்தின் வளம் எத்தகைய உண்மையுள்ள பிரதிநிதியையும் தமக்குத் துரோகம் நினைக்கத் தூண்டக் கூடுமென்பதை நினைத்து அலெக்ஜாந்தர் அதன் ஆளுகை விஷயத்தில் ஒரு சூழ்ச்சி செய்தார். ராஜீய வியவகாரங்களைக் கவனித்துக்கொள்ள எகிப்தியரைப் பிரதிநிதிகளாக நியமித்தார்; பணவசூல், இராணுவம் இந்த இரண்டையும் கிரேக்கர்கள் பார்வையில் விட்டு வைத்தார். இவ்வித இரட்டை ஆட்சியால் எகிப்தியர்கள் தமக்கும் அரசாட்சியிற் பங்கிருப்பதாக எண்ணி மகிழ்ந்தார்கள். கிரேக்கத் தலைவர்கள் அலெக்ஜாந்தரை மோசஞ்செய்ய நினைத்தும் அது சாத்தியமில்லாமற் போயிற்று. இவ்வித முறை பிற்காலத்திற் பலராற் கையாளப்பட்டு வந்ததை நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் கிளைவ் வங்காளத்தில் இம் முறையைத்தான் ஏற்படுத்தினார்.



சில மாதங்களுக்குப் பின் அலெக்ஜாந்தர் பாபிலோனை நோக்கிப் புறப்பட்டார். வழியில் பாரசீகர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. கிரேக்கர் பாரசீகர்களை இந்த யுத்தத்தில் வெல்வது கஷ்டம்போல் தோன்றியது. அதனால் அலெக்ஜாந்தர் வெகு நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அச்சமயம் பாரசீகர்களை நள்ளிரவில் அவர்கள் அறியாமற் சென்று தாக்குவது நலம் என்று ஒருவர் யோசனை கூறினார். நாம் வெற்றியைத் திருடுகின்றவர் அல்லர் என்று இவர் கூறியது அப்பொழுதுதான். அதிகக் கஷ்டத்தின்மேல் அப் போரில் அலெக்ஜாந்தரே வெற்றி பெற்றார். டரியஸ் மறுமுறை புறமுதுகிட்டோடினார். அவர் அலெக்ஜாந்தரிடமிருந்து தப்பி ஓடிவிட்டபோதிலும் கடைசியாகத் தமக்கு உறவினனும் ஒரு மாகாணப் பிரதிநிதியுமான ஒருவனால் சிறை செய்யப் பட்டார். அலெக்ஜாந்தரைத் துரத்திவிட்டுப் பாரசீகத்தைத் தானே ஆள வேண்டுமென்பது அந்தப் பிரதிநிதியின் பேராசை.

இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற அலெக்ஜாந்தர் அத்தலைவனைத் தாக்கி டரியஸை விடுவிக்க எண்ணினார். ஒரு சக்கரவர்த்தியை அவர் நிழலில் உள்ளவன் ஒருவன் வஞ்சிப்பதென்றால் அதை இவர் எங்ஙனம் பார்த்திருக்க முடியும்? அவ்வாறு பார்த்துக் கொண்டிருப்பது அறமும் ஆண்மையுமல்லவென்பது இவரது அபிப்பிராயம். ஆதலால் அந்தப் பிரதிநிதியைத் தாக்க இவர் விரைவாக ஒரு சேனையை அனுப்பிவிட்டுத் தாமும் பின் தொடர்ந்தார்.

தான் யுத்தத்திற்குத் தயாராவதற்குள் கிரேக்கப்படை வந்துவிட்டதை அறிந்த ராஜத் துரோகியாகிய வஞ்சகன்

டரியஸை ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டு தன் பரிவாரங்களுடன் ஓடினான். கிரேக்கர்களும் பரபரப்புடன் பின்தொடரவே அத் தலைவன் தாம்பிழைத்தாற் போதுமென்றெண்ணி டரியஸைக் குத்திக் காயப்படுத்தி விட்டு ஓரிடம் சென்று ஒளிந்துகொண்டான்.

டரியஸ் மரணாவஸ்தையில் இருக்கும் தருணத்தில் ஒரு கிரேக்க வீரன் அவரை நெருங்கினான். பாரசீக வேந்தரின் பரிதாப நிலைக்கு அவன் வருந்தி, குத்துண்டு வீழ்ந்தவருக்கு வேண்டிய உபசாரங்கள் பண்ணினான். டரியஸ் குடிக்க நீர் வேண்டுமென்று குறிப்பிக்க அவன் உடனே உண்ணீர் கொணர்ந்து கொடுத்தான். டரியஸுக்குக் கிரேக்க பாஷை தெரிந்திருந்தால் அல்லது அவ்வீரனுக்குப் பாரசீக மொழி பழக்கமிருந்திருந்தால் அவர் அலெக்ஜாந்தர் தம் குடும்பத்தைக் கௌரவமாக நடத்தி வந்ததற்காக அவருக்கு வாழ்த்துக் கூறி நன்றியறிதலைத் தெரிவித்திருப்பார்.

அலெக்ஜாந்தர் டரியஸிடம் வரும் முன்னரே டரியஸின் உயிர் போய்விட்டது. குத்துண்டு இறந்துபோன சக்கரவர்த்தியின் சவத்தைக் கண்ட அலெக்ஜாந்தர் மனம் பதறியது. நல்ல இடத்தில் உயர் பதவியில் இருக்கக் கூடிய ஒருவர் ஆற்றுவாரின்றித் தனியராய் ஓர் இழிஞனாற் குத்துண்டு வெறுந் தரையில் மாண்டு கிடப்பதைக்காண இவர் கண்களில் நீர்த் ததும்பியது. அலெக்ஜாந்தர் முன்னொருகால் டரியஸின் குடும்பத்தாரிடம் தமக்கும் டரியஸுக்கும் தனிப்பட்ட காரணத்தால் மனஸ்தாபமில்லை என்று சொல்லியதன் உண்மை இங்கே வெளியாகின்றது. பிறகு இவர் தமது மேலங்கியைக் கழற்றி அச் சவத்தை அதனாற் போர்த்துத் தம் உணர்ச்சியைக் காட்டினார். அப் பிணத்தைச் சிறந்த



வேலைப்பாடுகளமைந்த ஒரு சவப் பெட்டியில் வைத்து அப் பெட்டியை டரியஸின் குடும்பத்தினரிடம் சேர்ப்பித்தார். டரியஸின் ஈமக் கிரியைகள் சிறப்பாக நடக்க இவர் பொருளுதவி செய்தார். டரியஸைக் கொன்ற ராஜத் துரோகியைத் தேடிப் பிடித்து அவனுக்குக் கொலைத் தண்டனை விதிக்கும் வரையில் இவர் மனம் அமைதியுறவில்லை.

சில மாதங்களில் பாரசிக முழுதும் அலெக்ஜாந்தர் சுவாதீனமாயிற்று. இவர் பாபிலோனிற் புகுந்தபோது அங்குள்ளவர்கள் இவரைச் சந்தோஷமாக வரவேற்றனர். பாரசீகர்களை மகிழ்விக்க வேண்டி அலெக்ஜாந்தர் சில நாளில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் பாரசிகர்கள் டரியஸ் காலத்தில் பெற்றிருந்த உரிமைகளைப் பின்னும் பெறுவாரென்றும், தமக்குப் பாரசிகர் மத விஷயத்திலும் அரசியற் கொள்கைகளிலும் மாறுபாடான அபிப்பிராயமில்லையென்றும் கூறப்பட்டிருந்தன. பாபிலோனில் தங்கியிருந்த காலத்திற் சில சமயங்களில் கீழ்நாட்டு நாகரிகப்படி இவர் பாரசீக உடை தரித்துக் கொண்டார்; பாரசீகர்களுடைய கோயில்களுக்குப் போய் வருவதை வழக்கமாக வைத்துக்கொண்டார்.

அலெக்ஜாந்தர் இத்தனை விதங்களில் பாரசீகர்களுக்கு விருப்பமாக நடந்துகொண்டும் வடநாட்டுப் பாரசிகத் தலைவர்கள் இவரை விரும்பவில்லை. அவர்கள் இயற்கையாகவே வீரர்களாக இருந்து வந்ததுடன் பிறர் கட்டுப்பாட்டுக்கு அடங்காதவர்களாயும் வாழ்ந்து வந்தனர். டரியஸுக்கு அடங்காத அவர்கள் தம் இனத்தாரல்லாத கிரேக்கர்களுக்கு எளிதில் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிவார்களா? அவர்களை எப்படி வழிக்குக் கொண்டுவருவதென்று அலெக்ஜாந்தர் சிந்தித்தார்.

அன்பே சிறந்த ஆயுதமாக இவருக்குத் தோன்றிற்று. வட பிரிவினரில் ஒரு தலைவர் மற்றவர்களைக் காட்டிலும் செல்வாக்குடையவராக இருந்தார். அவருக்கு **ராக்சனி** யென்றொரு பெண் இருந்தாள். அலெக்ஜாந்தர் அந்தக் கன்னிகையை விவாகம் செய்துகொண்டார். இம் மணவினைக்குப் பின்பு நாட்டில் அமைதி குடிகொண்டது.

பிறகு இவர் நாட்டை ஆளத் தொடங்கி அங்கங்கே சில பாரசீகக் கவர்னர்களை ஏற்படுத்தினார்; வரி வசூல் செய்யச் சில கிரேக்கர்களை நியமித்தார். எகிப்தில் அமைந்தது போல் இரட்டை யாட்சி முறை இங்கும் அமைந்தது. ஒரு நாட்டை வென்றவர்கள் அந்நாட்டவர்க்கு இராணுவப் பயிற்சி தருவது சரித்திரத்திற்குப் புதுமையான விஷயமாகும். அலெக்ஜாந்தர் பாரசீகர்களுக்குக் கிரேக்க முறைப்படி போர்ப் பயிற்சியளித்து அவர்களைக் கிரேக்க வீரர்களுக்குச் சம அந்தஸ்தில் வைத்தார். அதற்குப் பின் நடந்த யுத்தங்களில் அலெக்ஜாந்தருக்கு உற்ற துணையாக இருந்து பாரசீக வீரர்களும் போர் புரிந்து வந்தார்கள். பழைய பாரசீக வீரர்களுக்கும் இவரால் பழக்கப்பட்ட வீரர்களுக்கும் வேற்றுமை உண்டு.

---

## VII

## ஜீலம் சண்டை

பாரசீகத்தில் தம் அதிகாரம் ஸ்திரப்பட்ட பின் அலெக்ஜாந்தர் அதற்கும் கிழக்கே உள்ள நாடுகளை வெற்றிகொள்ளப் புறப்பட்டார். ஒவ்வொரு நாடாக அவர் ஜயித்துக்கொண்டு **ஆப்கானிஸ்தானத்தின்** வழி



யாகக் **காபூல்** நதியைப்பற்றிச் சென்று **கைபர்** கணவாயைக் கடந்து **இந்தியா**வுக்குள் நுழைந்தார்.

இந்தியாவின்மேல் படையெடுத்த முதல் ஆரியர் இவரல்லர். இவருக்குப் பன்னூறாண்டுகளுக்கு முன்பே **மத்திய ஆசியா**விலிருந்து பல ஆரியர்கள் வெவ்வேறு காலங்களில் கூட்டம் கூட்டமாக வந்து பஞ்சாபில் தங்கிப் பிறகு கங்காப் பிரதேசங்களிலும் பரவியிருந்தார்கள். இந்தியாவுக்கு வரும் ஜனங்கள் எவ்வளவு பலசாலிகளா யிருந்தபோதிலும் இந்நாட்டின் செழுமையும் காலநிலையும் அவர்களை இரண்டொரு தலைமுறைகளிற் சோம்பேறிகளாகச் செய்து விடத்தக்கவை. இக் காரணத்தினால் புதியவர்களாக வந்த பகைவர்களை வெல்லும் ஆற்றல் இந்தியர்களுக்கு இல்லாமற் போயிற்று.

கிரேக்கர்களுக்கு நூறாண்டுகளுக்கு முன் பாரசீகர்கள் இந் நாட்டின்மீது படையெடுத்து வந்து சிந்து நதிக்கு மேற்கேயுள்ள பிரதேசத்தைப் பல ஆண்டுகள் ஆண்டு வந்தனர். 'ஸ' என்னும் எழுத்து அவர்கள் மொழியி லில்லாமையால் சிந்துவை "ஹிந்து" என்றும் அதுபாயும் பிரதேசத்தை "ஹிந்தியா" என்றும் அவர்கள் வழங்கத் தொடங்கினர். நாளடைவில் ஹிந்தியா என்ற பெயர் அப்பிரதேசத்தை மட்டும் குறிக்காமல் தற்கால இந்தியாவை - இமயம் முதல் குமரி வரையிலுள்ள நிலப்பரப்பைக் குறிக்கலாயிற்று.

பாரத கண்டத்தின் செழுமை இந்நாட்டவரை உடல் வலியற்றவராக்கக் காரணமாயிருந்தபோதிலும், அஃது அறிவு வளர்ச்சிக்கு அநுகூலமாக இருந்தது. ஆகாரக் கஷ்டமில்லாத

நால் இதில் வாழ்ந்த நம் முன்னோர்கள் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்வதில் நாட்டமுள்ளவர்களா யிருந்தனர். நாட்டினிடை நாகரிகமும் செல்வமும் கலைகளும் ஓங்கி யிருந்தன.

அலெக்ஜாந்தர் படை யெடுத்து வந்தபோது வட இந்தியாவில் மகத ராஜ்யம் உன்னத ஸ்திதியில் இருந்து வந்தது. நந்தர்கள் அதைப் பரிபாலித்துவந்தனர். மற்றைய பாகங்களைப் பல சிற்றரசர்கள் ஆண்டு வந்தனர். அவர்களுக்குள் ஒற்றுமை என்பதே கிடையாது. ராஜ சமஸ்தானங்கள் நிரம்பச் செல்வமுடையனவாக இருந்தன. வேறு நாட்டார் பலவித சுக போகங்களை இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர்.

இந்தியாவின் புகழ் கிரீஸ் தேசத்திற் பரவியிருந்தது. அலெக்ஜாந்தர் சிறு வயதிலேயே இந்நாட்டைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தார். இவர் இந்தியக் கலைகளையும் நாகரிகத்தையும் பாராட்டியுள்ளார். இந்திய வீரர்களைப் பற்றி இவர் கேள்வியுற்றிருந்ததுமன்றிப் பாரசீக அரசருடன் தாம் செய்த போர்களில் இந்திய வீரர்கள் அம்மன்னருக்கு உதவியாக யுத்தம் செய்தபோது அவர்களின் போர்த்திறமையை நேரிற் கண்டு மெச்சியு மிருக்கிறார். இங்ஙனமிருந்தும் இவர் இந்தியாவை எளிதில் வென்றுவிடலா மென்று நினைத்தார். இந்தியாவில் ஒற்றுமை இல்லை என்பது இவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

அக்காலத்தில் பாஞ்சாலத்தைப் பல அரசர்கள் ஆண்டு வந்தனர். அவர்களில் செல்வத்திலும் வலிமையிலும் **பூரு** என்பவர் மற்றெல்லோரைக் காட்டிலும் சிறந்து விளங்கினர்.



அவரைப் **புருஷோத்தமர்** என்றும் சொல்வர். ஒருவர் நல்ல நிலையில் வாழ்வதைக் கண்டு அவருக்கு அருகில் இருப்பவர்கள் அவர்மேற் பொறாமை கொள்வது முக்காலத்திலும் உண்டு. பூருவின் செல்வத்தையும் அதிகாரத்தையும் கண்டு அயலான் ஒருவன் பொறாமை கொண்டான். பூருவைத் தொலைத்து விடவேண்டுமென்பது அவனுடைய எண்ணம். அதை நிறைவேற்ற அவன் வலிமை போதியதன்று. அதற்காக அவன் தக்கசமயத்தை எதிர்நோக்கியிருந்தான். கிரேக்கர்கள் இந்தியாவின்மேற் படை யெடுத்து வரப்போகிறார்கள் என்று தான் கேள்விப்பட்டவுடன் அவன் அலெக்ஜாந்தரிடம் சென்று இங்குள்ள இரகசியங்களை யெல்லாம் விளக்கமாகத் தெரிவித்தான். புருஷோத்தமரின் பலத்தைப் பற்றியும் அவருடன் சண்டை செய்யவேண்டிய விதத்தைப் பற்றியும் அவன் விஸ்தரித்தான்.

“இந்தியா ஒருநாளும் அன்னியர்களால் ஜயிக்கப் படவில்லை; இந்தியர்களே தம் நாட்டை அந்நியர்கள் கையில் ஒப்புவித்திருக்கிறார்கள்” என்று விவேகானந்தர் கூறியிருப்பது இங்கு ஆராயத்தக்கது. அலெக்ஜாந்தருக்குப்பின் **கோரி முகமத்** முகமதிய ராஜ்யத்தை ஸ்தாபித்ததும், **பாபர்** மொகலாய ராஜ்யத்தை ஸ்தாபித்ததும், **கிளைவ்** வங்காளத்தில் ஆங்கிலேய ராஜ்யத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டியதும் பொறாமைக்காரர்களாகிய இந்தியர்களின் உதவியைக் கொண்டே என்பதை இந்துதேச சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளுகிறோம்.

வெறும் வாயை மெல்லுகின்றவர் அவல் அகப்பட்டால் விடுவாரா? அலெக்ஜாந்தர் தம் காதைக் கடித்தவர்க்கு இடம் கொடுத்தது ஆச்சரியமன்று. சிறு ராஜ்யங்களிற் பல

அலெக்ஜாந்தரின் தலையைக் கண்டவுடனே கீழ்ப்படிந்து விட்டனர். சிலஅரசர்கள் வெகுமானங்களுடன் அலெக்ஜாந்தரை எதிர்கொண்டு உபசரித்தனர். வெகுசிலரே அவரை எதிர்த்தனர். பெருந்தீயின் முன் சிறுநீர் எம்மாத்திரம்? ஒவ்வொருவராக எதிர்த்தோர் யாவரும் தோல்வியுற்று இவருக்குக் கீழ்ப்படிந்து விட்டனர்.

அலெக்ஜாந்தரின் படை வருவதைக் கேட்ட பூரு ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு தயாரானர். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குத் தூதர்களை அனுப்பிப் பொதுப் பகைவரை எதிர்க்கத் தமக்கு உதவி செய்யுமாறு அங்குள்ள சிற்றரசர்களை வேண்டிக்கொண்டார். காஷ்மீரத்தை ஆண்டு வந்த அவருடைய சகோதரர்மட்டும் உதவிக்கு வருவதாகத் தெரிவித்திருந்தார். வேறு எவரும் உதவிசெய்ய முன்வரவில்லை. பொறாமைக் காய்ச்சல் அவர்களைப் பூருவுக்கு உதவி செய்யத் தூண்டவில்லை. தம் சகோதரரின் உதவியும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஏனெனில், அவர் உதவிக்கு வரும் விஷயத்தை முன்னதாக அறிந்துகொண்ட அலெக்ஜாந்தர் இரண்டு சேனைகளும் ஒன்று சேராமல் தம் படைகளிற் சிலவற்றை இடையிலே நிறுத்தி விட்டார். இவ்வாறாக ஒருவர் உதவியும் இல்லாததனால் பூரு தோல்வியுறவேண்டி நேர்ந்தது.

இருவர் சேனைகளும் ஜீலம் நதியின் இரு கரைகளிலும் நின்றன. அலெக்ஜாந்தர் ஜீலம்நதியைக் கடக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். பூரு அவரைக் கடக்க வொட்டாமல் தடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். அவரிடம் யானைப்படை ஒன்றிருந்தது. கிரேக்கர்கள் இதுவரையில் யானைப்படையைக் கண்டதில்லை. யானைகள் பிளி



றும் சத்தத்தை அக்கரையினின்றுங் கேட்ட கிரேக்கர்களின் குதிரைகள் அஞ்சின. அப்பொழுது மழைக்காலம் சமீபித்தது. அலெக்ஜாந்தர் தாம் நெடுங்காலம் அங்கேயே தங்கிவிடப் போவதாக ஒரு பொய்வதந்தியைப் பரவச்செய்தார். நெடுநாளைக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அவர் திரட்டினர்; கூடாரங்களைப் பழுது பார்த்துப் பலப்படுத்தினர். புருஷோத்தமர் இவற்றை யெல்லாம் கண்டு தாமும் அங்கேயே காத்திருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்துகொண்டார். ஏதாவது ஒருநாள் நள்ளிரவில் அலெக்ஜாந்தர் தம் சேனைகளைப் போருக்கு ஆயத்தம் செய்வதைப்போல் போர் முரசை முழக்குவார். அதைக் கேட்டுப் பூரு தம் சேனைகளை எழுப்பி அணி வகுத்துப் போருக்குத் தயார்ப்படுத்தி, அலெக்ஜாந்தர் வாராமையால் மோசம் போவார். இப்படிப் பலநாட்கள் கழிந்தன. இதற்குள்ளாக அலெக்ஜாந்தர் ஆற்றைக் கடப்பதற்கு எளிதான இடம் யாதென்று ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இவர் தங்கியிருந்த இடத்திற்குமேல் பதினறு மைல் தூரத்தில் ஓரிடம் ஆற்றைக் கடப்பதற்கு இலகுவானதாகத் தோன்றியது. ஓர் இரவில் அலெக்ஜாந்தர் தம் சேனைகளின் ஒரு பகுதியைத் தாம் இருந்த இடத்திலேயே நிறுத்தி விட்டு மற்றச் சேனைகளுடன் புறப்பட்டார். யுத்தத்தின் முடிவைக் கவனித்துக் கொண்டு தமக்கு வெற்றி கிடைக்கக் கூடுமாயின் தகுந்த சமயத்தில் நேராக ஆற்றைக் கடந்து வந்துவிடும்படி தாம் நிறுத்தி விட்டு வந்த படைகளுக்குத் திட்டம் செய்திருந்தார். இவர் ஆற்றின் கரை வழியாகப் பதினறு மைல் ஆற்றின் எதிர் முகமாகச் சென்று குறித்த இடத்தை அடைந்து அங்கே ஆற்றைக் கடந்தார்; அக்கம் பக்கங்களில் உள்ள படவுகளைத் தயாரித்தார்: கூடாரங்களின்

தோலில் வைக்கோலைத் திணித்துப் பொதிகளாக்கி அவற்றையும் படவுகளாக உபயோகித்துக் கொண்டார். இவ்வித உபாயங்களால் அலெக்ஜாந்தர் ஆற்றைக் கடந்து பூரு இருந்த கரைக்கு வந்து சேர்ந்தார்.

இவர் ஆற்றைக் கடந்து வந்து விட்ட செய்தியை இந்திய ஒற்றர்கள் எப்படியோ அறிந்து கொண்டு ஓடிச் சென்று தமது அரசருக்கு அறிவித்தனர். உடனே பூரு தம் சேனைகளின் ஒரு பகுதியைத் தம் மக்களில் ஒருவர் வசம் ஒப்புவித்து அலெக்ஜாந்தரைச் சென்று தாக்கும்படி திட்டப்படுத்தினர். பிறகு மற்றப் படைகளை அவ் விடத்திலேயே ஒழுங்காக அவர் அணிவகுத்து விரோதியின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

அலெக்ஜாந்தர் தம்மை எதிர்க்க வந்த படைகளைத் தாக்கி அப் படைகளுக்குத் தலைவராகிய பூருவின் குமாரரைச் சிறிது நேரத்தில் கொன்றுவிட்டார். இச்செய்தி பூருவுக்கு எட்டுவதற்குள் கிரேக்கர்கள் அவரை நெருங்கி விட்டனர்.

பூருவின் அணி வகுப்பு ஒழுங்காய் இருந்தது. முன் அணியில் யானைப் படையை நிறுத்தி அதன் இரு சிறகுகளிலும் குதிரைப் படையை அவர் அமைத்திருந்தார். வேழப் படைக்குப் பின் காலாட்படை நின்றிருந்தது. இப் படைகள் யாவும் வடக்கு நோக்கி நின்றிருந்தன. அவற்றிற்கு இடப் பக்கத்தில் ஆறு எல்லையாக இருந்தது. அலெக்ஜாந்தர் இந்த அணி வகுப்பைக் கண்டு சற்று மயங்கினர். பிறகு இவருக்கு ஒரு யோசனை தோன்றியது. இவர் தம் சேனைகளை இரு பிரிவாக்கி ஒன்றைப் பகைவரின் இடது பக்கத்தில் உள்ள குதிரைப் படையைப் பின்புறமாக வந்து தாக்க உத்தாவிட்டுத் தாம் அந்தச் சிறகை முன் புறமாகத் தாக்கினர்



தமக்கு ஆபத்து ஏற்படுவதாகத் தோன்றினல் ஆற்றைக் கடந்து சென்றுவிட அப் பக்கமே சௌகரியமென்று இவர் கண்டுகொண்டனர்.

பூருவின் இடது பக்கத்துப் படைக்கு முன்னும் பின்னுமாக இரு புறமும் ஆபத்துண்டாகவே அதற்கு உதவியாக வலதுசிறைப் படை வரவேண்டியிருந்தது. அதனால் பூரு தாம் முன் வகுத்திருந்த அணியைக் குலைக்கவேண்டி நேர்ந்தது. அலெக்ஜாந்தரின் சேனைகள் இருபுறமாகவும் நின்று இடதுகைப் படைகளை வென்று விட்டன. பிறகு இடம் விட்டுப் பெயர்ந்த வலது பக்கப் படைகளும் எளிதில் வெல்லப்பட்டன. இச் சமயத்தில் யானை வீரர் பகைவர்கள் மேல் யானைகளை ஏவித் தாக்கினர். கிரேக்கர்கள் பெருங் கூச்சலிட்டு அவைகளை வெருட்டினர்கள். அவைகள் மதி மயங்கி அங்குமிங்குமாக ஓட ஆரம்பித்தன. அதனால் இரு படைகளிலும் நாசமேற்பட்டது; என்றாலும் யானைப் படைக்குப் பின்புறமாக இருந்த இந்தியப் படைகளுக்கே அதிகச் சேதம் விளைந்தது. இச் சமயத்தில் எதிர்க் கரையில் உள்ள படை அலெக்ஜாந்தருக்கு உதவியாக ஆற்றைக் கடந்து வந்து விட்டது. அதனால் இந்தியர்கள் தோல்வியடைந்து விட்டனர்.

புருஷோத்தமர் மட்டும் முன் வைத்த காலைப் பின் வைக்காமல் யானைமீதிருந்துகொண்டு போர் செய்து வந்தார். தமக்கு அபஜயம் ஏற்பட்டதை அறிந்த பிறகும் உற்சாகமாகத் தாம்மட்டும் சண்டை செய்து கொண்டிருந்தார். அவர் காட்டிய போர்த் திறமை அலெக்ஜாந்தரை வியக்கச் செய்தது. பூருவுக்கு உடலில் ஒரு விழுப்புண் ஏற்பட, வலி பொறுக்க முடியாமல் அவர் மெதுவாக யானையைத் திருப்

பித் தம்மைச் சரிப்படுத்திக் கொள்ள எண்ணினார். அச் சமயத்தில் கிரேக்கர்கள் அவரைப் பற்றிக் கொண்டனர்.

அவரை மரியாதையுடன் அழைத்து வரும்படி அலெக்ஜாந்தர் தம் ஆட்களுக்குத் திட்டஞ் செய்திருந்தார். டரியஸ் இத்தகைய ஆபத்தான நிலைமையை யுத்த களத்தில் அடைந்தவரே அல்லர். இருந்தாலும் உயிருக்குப் பயந்து இருமுறை ஓடிவிட்டார். பூருவோ தம் உயிரைத் திருணமாக மதித்து விழுப்புண் பெற்றார். அதனால்தான் அலெக்ஜாந்தர் அவர் திறத்தில் மகிழ்ச்சி கொண்டது. பூரு பெருமிதத்தோடு அலெக்ஜாந்தர் முன் வந்து நின்றார். இவர் அவருக்கு ஓர் ஆசனமளித்து இளைப்பாறிக் கொள்ளச் செய்தார். சிறந்த வீரர்களை வியக்கும் இயல்பு வாய்ந்த கிரேக்கர் தலைவர் பூருவை நோக்கி, "உம்மை நான் எவ்வாறு நடத்தப் பிரியப்படுகிறீர் ?" என்றார். அதற்குப் பூரு, "என்னை அரசராகவே நடத்த வேண்டும்" என்றார். பின்னும் அலெக்ஜாந்தர், "இன்னும் யாது வேண்டும் ?" என்று கேட்கப் பூரு தாம் முன் கேட்டுக் கொண்டதிலேயே யாவும் அடங்கியிருப்பதாக மறுமொழி பகர்ந்தார். பிலிப்பின் மகனார் பூரு கேட்டுக்கொண்டபடி அவர் ராஜ்யத்தை அவருக்கு வழங்கினது மன்றிச் சுற்றுப் புறங்களில் தாம் ஜயித்த இந்திய ராஜ்யங்களிற் சிலவற்றையும் அவருக்குக் கொடுத்து அவரைக் கௌரவப் படுத்தினார்.

---



# VIII

# பாபிலோனுக்குத் திரும்பல்

அலெக்ஜாந்தர் காலத்தில் கிரேக்கர்களின் பூகோள அறிவும் மிகக் குறைவாய் இருந்தது. கிழக்கே உலகம் கங்கா நதியோடு முடிவடையும் என்றும், அதற்கப்பால் சமுத்திரம் என்றும் அவர்கள் எண்ணியிருந்தனர். சீனா ஜப்பான் முதலிய தேசங்களும், மேற்கே பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்காண்டிநேவியா, இங்கிலாந்து என்னும் இவைகளும், ஆப்பிரிக்காவின் தென்பாகமும் அக் காலத்தில் கிரேக்கர் அறியாதவைகளாகும். அமெரிக்காக் கண்டமோ அக்காலத்தில் எவருக்குமே தெரியாத தொன்று என்பர். போக்குவரவு சாதனங்கள் குறைவாகஇருந்த அக் காலத்தில் கிரேக்கர்களின் பூகோள அறிவைப் பற்றி நாம் அவர்களை இகழ்வதற்கில்லை.

ஜீலம் சண்டைக்குப் பிறகு அலெக்ஜாந்தர் **சட்லஜ்** நதி வரையிற் சென்றார். "கிழக்கே உலகம் முடியுமிடமாகிய கங்கை வரையில் நான் சென்று வரவேண்டும்;" என்று இவர் சிந்தித்தார். அவ்வளவு தூரம் செல்வதற்கு இடையில் ஒரு பாலைவனத்தைக் கடக்க வேண்டுமென்றும், அதைக் கடக்கப் பதினொரு நாளாகுமென்றும் அவர் கேள்வியுற்றார். கிரேக்க வீரர்கள் பாலையில் அவ்வளவு நாள் செல்வதற்கு அஞ்சி முணு முணுத்தனர்.

கிரேக்கர்கள் தமது ஜன்ம பூமியை விட்டு வந்து நெடுங் காலமாயிற்று. பல சண்டைகளாலும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடமாகப் பிரயாணஞ் செய்து வந்தமையாலும் அவர்கள்

அலுத்துப் போனார்கள். குதிரைகளின் குளம்புகள் எல்லாம் தேய்ந்து போய்விட்டன. இந்தியாவின் பெரு மழையும் சீதோஷ்ண ஸ்திதியும் அவர்களுக்கு ஒத்துக்கொள்ளாமையால் அடிக்கடி ஜலதோஷம், காய்ச்சல் முதலியவற்றால் அவர்கள் உபத்திரவப்பட்டு வந்தார்கள். ஒவ்வொரு கிரேக்க வீரனும் எவ்வளவு செல்வம் தன்னுடன் எடுத்துச் செல்ல முடியுமோ அவ்வளவுக்கு அதிகமாகவே சம்பாதித்து விட்டான். அதை வைத்துக்கொண்டு சும்மா வீட்டோடு இருந்து விட்டாலும் அது மூன்று தலைமுறைக்கு வரக்கூடியதாயிருந்தது. தாங்கள் இவ்வாறே யுத்தம் செய்துகொண்டு செல்வதானால் ஒவ்வொருவராக இறந்துவிடக் கூடுமென்றும், அல்லது அலெக்ஜாந்தர் தம்மீது வெறுப்புக்கொண்டு தம்மை நீக்கிவிட்டுப் பாரசிக நாட்டாரைத் தங்கள் ஸ்தானங்களில் நியமித்துக் கொள்ளக் கூடுமென்றும் அவர்கள் அஞ்சினார்கள். அலெக்ஜாந்தர் தெய்வீக புருஷரென்றும், சண்டை செய்துகொண்டே போகப் போக வழியில் எல்லாரும் இறந்து விட்டாலும் இவர் மட்டும் இறக்காமல் திரும்பிவரக் கூடுமென்றும் எண்ணி அவர்கள் சட்லஜ் நதியைத் தாண்டி அப்பால் அடியெடுத்து வைக்க மறுத்து விட்டனர். திரும்பிச் செல்லலாமென்று அவர்கள் அலெக்ஜாந்தரை மன்றாடிக் கேட்டுக் கொண்டனர்.

அலெக்ஜாந்தருக்கு இன்னது செய்வதென்பது தோன்றவில்லை. உலக முழுவதும் வெற்றிகொள்ளாமல் தம் நாடு திரும்புவதானால் தமக்குப் பைத்தியம் பிடித்து விடுமென்று இவர் சொல்லிப் பார்த்தார். அது செவிடன் காதிற் சங்கு ஊதியதுபோல் வீணாயிற்று. பிறகு இவர் தம் சேனைகளைத் தம் வழிக்குக் கொண்டுவர ஒரு தந்திரம் செய்தார். மூன்று நாள் வரையில் இவர் தம் கூடாரத்தை விட்டு வெளியே வரவில்லை. இவர் கவலையோ டிருப்பதாகச் செய்தி பாடி வீடெங்கும் பரவியது. முக்கியமான தலைவர்களும் இவரைக் காணப் பெறவில்லை. வீரர்கள் யாவரும் இனி என்ன விளையுமோ என்று பயந்திருந்தனர். மூன்றுநாட் கழித்து அலெக்ஜாந்தர் தாம் இனித் தொடங்கப்போகும் சண்டைகளில் தமக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்று தம் கடவுளருக்குப் பூசை புரிய ஏற்பாடு செய்தார். இதைக் கண்ட கிரேக்க வீரர், "ஏது, நம் தலைவர் நமது இஷ்டத்தைப் பூர்த்தி செய்யாமல் தம் வழியையே பின்பற்ற நினைத்து விட்டாரே!" என்று அதிகமான கவலைக் குள்ளானார்கள். சிலர் அலெக்ஜாந்தர் தங்கியிருக்கும் கூடாரத்தின் அருகிற் சென்று திரும்பிவிடுமாறு பிரலாபித்தனர். சிலர், "நாங்கள் இனி ஆயுத மெடோம்!" என்று கத்தினார்கள். அலெக்ஜாந்தர் இவற்றையெல்லாம் கண்டு, தாம் கிரேக்க வீரர்களைச் சொந்த நாட்டிற்கு அனுப்பிவிட்டுப் பாரசிக வீரர்களுடன் முற் செல்லலாமென்று நினைத்தார். நெடுங்காலம் தம்முடனிருந்து கஷ்டங்களை அனுபவித்த தம்மவர்களை அனுப்பிவிட்டுத் தாம் மட்டும் சண்டை செய்வதில் இவருக்கு இஷ்டமில்லை. சேனைகளுக்கு விருப்பமில்லாதபோது தாம் இனிக் கிழக்கு நாட்டுப் போர்களைப்பற்றி எண்ணுவதில் யாதொரு பயனுமில்லையென்றும், ஆகையால் எல்லோரும் திரும்பி விடலாமென்றும் ஓர் அறிக்கையை வெளியிட்டார். இதைக் கேட்ட கிரேக்க வீரர் அளவு கடந்த மகிழ்ச்சி கொண்டனர். எவராலும் ஜயிக்க முடியாத மகா வீரனைத் தாங்கள் ஒருமுறை வெற்றிகொண்டு விட்டதாகக் குதூகலித்தனர். எங்கும் அலெக்ஜாந்தருக்கு வாழ்த்துக் கூறப்பட்டன.



இவர் பஞ்சாபிலிருந்து படகுகளிற் சிந்து நதியின் முகத்துவாரம் வரையிற் சென்று, தம் சேனைகளை இரு பிரிவாக்கி,

ஒன்றைக் கடல் வழியாகவும் மற்றொன்றைக் கடற்கரை வழியாகவும் செல்ல உத்தரவிட்டார்.

முல்தான் வழியாக இவர் செல்லும்போது அங்கிருந்தவர்கள் இவரை எதிர்த்தனர். முல்தான் மிகப் பழமையான நகரம். அதிலும் அதைச் சார்ந்துள்ள பிரதேசங்களிலும் வாழ்ந்து வந்த ஜனங்கள் திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை வட இந்தியாவினின்றும் துரத்திவிட இந்து ஆரியர்களால் முடியாமற் போனதால் அவர்கள் அங்கேயே வசித்து வந்தனர். அவர்கள் முரட்டுத்தன்மை வாய்ந்த குடிகள். அவர்களுக்கும் அலெக்ஜாந்தருக்கும் போர் நிகழவே அவர்கள் தோற்றுப்போய் முல்தான் கோட்டைக்குட் புகுந்து கொண்டனர்.

அக் கோட்டை களிமண்ணால் ஆன மதில்களை உடையது. கோட்டையை இடித்துத் தள்ளக் கிரேக்கர்களால் இயலவில்லை. அதனால் அவர்கள் மூன்று ஏணிகளைத் தயாரித்து அவற்றின்மூலமாக மதில்மேல் ஏற முயன்றார்கள். முதலாவது மதிலின்மேல் ஏறியவர் அலெக்ஜாந்தரே. அவருடன் மூன்றுபேர் சென்றார்கள். தம் தலைவரை மதிற் சுவரின் மீது கண்ட கிரேக்கர்கள், தலைவராயிருப்பவர் நெருக்கடியான நிலைமையில் எல்லோருக்கும் முதலில் தம் நிலைமையை அபாயமாக்கிக் கொள்ளக் கூடாதென்றும், அவர் இறங்கி வந்து விடுவது நல்லதென்றும் கூறினார்கள். ஆனால் அலெக்ஜாந்தர் அவர்கள் சொல்லைக் கேட்கவில்லை. தலைவராகிய தமக்கு ஆபத்து உண்டாவதானால் தம் சேனைகள் சிதறுண்டு போகுமே என்பதை எண்ணாமல் வீராவேசங்கொண்டு இவர் கோட்டைக்குள் குதித்தார். தங்கள் தலைவரின் செயலைக் கண்ட மதிலின் மீதிருந்த மற்ற மூவரும் அவரைப் பின்பற்



றினர். மதிலுக்கு வெளியே யிருந்த கிரேக்கர்கள் வீராவேசங் கொண்டு ஏணிகளின் வழியாக ஏறத் தொடங்கினர். பலர் ஒருமிக்க ஏறியதால் பாரம் தாங்க மாட்டாமல் ஏணிகள் முறிந்து வீழ்ந்தன. அதனால் உள்ளே குதித்த நால்வருக்கும் தகுந்த காலத்தில் உதவி கிடைக்கவில்லை. அலெக்ஜாந்தர் மதிலின் ஓரமாகச் சரிந்துகொண்டு கேடயத்தால் தம்மை மறைத்துக்கொண்டு போர் செய்தார். எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தும் பயனில்லை. அதிகமாக இருந்த விரோதிகள் இவரைச் சூழ்ந்து கொண்டனர். இவருக்கும் பலமான காயமேற்பட்டது. அதன்காரணமாக இவர் அப்படியே சாய்ந்து விட்டார். அத் தருணம் அருகில் நல்லவேளையாக ஒரு கிரேக்க வீரன் இருந்தான். அவ்வீரன், உதவி வரும் வரையில் தன் கேடயத்தால் அலெக்ஜாந்தரை மறைத்து இவர் உயிரைப் பாது காத்து வந்தான்.

ஏணிகள் முறிந்து விடவே வெளியிலுள்ள சில கிரேக்கர்கள் சுவரில் முளைகள் அடித்து அவற்றின் உதவியால் மதில்மேல் ஏறி உள்ளே குதித்தனர். பிறகு ஒருவர் கோட்டைக் கதவைத் திறந்து விட்டார். எஞ்சிய கிரேக்க வீரர்கள் வாயில் வழியாக உட் புகுந்தனர். சிறிது நேரத்தில் முல்தான் வீரர்கள் தோற்று அடங்கி விட்டனர். இதற்குள் அலெக்ஜாந்தர் படுகாயத்தால் உயிர்துறந்தார் என்ற வதந்தி கிளம்பவே கிரேக்கர்கள் வெறிகொண்டு முல்தானைப் பாழாக்கினர். சிறு குழந்தைகளும் பெண்களும் தொண்டு கிழவர்களுங்கூட மாசிடோனியர் வாளுக்குத் தப்பவில்லை. இவ்வளவு செய்தும் கிரேக்கர்களுடைய ஆவேசம் தணியவில்லை.

நல்ல வேளையாக அலெக்ஜாந்தர் ஒரு காயத்துடன் தப்பினார். ஆயினும் இவரால் பேசவாவது நகரவாவது

முடியவில்லை. தலைவர்கள் இவரைப் பாதுகாவலமைந்த ஓரிடத்திற்குத் தூக்கிச் சென்றனர். இதற்குள் வீரர்கள் தம் மன்னவர் இறந்து விட்டதாகக் கருதி அலெக்ஜாந்தரின் உடலைத் தரிசிக்க வேண்டுமென்று நெருங்கி விட்டனர். சேனை அடக்குவாரின்றி அல்லோல கல்லோலஞ் செய்து ஆர்ப்பரித்தது. தலைவர்களின் அதிகாரம் இச் சந்தர்ப்பத்தில் பலிக்காமற் போயிற்று. பிறகு அவர்கள் தம் மன்னவர் இறக்கவில்லை என்பதாகவும், சிறிது நேரத்தில் யாவரும் இவரை வந்து காணும்படி ஏற்பாடு செய்வதாகவும் கூறினர்கள். அதன் பின் சிலர் அலெக்ஜாந்தரைத் தூக்கி வந்து உட்கார வைத்துப் பிடித்துக் கொண்டனர். இவருடைய உயிர் போய்விட்டதென்றும், தலைவர்கள் தங்களுக்கு இவரது சவத்தைக்காட்டி ஏமாற்றநினைத்தார்களென்றும் சேனையிற் குழப்பமுண்டாயிற்று. இதைத் தெரிந்துகொண்ட அலெக்ஜாந்தர் அதிகச் சிரமத்தின்மேல் மெதுவாகத் தம் கையை நீட்டி அமைதியாக இருக்குமாறு அவர்களுக்கு ஜாடை காட்டினார். அதன் பின்னரே குழப்பம் அடங்கிற்று.

முல்தான் முற்றுகை ஒரு விஷயத்தில் முக்கியமானது. இங்கே அலெக்ஜாந்தர் உயிர் தப்பினதே அரிதாய் விட்டது. சில சரித்திர ஆசிரியர்களின் கருத்தாவது, இவரது அகால மரணத்துக்கு, இவருக்கு முல்தானில் ஏற்பட்ட காயம் காரணமாயிருந்தல் கூடுமென்பதே. இம் முற்றுகையில் இவருடைய வீரமும் அஞ்சாமையும் புலனாகின்றன.

பிறகு அலெக்ஜாந்தர் பாரசீகத்திற்கு வந்து சேர்ந்தார். பாபிலோனுக்குட் புகுவதன் முன் இவர் பல ஊர்களில் தங்கித் தங்கிச் சென்றார். இச்சமயங்களில் இவருடைய எண்ணமெல்லாம் யுத்தத்தை ஒழித்துச் சீர் திருத்தத்தில்



நின்றது. தாம் வெற்றி கொண்ட நாடுகளில் கிரேக்கர்களைக் குடியேற்றி அவர்களுக்குப் பிழைப்புக்கு வழிதேட இவர் எண்ணினார். இரண்டாவதாக, பாரசீகர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் மணவினைச் சம்பந்தத்தால் ஒற்றுமையைப் பெருக்க நினைத்தார். தாம் அவர்களுக்கு வழி காட்டியாக முதன் முதலாக டரியஸின் புத்திரியாரை விவாகம் செய்து கொண்டார். தம் சேனையிலுள்ள பலருக்குப் பல பாரசீகக் கன்னிகைகளை மணஞ்செய்வித்தார். பாரசீகர்களைக் கிரேக்கர்கள் மிலேச்சர்களாகக் கருதி வந்தது போல் தாம் எண்ணாமல் கிரேக்கர்களுடன் எல்லா விஷயங்களிலும் சம உரிமையை அவர்களுக்கும் வழங்கினார். இவர் காலத்தில் இருந்த மேதாவிகள் எல்லாம் இவரைப் போல் விரிந்த நோக்கமில்லாதவர்களாய் இருந்தனர். இவருடைய ஆசிரியராகிய அரிஸ்டாடில் இவரிடம் பாரசீகர்கள், இலிரியர்கள் முதலியவர்களைப் பற்றி மிகுந்த கேவலமாகக் கூறியிருந்ததோடு அவர்களை இழிவாகவே நடத்த வேண்டுமென்றும் சிறு வயதில் போதித்திருந்தார். அப்படியிருந்தும் விசால புத்தியுடைய அலெக்ஜாந்தர் கண்களுக்கு உலக மக்கள் யாவரும் கடவுள் முன்னிலையில் சமமானவர்களே என்ற எண்ணம் உதித்தது.

அலெக்ஜாந்தர் பாரசீகர் விஷயத்தில் இவ்வளவு இரக்கம் காட்டியதை மாசிடோனியர்களிற் பெரும்பாலோர் விரும்பவில்லை. அதற்காக அவர்கள் இவரைப் பகைத்தார்கள். சிலர் வெளிப்படையாக இவரைப் பழிக்கத் தலைப்பட்டனர். அவர்கள் கூறிய சில நிந்தைமொழிகள் இவர் காதுகளில் விழுந்தன. ஒரு நாள் அலெக்ஜாந்தர் தம் சேனைகளை ஒன்றுகூட்டித் தம் கொள்கைகள் சரியானவை என்றும், இனித் தம்மைச் சேர்ந்தவர்களில் எவரும் மானிடப் பிறவியை உடைய எவரையும் குலத்தில் இழிந்தோர் என்று கருதக் கூடாது

என்றும் கூறினர். தம்மைப் பழித்தவர்களுக்கு இவர் கடுமையான தண்டனை விதித்தார்; பதின்மூன்று பேரைக் கொல்வித்தார். இத்தண்டனைகள் குற்றத்தின் அளவுக்கு அதிகமானவைகள் என நினைத்துச் சில மாசிடோனிய வீரர்கள் வெளிப்படையாகக் கலகம் செய்தனர். இதைக் கண்ணுற்ற அலெக்ஜாந்தருக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. இவர் வெளியே வந்து தம்சேனைகளுக்கு நீண்ட உபந்நியாசம் செய்யத் தொடங்கினார்:

"உங்களுக்கு நன்றியறிதலே கிடையாது. என் தந்தையாரும் நானும் உங்கள் உயர்வின் பொருட்டுச் செய்த முயற்சியை நீங்கள் உணரவில்லை. நாகரிகம் அற்றவர்களாய் ஆடுகளை மலைச் சரிவுகளில் மேய்த்துக்கொண்டும் கந்தைகளை உடுத்திக் கொண்டும் மாசிடோனியாவில் வாழ்ந்து வந்தீர்கள். திரேஸர்களுக்கும் இலிரியர்களுக்கும் நடுநடுங்கிக்கொண்டு இருந்தீர்கள். என் தந்தையார் உங்களுக்குப் போர் உடைகளை அளித்து மேன்மைப் படுத்தினார்; கிரீஸ் தேசத்தை நீங்கள் வெல்லும்படி செய்தார். நீங்கள் எவருக்குப் பயந்திருந்தீர்களோ அவர்களை ஆளும் பெருமை உமக்கு அவரால் கொடுக்கப்பட்டது. அருமையான கோட்டை கொத்தளங்களையும் பொற்கனிகளையும் அவர் மாசிடோனியாவுக்குச் சம்பாதித்துக் கொடுத்துள்ளார். என்னிடம் நீங்கள் பெற்ற சிறப்புக்களை நோக்கும்போது என் தந்தையாரிடம் நீங்கள் அடைந்தவை மிகவும் சிறியவை என்னலாம்.

"என் தகப்பனார் அரசாட்சியை நான் வகித்தபோது பொக்கிஷத்தில் பணம் இல்லை. அரசாங்கம் கடனில் மூழ்கி இருந்தது. நான் உங்களுக்காகவே உலக யுத்தத்தைத் தொடங்கினேன். எங்கும் உமக்கு வெற்றியுண்டாக்கியுள்ளேன். நமது



பழைய பொக்கிஷங்கள் பணம் வைப்பதற்கு மிகச் சிறியவையாகத் தோன்றும்படி நான் செய்ததுமல்லாமல் உங்களில் ஒவ்வொருவரும் உங்களால் தூக்கமுடியாத அவ்வளவு பொன்னைப் பெறும்படியும் செய்தேன். உங்களிற் பலர் இராஜப் பிரதிநிதிகளாகவும் சேனைத் தலைவர்களாகவும் சுகமனுபவித்து வருகிறீர்கள். இந்த அரசஉடையும் கிரீடமும் தவிர எனக்கென்று நான் வேறு எதை வைத்திருக்கிறேன்? உங்களுக்காக நான் பாதுகாத்து வருவனவற்றைத் தவிர வேறு பொருளை எனக்கென்று நான் வைத்திருப்பதாக எவராவது காட்டி நிரூபிக்க முடியுமா? நீங்கள் உண்ணும் உணவையே நானும் உண்ணுகின்றேன். உங்களைப்போலவே தூங்குகின்றேன். சிலநாள் அந்த ஆகாரமும் தூக்கமுங்கூடக் கிடைப்பது அருமையாக இருக்கின்றது. ஏனென்றால் நீங்கள் சௌகரியமாக உறங்குவதற்காக இரவுமுழுவதும் நான் காவல் காத்திருக்கவேண்டிய அவசியம் பலசந்தர்ப்பங்களில் ஏற்பட்டதை நீங்களே அறிவீர்களன்றோ? நான் அரசர்களைப்போல் ஆடம்பர வாழ்க்கையை உடையவன் என்று உங்களில் எவராவது சொல்ல முடியுமா? 'மன்னவரே, உமக்காக நான் போர்முகத்தில் அதிகமாகப் பாடுபட்டிருக்கிறேன்' என்று உங்களில் எவர் சொல்ல நினைக்கிறீர்களோ, அவர் என்முன் வந்து தாம் போரிற் பெற்ற தழும்புகளைக் காட்டட்டும்; நானும் என்னுடைய தழும்புகளைக் காட்டுகின்றேன். எவருக்கு அதிகப் புண்கள் உண்டாயிருக்கின்றன வென்பதை நீங்களே நிர்மானித்துக் கொள்ளலாம். என் உடலில் தழும்பில்லாத இடம் இருக்கின்றதா? ஆயுதங்களில் எத்தனை வகையுண்டோ அத்தனை வகையும் இந்த உடலின் இரத்தத்தில் தோய்ந்திருக்கின்றன. உங்கள் உயிருக்காகவும், உங்கள் உடைமைக்காகவும் உங்கள் புகழுக்காகவும் நான்பட்ட கஷ்டங்களை நீங்கள் அறிவீர்களே!

# IX

# இறுதிக் காலம்

அலெக்ஜாந்தர் பாபிலோன் வருவதற்கு முன்னரே **அரேபியாவை** வெல்ல நினைத்திருந்தார். முல்தானில் தமக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக அப் படையெடுப்புத் தள்ளி வைக்கப்பட்டது. பாபிலோன் வந்ததும் இவர் அந்தப் படையெடுப்பைப் பற்றிச் சிந்தித்தார். கடல் வழியாக அரேபியாவுக்குச் செல்ல எண்ணிக் கப்பல்களைக் கட்ட இவர் உத்தரவிட்டிருந்தார். அரேபியாவின் பெரும்பாகம் பாலைவனமென்பது கிரேக்கர்களுக்குத் தெரியாது. அதன் கரையோரங்களில் உள்ள வளத்தையே முழு அரேபியாவின் வளமென அவர்கள் எண்ணங் கொண்டிருந்தனர். பாபிலோன் வந்த பதினாறு நாட்களில் அலெக்ஜாந்தர் இறந்து விட்டதால் அப் படையெடுப்பிற்காகச் செய்யப்பட்ட முயற்சிகள் வீணாயின.

பாரசிகத்தை வெற்றி கொண்டது முதல் அலெக்ஜாந்தர் தோற்றத்திலும் குணத்திலும் பெரிதும் மாறி விட்டார். எங்கும் தமக்கு வெற்றியே கிடைத்து வந்ததனாலும், எப்பக்கத்திலும் பலர் தம்மை வணங்கி வழிபட்டு வந்ததனாலும் இவருக்குத் தலைகால் தெரியாமற் போய் விட்டது. இவர் தம்மைச் சாதாரண மனிதராக நினையாமல் தெய்வத் தன்மை வாய்ந்த ஒருவராக எண்ணினார். தம் குடும்பத்தின் முதல்வராகிய அசிலிஸை விடத் தாம் புகழில் மிகுந்து விட்டதாக இவர் தற்பெருமை பாராட்டிக் கொண்டார். இவ்வித மமதை ஏற்படவே இவர் சில சந்தர்ப்பங்களில் தம்மைச் சேர்ந்தவர்களைக் கடூரமாக நடத்தி வந்தார். மதுபானம் செய்



யும் வழக்கமும் இவருக்கு உண்டாகி விட்டது. குடிவெறியில் மயங்கிக் கிடக்கையில் இவர் செய்த செயல்கள் யாவும் கோரமானவை. குடிமயக்கம் ஒழிந்ததும் இவர் தமது மூடத்தனத்திற்காக வருந்துவது வழக்கம். மதுபானத்தால் இவர் முகம் பொலிவிழந்தது. பன்னிரண்டு வருஷ சஞ்சாரத்தாலும், தேச கால இயல்புகள் ஒத்துக் கொள்ளாததாலும் இவர் உடல் கறுத்துப் போய் விட்டது. உடம்பில் யுத்தங்களாற் பல காயங்கள் ஏற்பட்ட இடங்களில் உண்டான தழும்புகள் விகாரத்தை உண்டாக்கின.

இந்நிலையில் பிற்காலத்தில் எவரும் அலெக்ஜாந்தரை நெருங்கிப் பேசத் துணியவில்லை. இவர் குடிமயக்கமில்லாதபோது மிகுந்த தாராள புத்தியுடையவராயிருந்தார். இவரது அமைப்புக்களும் ஏற்பாடுகளும் மேன்மையானவை. நட்பின் பெருமை, தோற்றவர்களை ஆதரிக்கும் பண்பு, சிறந்த வீரத்திற்கு மரியாதை காட்டல், சமூக ஒற்றுமை, வியாபார யுக்தி முதலிய விஷயங்களில் இவர் அக் காலத்திலிருந்த பெரியார்களிலும் பெரியாராய்த் திகழ்ந்தார். உலகத்தையே வென்ற மகா வீரரும் மேலே சொல்லப்பட்ட அருங்குணங்கள் வாய்ந்தவருமான இவரை மதுபானமே கெடுத்து விட்டது.

பாபிலோன் வந்த நாள் முதற்கொண்டு பல விருந்துகள் நடந்தன. இவற்றின் இறுதியில் மதுபான வகைகள் முக்கியமாயின. அலெக்ஜாந்தர் ஆடம்பரங்களிலேயும் கேளிவிலாசங்களிலேயும் இடுபட்டார். அந்தப் பதினாறு தினங்களுக்குள் எத்தனையோ விருந்துகள்! ஒருநாள் இவர் அபரிமிதமாகக் குடித்தார். விருந்து முடிவதற்குள் அறிவழிந்து அங்

கேயே படுத்து விட்டார். சிலர் இவரைத் தூக்கிச் சென்று அரண்மனையிற் சேர்க்கவேண்டி யேற்பட்டது.

மறுநாள் இரவு அரசியல் விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு இவர் அதிகநேரம் விழித்திருந்தார். அதற்கு அடுத்த நாள் இவர் முற்பகல் முழுவதும் வழக்கத்திற்கு முற்றிலும் விரோதமாகத் தூங்கிவிட்டுப் பிற்பகலில் எழுந்து தம் காரியங்களைக் கவனிக்கலானார். அன்றிரவு முழுவதும் இவருக்குத் தூக்கம் வரவில்லை. அடுத்த நாள் அதிகாலையிலே இவர் எழுந்து விட்டார். உடம்பில் ஜுரம் கண்டிருந்தது. இரண்டு மணி நேரத்தில் அந்த ஜுரம் அதிகமாய் விட்டது. வழக்கம்போல் இவர் காலைப் பிரார்த்தனைக்கு வந்தார். இவரால் இருந்து தொழ முடியவில்லை. அன்றைக்கே ஆகாரம் உட்செல்லவில்லை.

இதற்கிடையில் அலெக்ஜாந்தரின் மனம் பலவிதங்களிற் குழம்பியிருந்தது. தாம் இனிப் பிழைத்தல் அரிது என்பது தமக்குத் தெரியா விட்டாலும் ஏதோ ஓர் அபாயம் தமது தலைக்குமேல் காத்திருப்பதாக இவர் எண்ணினார். பாபிலோனில் அச் சமயம் இவர் புகுவது ஆபத்துக்கு இடமாகும் என்று பாரசீக குருமார்கள் சொல்லியது ஒரு பக்கம் இவரை வருத்திக்கொண்டே யிருந்தது. இன்னும் சில வருத்தங்களும் இவருக்கு உண்டு.

ஒரு நாள் இவர் படவிற் சென்றுகொண்டிருக்கையில் இவரது தொப்பி காற்றடித்து ஆற்றில் விழுந்து விட்டது. அச் சமயம் ஒருவன் நீரிற் குதித்து அதை எடுத்துவந்தான். வருகையில் அது முற்றிலும் நனைந்துபோகாமலிருக்க வேண்டி அதை அவன் தன் தலையில் வைத்துக்கொண்டு நீந்தி




வந்தான். அவன் செய்த உதவிக்கு அலெக்ஜாந்தர் அச் சந்தர்ப்பத்தில் நல்ல பரிசு கொடுத்தார், என்றாலும் பிறகு சிலர் கூறிய சொல்லைக்கேட்டு அவனைச் சவுக்கினால் நன்றாய் அடித்தார். தமது தலையில் இருக்கவேண்டிய தொப்பியை மற்றொருவன் தன் தலையில் சூட்டிக்கொண்டது இவருக்கு இனி வரப்போகும் தீமையை முன்னால் அறிவிக்கும் உற்பாதமென்று குறிசொல்லுகிறவர்கள் கூறிய வார்த்தைகளை இவர் நம்பிவிட்டார்!

வேறொரு நாள் இவர் தம் உத்தியோகஸ்தருடன் சபா மண்டபத்தில் இருந்துகொண்டு இராஜாங்கக் காரியங்களைப் பார்த்துவந்தார். இடையில் நீர் அருந்திவர இவர் எழுந்து சென்றார். இவருடன் உத்தியோகஸ்தர்களும் சென்றார்கள். அச் சமயம் ஒரு புதியமனிதன் காவலர் அறியா வண்ணம் சபா மண்டபத்தில் நுழைந்து அரசர் வீற்றிருக்கும் சிங்காசனத்தின் மீது அமர்ந்தான். அப்பொழுது அங்கிருந்த காவலர்கள் எல்லாம் பாரசீகர்கள். சிங்காசனத்தில் இருப்பவரை எழுந்துபோகச் சொல்லவாவது மரியாதைக் குறைவாய் நடத்தவாவது கூடாது என்பது பாரசீகர் கொள்கை. ஆகையால் அவர்கள் அந்தப் புதியவனை ஒன்றுஞ் செய்யாமல், ஓடிப்போய் இவ் விஷயத்தைத் தம் அரசருக்குத் தெரிவித்தனர். கிரேக்க வீரர்கள் விரைவில் வந்து அவனைப் பற்றிக் கொண்டனர். அலெக்ஜாந்தர் அவனை நன்றாகப் புடைப்பித்து அவன் அங்ஙனம் செய்ததற்குத் தகுந்த காரணத்தை அறிந்துகொள்ள முயன்றார். தன்னை அறியாமல் ஒரெண்ணம் அவ்வாறு செய்யத் தூண்டியதாக அவன் கூறினான். பிறகு அவன் கொல்லப் பட்டான். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அலெக்ஜாந்தருக்குத் தீய குறிகள்

என்று அருகில் இருந்தவர்கள் சொல்லி வந்தார்கள். மதுபானத்தால் பலவீனப்பட் டிருந்த இவரும் அவர்கள் சொல்லியதை நம்பி வருந்திக்கொண்டிருந்தார். இப்பொழுது காய்ச்சல் காணவே அந்தப் பயம் இவருக்கு அதிகரித்து விட்டது. 'புலி அடிப்பதற்கு முன் கிலி அடித்துவிடும்' என்பார்கள். அப் பழமொழி மகா வீரராகிய அலெக்ஜாந்தர் விஷயத்திலும் உண்மையாயிற்று!

இவருக்குப் பேச்சு நின்று விடவே இவர் இறந்து விட்டதாகப் பலர் கருதினர். வீரர்கள் எல்லாரும் அவரைப் பார்க்க வேண்டி அரண்மனையைச் சுற்றிக் கூட்டமாகக் கூடி விட்டனர். காவலாளிகளால் அவர்களை உள்ளே நுழைய விடாமல் தடை செய்ய இயலாமற் போயிற்று. அதனால் அவர்கள் வீரர்களுக்கு வாயில்களைத் திறந்து வழி விட்டு விட்டார்கள். அலெக்ஜாந்தர் தம்மைக் காண வந்தவர்களுக்குக் கண்ணினால் ஜாடை செய்தனரே ஒழிய வேறொன்றும் செய்ய இவரால் முடியவில்லை. இவருக்குப் பேச அப்பொழுது வாய் இருந்திருப்பின் தமக்குப் பின் இன்னவர் பட்டத்திற்கு வர வேண்டுமென்றுவது, ராஜ்ய விஷயங்கள் இவ்வாறு நடைபெற வேண்டுமென்றுவது ஏற்பாடுகள் செய்திருக்கக் கூடும். வாயடங்கி விட்டமையால் இவர் கண்களில் நீர் பெருகிற்று. தாம் விரலில் அணிந்திருந்த மோதிரத்தை ஒரு தலைவரிடம் கழற்றிக் கொடுத்தார். அருகிலிருந்தவர்கள் கொண்ட வருத்தத்திற்கு அளவே இல்லை. அன்று மாலை கடைசியாக அலெக்ஜாந்தர் தம் கண்களை மூடிக்கொண்டனர். உலகத்தையே வென்ற மகா வீரர், ஐயோ! தம் முப்பத்திரண்டாம் ஆண்டிலேயே உயிர் துறந்தார்!

---



பாரசீக வேந்தன் மரணமும் அலெச்ஜாந்தரின் அனுதாபமும்.

# X

# அலெக்ஜாந்தருக்குப் பின் கிரேக்க ராஜ்யத்தின் கதி

தமது இறைவர் திடீரென்று இறந்து விட்டதால் சேனைகளில் ஒருவருக்கும் இன்னது செய்வதென்று தோன்றவில்லை. இனி வரப்போகும் விபத்து யாதோ என்று ஒவ்வொருவரும் கவலைக் குள்ளானார்கள். பிணத்தின் அருகி லிருந்துகொண்டு விசனப் படுவதற்குக் கூட அவர்களுக்கு நேரமில்லை. இரண்டு மூன்று பேர்களாக அவர்கள் கூடிக்கொண்டு இரவில் சந்து பொந்துகளில் எல்லாம் அமர்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். கிரேக்கர்களை விட அதிகமாக வருந்தினவர்கள் பாரசீகர்களே. அலெக்ஜாந்தர் இருந்த வரையில் இவர் பாரசீகர்களைத் தம் கண்ணே போற் கருதி, கிரேக்கர்களுடன் சம உரிமை கொடுத்துக் காத்து வந்தார். இனிமேல் கிரேக்கர்கள் தங்களைத் துன்புறுத்துவார்களே என்று அவர்கள் நடுங்கினார்கள்.

சவம் எடுபடாத முன்பு கிரேக்கர் தலைவர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது. இனி எவர் அரசராவது என்பதே ஒவ்வொருவர் மனத்திலும் எழுந்த கேள்வியாகும். அலெக்ஜாந்தரின் முதல் மனைவி ராக்சனி பூர்ண கர்ப்பவதியாயிருந்தாள். 'பாரசீக வேந்தராகிய டரியஸின் மகள் [illegible]நக்கின்றாள். கிரீஸ் தேசத்திலேயே அலெக்ஜாந்தரின் [illegible]யாதி வருக்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்களுள் எவர் பட்டம் பெறுவது?' என்பதே பெரும் பேச்சாக இருந்தது. சிலர் இச் சந்தர்ப்பத்தில் தமது சொந்த நலத்தைத் தேடத் தொடங்கினர். இவ்வித காரணங்களால்

அவர்கள் தத்தம் பரிவாரங்களைச் சேர்த்துக்கொண்டு சண்டை யிட்டார்கள். கடைசியாக எல்லாரும் சமாதானமாகி ஒரு முடிவுக்கு வந்தனர். 'ராக்சனிக்குப் பிறக்கப் போகும் குழந்தையே பட்டத்திற் குரியது. குழந்தை பிறந்து தகுந்த வயதடையும் வரையில் ஒருவர் அக் குழந்தைக்குப் பிரதிநிதியாக இருந்து வரவேண்டியது. மாசிடோனியாவை ஆண்டிபேடரே அது வரையில் ஆண்டு வர வேண்டியது. மாசிடோனியாவைத் தவிர மற்ற மகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலைவர் பிரதிநிதியாக இருந்து வரவேண்டும்' என்று தீர்மானம் அங்கிருந்த அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

அலெக்ஜாந்தரின் மரணச் செய்தி கிரீஸ் தேசத்திற்கு எட்டியது. முதலில் இவர் இறந்தார் என்பதை எவரும் நம்பவில்லை. மாசிடோனியா முழுவதும் துக்க சாகரத்தில் மூழ்கியிருப்பதைக் கண்டும், அலெக்ஜாந்தருடன் போர் செய்யச் சென்றவர்கள் திரும்பி வந்ததைக் கண்டுமே அவர்கள் நம்பினார்கள். அலெக்ஜாந்தர் பல நாட்டுக் கிரேக்கர்களை ஒன்றுபடுத்திக் கிரீஸ் தேசத்தின் பெருமையை உலகிற்குக் காட்ட முன் வந்தார். ஆனால் கிரேக்கர்கள் இவரை விரும்பவில்லை. எல்லா கிரேக்கர்களிலும் ஆதன்ஸ் வாசிகளே இவரை மிகவும் வெறுத்து வந்தனர். இவருடைய மேன்மையான குணத்தை ஆதன்ஸ் வாசிகள் உணராமற் போனது வருந்தத் தக்கதேயாம். இப்பொழுது அலெக்ஜாந்தர் இறந்துவிட்டதாகத் தெரிய வரவே மாசிடோனியாவைத் தொலைக்க அவர்கள் மறுபடியும் முயன்றனர்.

ஒலிம்பியஸ் தன் குமாருடைய பிரிவுக்கு மிகவும் வருந்தினாள். சான்றோனாயிருந்த தன் ஒரே மகன் மரித்ததைக் கேட்ட தாயின் வருத்தத்திற்கு அளவும் உண்டோ!



ஆண்டிபேடர் தம் யஜமான் மீது விசுவாச முள்ளவர்களில் தலைமையானவர். அலெக்ஜாந்தரின் மரணம் அவரை உருக்கி விட்டது. மற்றத் தலைவர்கள் எல்லோரும் அலெக்ஜாந்ருடனே திக் விஜயம் செய்யச் சென்றிருந்தார்கள். அவர்களுக்குத் தம் மன்னவரின் குறைகளும் துர்க்குணங்களும் நன்கு தெரிந்திருந்தன. அவற்றின் பொருட்டு அவர்கள் தம் அரசரை வெறுத்த சந்தர்ப்பங்களும் உண்டு. ஆண்டிபேடரோ அலெக்ஜாந்தரின் உத்தம குணங்களைமட்டும் கண்டு வியந்தவர். அதனால் அவர் இப்பொழுது வருந்தக் கேட்க வேண்டுமா? இதற்குள் ராக்சனிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தை பட்டம்பெற அவர் ஆதரவளித்தார். ஆதன்ஸ் நன்றிகெட்டு அமர்செய்ய எழுந்ததை அவர் கேட்டுக் கோபங்கொண்டு, ஆதன்ஸ் வாசிகளுக்குப் புத்தி கற்பித்து மீண்டார்.

ஆண்டிபேடர் அரச குடும்பத்தினரிடத்திற் காட்டி வந்த மரியாதையைப்போல் வேறு தலைவர்கள் காட்டியிருக்க மாட்டார்கள். அவருக்கு ஒருமகன் உண்டு; அவன் அயோக்கியன். அவன் அலெக்ஜாந்தரை வெறுக்கக்கூடியவன். ஆண்டிபேடர் தாம் இறக்கும்போது தம் ஸ்தானத்தில் அவனை வைக்காமல் தம் சகோதரனை வைத்துச் சென்றார். ராஜ விசுவாசமே இதற்குக் காரணம்.

ராக்சனியும் குழந்தையும் பல கஷ்டங்களுக் குள்ளானார்கள். துரதிர்ஷ்ட முள்ள குழந்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடமாகப் பல இடங்களுக்குக் கொண்டுபோகப் பட்டது. கடைசியாகத் தாயும் குழந்தையும் ஒலிம்பியஸிடம் சேர்க்கப் பட்டனர். ஒலிம்பியஸ் உயிருடன் இருக்கும் வரையிலும் எவரும் அரச குடும்பத்தினரை மரியாதைக் குறைவாக நடத்த

வில்லை. அவள் கடுகடுத்த குணத்தவளாக இருந்த போதிலும் அலெக்ஜாந்தரைத் தன் வயிற்றிற் சுமந்து பெற்ற பாக்கியத்தால் அவளுக்கு எல்லாரும் மரியாதை செய்து வந்தார்கள். அவள் இறக்கவே ஆண்டிபேடரின் மகன் தன் சிற்றப்பனைக் கொன்றுவிட்டு மாசிடோனிய சிங்காசனத்தைக் கைப்பற்றிக்கொண்டான். சிலநாளில் அவன் ராக்சனியையும் பன்னிரண்டு பிராயமாயிருந்த அவளுடைய குழந்தையையும் இரகசியமாகக் கொலை செய்துவிட்டான். அலெக்ஜாந்தரின் வமிசம் ஒழிந்தது. இவர் தேடிவைத்த பெரிய ராஜ்யம் இவருடைய சேனைத் தலைவர்களாற் பங்கிட்டுக் கொள்ளப்பட்டன.

---

## XI

## அலெக்ஜாந்தரைப்பற்றிய சில குறிப்புக்கள்

கிரீஸ் தேசத்தில் டேல்பி என்ற இடத்தில் அபுலோ கோவிலில் ஒரு பூசாரிப்பெண் இருந்தாள். பல பக்கங்களிலிருந்து ஜனங்கள் நல்ல வாக்குக் கேட்க அவளிடம் வருவதுண்டு. அவள் சிலமாதங்கள் மௌன விரதத்தை அநுஷ்டிப்பாள். அச் சமயங்களில் அவள் வாக்குச் சொல்வதில்லை. அலெக்ஜாந்தர் ஒரு சமயம் அவளிடம் வாக்குக் கேட்கச் சென்றிருந்தார். மௌனவிரதத்தில் இருந்ததால் அப்பெண் ஒன்றும் பேசவில்லை. வாக்குச் சொல்லும்படி அலெக்ஜாந்தர் உடனே அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கோவிலுக்குள் நுழைய ஆரம்பித்தார். அப்பொழுது அவள் வாய் திறந்து, “மகனே, நீ யாராலும் அடக்கப்படாதவன்”



என்று கூறினாள். அலெக்ஜாந்தர் அவ்வளவே போதுமென்று திருப்தி அடைந்ததாகத் தெரிகிறது.

* * *

அலெக்ஜாந்தர் பாரசிகத்தின் மேல் படையெடுத்துச் சென்றிருந்தபோது ஒருநாள் ஒரு கோவிலுக்குச் சென்றார். அங்கே ஒரு வண்டியின் நுகத்தில் ஒரு கயிறு முடியப் பட்டிருந்தது. கயிற்றின்முனைகள் காணப்படவில்லை. அங்குள்ளவர்கள் எல்லாம் அம் முடிச்சைப் பற்றி ஒரு கதை கட்டி, அதை அவிழ்க்கின்றவர் ஆசியாவுக்கே தலைவர் ஆவார் என்று பேசிவந்தனர். அலெக்ஜாந்தர் இதை அறிந்துகொண்டு தாம் அம் முடிச்சை அவிழ்ப்பதாகக் கூறினார். மாசிடோனியர்கள் எல்லோரும் தம்மன்னர் எங்கே அதை அவிழ்க்காமற் போய் விடுவாரோ என்று அஞ்சினார்கள். மற்றவர்கள் ஒருவேளை இவர் அவிழ்த்துவிடக் கூடும் என்று கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அலெக்ஜாந்தர் நெடுநேரம் முயன்று பார்த்தும் அவரால் முடியவில்லை. பிறகு அவர் தம் உடைவாளை உருவி, “எப்படியானால் என்ன? கயிற்றை நுகத்திலிருந்து வேறாக எடுத்துவிட்டால் சரிதான்” என்று சொல்லிக் கொண்டே முடிச்சை அறுத்தெறிந்தார்.

* * *

டயர் முற்றுகையில் அலெக்ஜாந்தருக்கு விரோதமாகச் சில யூதர்கள் சண்டை செய்தார்கள். முற்றுகை முடிந்த பிறகு இவர் யூதர்களைத் தண்டிக்க அவர்களுடைய முக்கிய நகரமாகிய எருசலேமின்மீது படையெடுத்துச்சென்றார். அவ்வூரில் இருந்த சாமியார் ஒருவர் அலெக்ஜாந்தரை எதிர்கொண்டு அழைக்குமாறு தமக்குக் கடவுளது ஆணை பிறந்திருப்பதாகக் கூறித் தம் பரிவாரங்களுடன் புறப்பட்டார்.

அலெக்ஜாந்தர் அவரைக் கண்டதும் கைகுவித்து வணங்கி நின்றார். இச்செயலைக்கண்டு ஆச்சரியமடைந்த கிரேக்கர்கள் "வணங்காமுடி மன்னவராகிய நீர் ஒரு மிலேச்சனை வணங்குவது சரியோ?" என்றனர். அதற்கு இவர், "நான் பாரசிகத்தின்மேற் படையெடுத்துச் செல்வதைப்பற்றி நம் நாட்டிற் சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் இவர் என் கனவில் தோன்றி, 'நீ படையெடுத்துச் செல்லுமிடங்களுக்கெல்லாம் நான் துணை வந்து வெற்றியளிக்கிறேன்' என்று கூறினார். அப்படியே இதுவரையில் நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. அதனால்தான் நான் இவரை வணங்கினேன்" என்று கூறினார். பிறகு இவர் எருசலேம் சென்று யூதர்கள் கோவிலுக்கு அளவற்ற மானியங்களை விட்டு அக் குருவைக் கௌரவப்படுத்தினார்.

* * * * * * * * *

அலெக்ஜாந்தருக்கு ஐந்து தலைமுறைகளுக்கு முன் ஸைரஸ் என்ற பாரசீக சக்கரவர்த்தி ஆதன்ஸின் பல பாகங்களை நெருப்பிற்கு இரையாக்கினார். பாரசீகத்தை அலெக்ஜாந்தர் வெற்றி கொண்டபின் ஒருவிருந்திற் குடித்து விட்டு மயங்கிக் கிடக்கையில் அங்கிருந்த ஆதன்ஸ் மாது ஒருத்தி பாரசீக அரசருடைய அரண்மனையை அப்பொழுது அலெக்ஜாந்தர் கொளுத்திப் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். குடி மயக்கத்தில் இருந்த இவர் தமது நண்பர்கள் தடுத்தும் கேளாமல் அரண்மனைக்கு நெருப்பிட உத்தரவு கொடுத்துவிட்டார். அரண்மனை பாதி எரிந்த பின் இவர் குடிமயக்கம் தெளிந்து தம் அறியாமைக்கு வருந்தித் தீயை அணைத்துவிடுமாறு கட்டளையிட்டார்.

* * * * * * * * *



ஒருநாள் அலெக்ஜாந்தர் பாரசிகத்தில் வேட்டைக்குச் சென்றபோது ஒரு முள்ளம்பன்றி அவரை எதிர்த்துத் தாக்கியது. அருகில் இருந்த ஒரு சிறுவன் தன் மன்னரைக் காக்கும் நோக்கத்துடன் அதன் உடலை இரு துண்டங்களாக்கினான். தாம் கொல்ல இருந்த பன்றியை அவன் கொன்றது தம் கௌரவத்திற்குக் குறைவாக எண்ணிய அலெக்ஜாந்தர் அவனைச் சவுக்கால் அவன் அலறிச் சுருண்டு கீழேவிழும் வரையில் அடித்தார். அச்சிறுவனோடொத்த வயதினரெல்லாம் இந்த அநீதியை வெறுத்தது மல்லாமல் அலெக்ஜாந்தரைக் கொன்றுவிடவும் சதியாலோசனை செய்தனர். அவர்கள் செய்த சதியாலோசனை வெளியாகிவிட்டது. வெளிப்பட்டுவிடவே அலெக்ஜாந்தர் அதிற் சம்பந்தப்பட்ட சிறுவர்களை எல்லாம் ஒன்றுகூட்டிச் சித்திரவதை செய்தார். சிறுவர் என்று இவர் அவர்களை மன்னித்திருக்க வேண்டுமென்று எல்லோரும் அபிப்பிராயப் பட்டனர்.

* * * * * * * * *

ஸைரஸ் காலத்தில் கிரீஸ் தேசத்தின் ஒரு பகுதியில் வாழ்ந்து வந்த சில கிரேக்கப் பூசாரிகள் அபுலோ என்ற கிரேக்க தெய்வத்திற்கு உரிய பொருளை எல்லாம் ஸைரஸுக்குத் திருட்டுத்தனமாக ஒப்புவித்துவிட்டனர். இதை எவ்வாறோ அறிந்துகொண்டகிரேக்கர்கள் அப் பூசாரிகளைக் குடும்பங்களுடன் தம் நாட்டிலிருந்து துரத்திவிட்டார்கள். அன்று முதல் அப்பூசாரிகள் பாரசீக ராஜ்யத்தின் ஒரு பாகத்திற் குடியேறி வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வமிசத்தவர்கள் அலெக்ஜாந்தரை அன்புடன் வரவேற்றனர். அவர்கள் கிரீஸை விட்டுவந்து நூற்றைம்பது வருஷங்களாகியும் தேசாபிமானத்தை மறக்கவில்லை. அலெக்ஜாந்தர் அவர்களின் முன்னோர்கள் எப்பொழுதோ செய்த கொடுமைக்காக அப்பொ

மூனு தம்மை எதிர்கொண்டு உபசரிக்க வந்தவர்களை ஊருடன் நாசப்படுத்தித் தம்கோபத்தை ஆற்றிக் கொண்டார்.

* * *

பர்மீனியோவும் அவருடைய புத்திரரும் அலெக்ஜாந்தரின் சேனையில் முக்கியமானவர்கள். தந்தையார் கிழக்கு ஆசியாவில் கவர்னராக இருந்து வந்தார். அவர் குமாரர் அலெக்ஜாந்தரின் அந்தரங்கக் காரியதரிசிகளில் முதல்வராக இருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் சில கிரேக்க வீரர்கள் அலெக்ஜாந்தரைக் கொன்றுவிடச் சூழ்ச்சி செய்து வந்தார்கள். இதை அறிந்து கொண்ட ஒரு உத்தியோகஸ்தர் அலெக்ஜாந்தருக்குத் தெரிவிக்க எண்ணிச் செல்லும்போது வழியில் தாம் கண்ட பர்மீனியோவின் புதல்வரிடம் அதைச் சொல்லி வைத்தார். அவர் அதை அலெக்ஜாந்தரிடம் சொல்ல மறந்து விட்டார். அச் சூழ்ச்சியைப் பற்றித் தமக்கு நம்பிக்கை இன்றிச் சொல்லாமல் இருந்திருக்கவும் கூடும். உத்தியோகஸ்தர் இரண்டு நாள் பார்த்திருந்துவிட்டுத் தாமே அலெக்ஜாந்தரிடம் சென்று அதைக் கூறினார். இவ்விஷயத்தைப் பர்மீனியோவின் புதல்வரிடம் இரண்டு நாள் முன்னரே கூறியிருப்பதாகவும் அவர் சொன்னார். பர்மீனியோவின் குமாரர் அதைத் தமக்கு வெளியிடாதிருப்பதற்குக் காரணம் அவரும் அதிற் சம்பந்தப்பட்டிருந்ததே என்று அலெக்ஜாந்தர் அவர்மேற் குற்றம் சாட்டினார். நியாயம் விசாரிக்க அமைந்தவர்கள் எல்லாம் பர்மீனியோவையும் அவர் குமாரரையும் வெறுத்து வந்தவர்கள்; ஆதலால் புதல்வர் அநியாயமாகக் கொலை செய்யப் பட்டார். அவரைக் கொலை செய்வதற்கு முன் அதிகமாகத் துன்புறுத்திக், குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்தனர். அவருடன் சதியாலோசனையில் பர்மீனியோவும் சம்பந்தப்பட்டிருந்தார்



என்பதை அவரிடமிருந்துவரவழைக்க அலெக்ஜாந்தர் அவரை மிகவும் வருத்தினார். முதலில் அவர் ஒத்துக்கொள்ள வில்லை. பிறகு வலி பொறுக்க முடியாமல் தம் தந்தையாரும் அதிற் சம்பந்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார். அவர் துன்ப மிகுதியாற் கூறிய வார்த்தைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு எழுபத்தைந்து வயதுடையவரான பர்மீனியோவையும் அக்கிரமமாக அலெக்ஜாந்தர் கொல்வித்தார்.

* * *

ஒரு விருந்தில் சிலர் அலெக்ஜாந்தரைக் கடவுளென்று முகஸ்துதி செய்தனர். அவர்கள் தம் தயவைப் பெறுவதற்காகவே அங்ஙனம் செய்கிறார்கள் என்பதை மன்னர் உணரவில்லை. அவர்கள் சொல்வது உண்மையென்று இவரும் மகிழ்ந்தார். அலெக்ஜாந்தருடைய நண்பர் ஒருவர் அதை உணர்ந்து கொண்டு, "பிலிப்புக்கு இருந்த கௌரவமும் உங்களுக்கு இல்லை; நீர் தற்பெருமை பாராட்டிக் கொள்வதால் கௌரவம் வந்து விடுமென்று நினைக்கின்றீரா? உமக்கு இப்பொழுது இருக்கும் கௌரவமும் பர்மீனியோவாலும் பிலிப்பின் திறமைவாய்ந்த பிற உத்தியோகஸ்தர்களாலும் வந்ததாகும். மனிதன் மனிதனே. அவன் ஒரு நாளும் கடவுளுக்குச் சமமாக முடியாது" என்றுகூறித் தமக்கு அலெக்ஜாந்தரிடமிருந்த நட்பின் மிகுதியினால் அவரை நல் வழிப்படுத்த முயன்றார். குடி மயக்கத்திலிருந்த அரசருக்கு அச்சமயம் வந்த கோபத்திற்கு அளவில்லை. தம் கௌரவத்தை அந்த நண்பர் மிகவும் குறைத்து விட்டதாக எண்ணி அவரைக் கொல்வதற்கு அலெக்ஜாந்தர் எழுந்தார். அருகில் இருந்தவர்கள் எல்லோரும் எவ்வளவோ தடுத்துச் சொல்லியும் இவர் கேட்கவில்லை. "நான் இரண்டாவது டரியஸாக இருந்தால் அல்லவா இவன் கையில் அகப்பட்டு மானபங்கம் அடையவேண்டும்!" என்று

சொல்லிவிட்டுத் தம் கத்தியால் தமது நண்பரைக் குத்திக் கொன்றார். குடி மயக்கம் தீர்ந்ததும் தம் அருமை நண்பரைத் தாமே கொன்றமைக்கு வருந்தினார். அதன் காரணமாக மூன்று நாள் இவர் ஊண் உறக்க மின்றிப் பரிதபித்தார். இச் செயலுக்குப் பின் இவருடைய உத்தியோகஸ்தர்கள் எல்லாம் இவருடைய குணம் வர வர மாறிக்கொண்டே வருவதைக் கண்டு தமக்கு எச் சந்தர்ப்பத்தில் இவரால் மரணம் சம்பவிக்குமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

* * *

ஒரு நாள் அலெக்ஜாந்தர் ஒரு துறவியைக் கண்டார். அத் துறவியார் "வேண்டாமை யன்ன விழுச் செல்வம் ஈண் டில்லை" என்றபடி ஆசாபாசங்களை ஒழித்தவராக ஒரு சிறு குடிசையில் இருந்துகொண்டு காலந் தள்ளுகின்ற இயல்புடையவர். அவருடைய எளிய வாழ்க்கையைக் கண்ட அலெக்ஜாந்தர் சந்தோஷங்கொண்டு அவரைப் பார்த்து, "உமக்கு வேண்டிய ஒரு வரத்தை நீர் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளும், நான்தான் மகா வீரனாகிய அலெக்ஜாந்தர்" என்றார். அதற்கு அத் துறவியார் இவரைப் பார்த்து, "நீர் எவராகத்தான் இருந்தால் என்ன? உம்மால் இந்தச் சூரிய வெளிச்சத்தைக் கொடுக்க முடியாது. இதை மறைக்காமல் சற்று விலகி நில்லும்" என்று அலட்சியமாகப் பதில் கூறினார். இதனைக் கேட்ட அலெக்ஜாந்தர், "நான் அலெக்ஜாந்தராய்ப் பிறந்திராவிட்டால் இத் துறவியின் வாழ்க்கையைக் கொண்டிருப்பேன்" என்று அருகில் இருந்தவர்களிடம் கூறினாராம்.

* * *



அலெக்ஜாந்தர் ஜயித்த நாடுகளில் ஒன்றில் கொள்ளைக் கூட்டத்தாரின் உபத்திரவம் அதிகமாக இருந்து வந்தது. கிரேக்கர்கள் சிரமப்பட்டு அந்தக் கொள்ளைக் கூட்டத்தாரைப் பிடித்துவிட்டனர். பிறகு அவர்கள் கள்வர் தலைவனை அலெக்ஜாந்தர்முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். "நீ கொள்ளை அடித்துவருவது தகுமா?" என்று மன்னர் அவனைக் கேட்ட போது, அவன் தான் சிறியதொரு கூட்டத்தைக் கொண்டு சிலரைக் கொள்ளை யடிப்பதாகவும், அலெக்ஜாந்தர் பெருஞ் சேனைகளைக் கொண்டு பல ராஜ்யங்களைக் கொள்ளையடித்து வருவதாகவும் கூறினான். இதனைக் கேட்ட அலெக்ஜாந்தர் அவனுடைய தைரியத்திற்கு மெச்சி அவனை உயர்ந்த பதவியில் வைத்ததாகத் தெரிகிறது.

மேற் கூறியவாறு இவரைப் பற்றி இன்னும் எத்தனையோ கதைகள் வழங்குகின்றன. இவற்றுள் சில உண்மையானவை என்று நிச்சயிப்பதற்கில்லை. ஆனால் அவை 'கலப்பற்ற பொய்' என்று மறுக்கவும் முடியாது. அக்காலத்தில் அலெக்ஜாந்தரைப் பற்றி எழுதி வந்தவர்களிற் பலர் மாசிடோனியாவின் விரோதிகள் ஆதல்பற்றி அவர்கள் எழுதியவை சிறந்த பிரமாணம் ஆகமாட்டா என்று பலர் நினைக்கின்றனர். இஃது எப்படி இருந்தாலும், பிற்காலத்தில் அலெக்ஜாந்தர் அதிகார வெறியினாலும் குடி வெறியினாலும் மயங்கி மமதை கொண்டிருந்தார் என்பது தெரிகிறது. அம் மமதையின் காரணமாக இவர் அநேக தவறுகள் செய்திருக்கிறார்.

——:(o):——

# XII

## முடிவுரை

ஒருவர் சரித்திரத்தைப் படிப்பதனால் அவரிடமுள்ள குறை குணங்களை அறிந்துகொண்டு அவற்றுள் ஏற்றவற்றைக் கொண்டு ஏலாதனவற்றை மறந்து விட வேண்டியது வாசகர்களுடைய கடனாகும். அலெக்ஜாந்தர் சரித்திரத்திலிருந்து அவருடைய குறை குணங்கள் இன்னவை என்று இங்கே தொகுத்துக் கூறுவது மிகையாகாது.

இவர் மகா வீரர் என்ற பேர் படைத்தவர். கிரேக்க இதிகாசத்திற் சொல்லப்படுகிற சூரராகிய அகிலீஸின் சந்ததியாராக இவர் கூறப்படுவர். உண்மையில் பிலிப்பும், அவரை விட அலெக்ஜாந்தரும் சிறந்த வீரர்களே. அஞ்சாமையும் தன்னுயிரைத் துரும்பாகக் கருதலும், முன்னணியில் நின்று கைகலந்து போராடுதலும், அங்ஙனம் போராடுகையில் சமஅந்தஸ்தும் சமபலமுமுள்ளவர்களுடன் போராடுவதும், தர்ம யுத்தத்திலேயே நாட்ட முள்ளவனாக இருத்தலும் ஒரு வீரனுக்குரிய இலட்சணங்களாகும். உத்தம வீரர்களுக்கு உரிய இந்த இலட்சணங்கள் யாவும் அலெக்ஜாந்தரிடம் அமைந்திருந்தன.

இவர் சிறுவராக இருக்கும் பொழுதே பல அருஞ் செயல்களைச் செய்திருக்கிறார். வேட்டையாடுவதில் இவர் திறமையைக்கண்டு பெரிய வீரர்களும் வியந்திருக்கின்றனர். சாதாரணமான வீரர்கள் விரும்புகின்ற ஒலிம்பிக் விளையாட்டுக்களை இவர் இலட்சியம் செய்யவில்லை. பிலிப்பினால் அடக்க முடியாத குதிரையை இவர்



அடக்கி யாண்டதும், ஒருமுறை அதைப் பார்த்ததிலிருந்து அது போருக்கு ஏற்றதொன்றென்று கண்டு கொண்டதும் இவருடைய போர் சம்பந்தமான இயற்கை யறிவையும் ஆற்றலையும் காட்டுகின்றன.

இன்ன சந்தர்ப்பத்தில் இன்ன முறைகளைக் கையாண்டு இவ்விதம் போர் செய்யவேண்டு மென்பதை இவர் நன்கு உணர்ந்திருந்தார். இஸ்ஸு போருக்கு முன், கணவாயில் பாரசிகர்கள் அணிவகுத்து நின்ற அமைப்பைக் கண்டு அந் நிலையில் அவர்களைத் தம்மால் வெல்லமுடியாதென்பதை இவர் உணர்ந்துகொண்டு வேறு வழியாக நீண்ட தூரம் மலையைச் சுற்றிக்கொண்டு சென்றனர். அந்த அணிவகுப்புத் தமக்குச் சாதகமானது என்பது அன்று பாரசிகர்களுக்குத் தோன்றாமற் போயிற்று.

போர் முறைகளில் நல்ல பழக்கம் பெற்ற சிலர் அத் துறையில் பழக்கப்படாத பலரை எளிதில் வென்றுவிடலாம் என்பதை முதலில் உலகிற்குக் காட்டியவர் அலெக்ஜாந்தரே. திரேஸ் படையெடுப்பின் போது அவர்கள் ரதங்களை உருட்டிக் கிரேக்க வீரர்களை நசுக்கிவிடமுயன்றும், இவர் சமயத்துக்கேற்ற தந்திரத்தைக் கையாண்டது போற்றற்குரிய தொன்றாம். ஏறமுடியாத மலைகளிற் புதிய படிகளை அமைத்துக்கொண்டு செல்வதும், கடக்க முடியாத ஆறுகளைச் சிறு படவுகளின் உதவியைக் கொண்டும் கூடாரங்களின் தோலைக்கொண்டும் கடந்து செல்வதும், தாண்ட முடியாத காடுகளை எளிதில் தாண்டிப்போவதும் சாமானிய வீரர்களால் சாத்தியப்படுகின்ற செயல்களே அல்ல.

தாம் தலைவர் என்பதையும் தம்முயிரைப் பாதுகாத்துக்கொண்டு காரியங்களை நடத்துதல் தம் வீரர்களைப் பாதுகாத்தலாகு மென்பதையும் இவர் மறந்து வீராவேசங் கொண்டு பகைவரின் மதிலின்மேல் ஏறுதல் முதலிய வீரச் செயல்களைச் செய்தமை இவருடைய அசகாய சூரத்தன்மையைக் காட்டுகின்றது. "நான் வெற்றியைத் திருடும் கள்வனல்லன்" என்று இவர் கூறிய வீரமொழி அதர்ம யுத்தத்தில் இவருக்கு இருந்த வெறுப்பைக் காட்டுமன்றோ? "புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக் கவர்க்கே புலனாம்" என்றபடி சுத்த வீரர்கள் இன்னார்தாம் என்று அறிந்துகொள்ளுவதும் அவரைத் தக்கபடி நடத்துவதும் சுத்த வீராகிய இவருக்கு இயற்கையாக அமைந்த குணங்களாம்.

உலக சஞ்சாரத்தால் ஒருவருக்குப் புத்தி விசாலப் படுகிறது. குறுகிய நோக்கம் எல்லாம் ஒழிகின்றன. பல இடங்களில், ஆங்காங்கு வாழ்ந்து வந்தவர்களுடைய பழக்கவழக்கங்களையும் கண்டதனால் அலெக்ஜாந்தர் விரிந்தநோக்கமுடையவராய் விளங்கினார். தம் காலத்துக் கிரேக்கர்கள் தம்மவரல்லாத வேறு ஜாதியர்களை எல்லாம் 'மிலேச்சர்கள்' என்று இழிவு படுத்திவர, இவர் 'மிலேச்சர்' என்று கருதப்பட்டவர்களிடம் தாராளமாய்ப் பழகி வந்தார். பாரசீக ஸ்திரீகளைத் தாம் மணந்துகொண்டமையும், தம் வீரர்களுக்கு மணம்செய்வித்தமையும், பாரசிகர், எகிப்தியர், யூதர் ஆகிய இவர்களின் கோவில்களுக்குத் தாம் சென்று வந்தமையும் பிறவும் இவருக்கு எம்மதமும் சம்மதமே என்பதைத் தெரிவிக்கின்றன.

அலெக்ஜாந்தரின் வியாபாரஞானம் உலகத்திற்கே புதிய உணர்ச்சியை யளித்தது. அலெக்ஜாந்திரியாவின் அமைப்பைப் பற்றிய இவர் நினைப்பும், கடல் வழியாக வியாபாரம் நடத்த இவர் கொண்ட கனவும் பின்னர் உண்மையாயின.



பெண்கள் விஷயத்தில் இவர்மிகுந்த மரியாதையுள்ளவர். டரியஸின் குடும்பத்தார் விஷயத்தில் இவர் நடந்துகொண்ட விதம் போற்றத் தகுந்ததொன்றாம். கீழ் நாட்டுப் பெண்களின் அழகு எத்தகையவரையும் அடிமைப் படுத்துவதாயிருக்க, அந் நாட்டிலேயே சர்வாதிகாரியா யிருந்த இவர் தூய வாழ்வை மேற்கொண்டு ஒழுகி வந்தார்.

அலெக்ஜாந்தர் தம் மனதிற்குச் சரியென்று தோன்றிய காரியங்களையே செய்வார். செய்யும்வேலையையும் தீர முன்னதாக யோசித்துக் கொண்டே அக் காரியத்தில் இறங்குவார். யோசனை கூறுகின்றவர்கள் தம் தாயாராயினும், ஆசிரியராயினும், அரும் பெறல் நண்பராயினும் அவர்கள் யோசனைகள் தம் மனச் சான்றைப் பங்கப்படுத்துவதாயின் இவர் அவற்றை ஏற்றுக்கொள்ள மாட்டார். தாம் பாரசிகத்தில் இருந்த காலத்தில் ஒரு முறை இவருடைய தாயார் ஆண்டிபேடர்மேல் சில குறைகளைச் சுமத்தி அவற்றை இவருக்குத் தெரிவித்திருந்தார். அதைக் கண்ட அலெக்ஜாந்தர் பொறுப்பை வகிக்கும் தலைவர்களுக்கு இத்தகைய அபவாதங்கள் நேருவது இயற்கையே என்றெண்ணித் தம் அருமைத் தாயார் எழுதிய குறைகளைக் குறைகளாகக் கருதவில்லை. பல பரிசுகள் அனுப்பி அவரை வேறுவழியாக இவர் திருப்தி செய்தார். கிரேக்க ரல்லாத அந்நியர் மிலேச்சர் என்ற தம் ஆசிரியரின் கொள்கைக்கு விரோதமாகவே இவர் நடந்துகொண்டார். "டரியஸ் அனுப்பிய தூதர் கூறுவது போல் நடப்பது நலம்" என்று கூறிய பர்மீனியோவின் மொழியையும் இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விஷயங்களில் எல்

லாம் தம் மனச்சான்றையே பின்பற்றினர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் இவர் கனவிலும் கருதாத விஷயமாகும்.

இரட்டையாட்சியைப் புகுத்தி வரி வசூலையும் ராணுவத்தையும் ஒருவர் கையிலும், நியாய விசாரணை முதலிய பிறவற்றை மற்றொருவரிடத்திலும் ஒப்புவிக்கும் முறையைக்கண்டறிந்ததும், அந்நியமதத்தினரை ஆள நேருங் காலங்களில் அவர்களுடைய மதவிஷயங்களில் அதிகார வர்க்கத்தார் பிரவேசித்தல் அந்த ராஜ்யத்திற்கு அழிவைத்தேடுவதாகுமென்ற இரகசியத்தைக் கண்டுகொண்டதும் இவருக்கிருந்த ராஜதந்திரத்தைக் காட்டுகின்றன.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்பது இவருடைய அபிப்பிராயம். ஒரு துறவியாரைக் குறித்து இவர், "நான் அலெக்ஜாந்தராய்ப் பிறந்திராவிடில் இவரைப்போல் வாழ விரும்புவேன்" என்று சொல்லியதிலிருந்து ஒருவன் லௌகிக விஷயத்தில் உயர்ந்த பதவியைப் பெறவேண்டும், இல்லாவிட்டால் உலகை வெறுத்துத் துறவு பூண்டு, "நாமார்க்கும் குடியல்லோம்' என்று இறுமாந்திருக்க வேண்டுமென்பது இவருடைய கொள்கை என்று ஊகிக்க இடமேற்படுகின்றது.

நாட்டுமொழி, நாட்டுக் கலைகள் முதலிய விஷயங்களில் இவருக்கு அளவற்ற மதிப்பு இருந்து வந்தது. இவர் தீபிஸ் நகரை அழிக்கையில் ஒரு கிரேக்கப் புலவரின் இல்லத்துக்கு அழிவு தேடாமலிருந்ததும் கிரேக்கக் கலைகளுக்குத் தாயக



மான ஆதன்ஸைப் பல முறை மன்னித்ததையும் இண்டு நோக்கத் தகுந்தவையாம்.

இவ்வாறு பல விதங்களில் மேன்மைக் குணம் வாய்ந்த ஒருவர் பிற்காலத்தில் மதுபானத்தால் மனிதத் தன்மையின் வரம்பு கடந்து தீயகாரியங்களைச் செய்தார் என்றால் அம்மதுபானத்தின் தீமைதான் என்னே! இதனாலன்றோ மதுபானம் செய்வதைப் பெரியோர் பஞ்சமகா பாதகங்களுள் ஒன்றாக வைத்தார்! குடி மயக்கத்தில் அலெக்ஜாந்தர் எவ்வளவோ தீய காரியங்களைச் செய்துவிட்டபோதிலும் அவற்றிற்காக நாம் இவரை வெறுத்தல் தகாது. சந்திரனிற் களங்கமும், நெல்லில் உமியும், நீரில் நுரையும், ரோஜாவில் முள்ளும் இருக்கவில்லையா? அக் குறைகளின் பொருட்டு நாம் அவைகளை விலக்கிவிட வில்லையே? அதுபோல் அலெக்ஜாந்தரிடத்துள்ள சில குற்றங்களை நாம் பாராட்டாது இவரிடத்தில் இருந்த பல சிறந்த குணங்களையே நாம் மதித்தல் வேண்டும்.

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

முற்றிற்று.

---

PRINTED AT THE "ANANDA BODHINI" PRESS, MADRAS.